
ராணி முத்து
முத்துலட்சுமி ராகவன்
ரூ.6


காற்றோடு
தூதுவிட்டேன்
முத்துலட்சுமி

பெயரை உச்சரிக்கும்போதே வாய் இனித்தது. கஸ்தூரி தன் பட்டுப் பாவாடை விரிய- தாவணியை இழுத்துச் செருகியபடி தட்டாமாலை சுற்றினாள். காரணமின்றி தனக்குத்தானே சிரித்துக்கொண்டாள்.

அவளுக்குப் பின்னால் கோவில் குளக்கரை மரத்தில் ஒளிந்து, ஆசை ததும்ப கஸ்தூரியையே பார்த்துக்கொண்டிருந்த துரைசிங்கத்தின் கண்களில் ஆவல் தெரிந்தது.

"என்னடி கஸ்தூரி, வீட்டிற்கு வரும் உத்தேசம் இல்லையா?"

கோவிலுக்குள் இருந்து வந்த மல்லிகா கேட்டாள்.

"ம் ம்... வருகிறேன்... வருகிறேன். வராமல் எங்கே போகப் போகிறேன்...?" என்றாள் கஸ்தூரி.

"ஒரு வேளை உன் தாய் மாமன் வீட்டிற்கு இப்போதே போனாலும் போய்விடுவாயோ என்னவோ! யார் கண்டது? அவர்கள் வீட்டில் பெண் கேட்டாலும் கேட்டார்கள். இந்த ஆறு நாட்களாய் உன்னைப் பிடிக்கவே முடியவில்லையே. தரையில் கால் படாமல் நிற்கிறாயே?"

"போடி அதற்காக... முறையோடு என் அத்தானின் பெண்டாட்டியாக போவதற்கு முன்னாலேயே என் மாமன் வீட்டிற்குப் போவேனா? என்னை யாரென்று நினைத்தாய்! மகேஷ்வரனின் செல்ல மகளாக்கும்."

"அடேங்கப்பா. அப்பாவின் பெருமையைச் சொல்லும்போதே... பெரிய ராணி மங்கம்மாள் போல் ஒரு 'போஸ்' கொடுக்கிறாயே... போதும்டியம்மா வா... வீட்டிற்குப் போலாம்."

"அது... அந்தப் பயம் இருக்கட்டும்."

"வாடி சும்மா... உதார் விடாதே."

அவர்கள் இருவரும் போன பின்னால்- மரத்தின் மறைவில் இருந்து வெளிவந்த துரைசிங்கம்- கஸ்தூரியையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவன் முதுகில் ஒரு கரம் அடித்தது. திரும்பிப் பார்த்தான். சுப்பையா நின்றிருந்தான்.

"என்ன துரைசிங்கம். பார்வையெல்லாம் பலமாய் இருக்கு...?" விசமமாக அவன் வினவினான்.

"என்னத்தைப் பார்த்து என்னடா செய்ய! காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் அடித்துக்கொண்டு போகப் போகிறானே?"- கண்கள் சிவக்க கூறினான் துரை.

"அவன் ஒன்றும் நேற்று வந்தவன் இல்லையேப்பா. உடன்பிறப்பு தாய் மாமன் மகன்தானே!"

"நான் மட்டும் ஊரில் போகிறவனா? சொந்த அத்தை மகன்தானேப்பா? நேற்று வரைக்கும் எனக்குத்தான் கஸ்தூரி கிடைப்பான்னு காத்துக்கிட்டு கிடந்தேனே!"

"சும்மாவா காத்துக் கிடந்தாய்? அந்த வீட்டில் ஆறு பண்ணையாள் செய்யும் வேலைகளை நீ ஒருவனே செய்து முடித்து... உன் தாய் மாமனின் காலைக் கழுவிக்கொண்டு கிடந்தாயேப்பா... கடைசியில் உன் கதி இப்படியா ஆகணும்... ச்சு... ச்சு..."

இந்த சுப்பையா பரிதாபப்படுவது போல் எள்ளி நகையாடுவது புரிந்தும்- ஒன்றும் செய்ய முடியாத இயலாமையுடன் வானத்தை வெறித்தான் துரை.

"அட ஏன்ப்பா. நீ வேற வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிற!"

"உன்னைத்தானே சொல்றேன்."

சுப்பையா சிரித்தபடி நடையைக் கட்ட- துரை மனம் வெஞ்சினம் கொண்டது.

'கஸ்தூரி... கஸ்தூரி! மஞ்சளின் நிறத்தில் இருக்கும் என் மாமன் மகளே... உன்னை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுக்க விட மாட்டேன்டி. பார்க்கலாம்... ஜெயிக்கப் போவது நானா... இல்லை... அந்த சரவணனான்னு... பார்க்கிறேன்டி... ஒரு கை பார்க்கிறேன்.'

துரைசிங்கம் மனதில் கறுவிக்கொண்டே நடந்தான். வீட்டைச் சுற்றி இருந்த வேலிப்படலைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

மாட்டுக்கு வைக்கோல் போட்டுக்கொண்டிருந்த செவ்வந்தி "எங்கேடா போயிருந்தே. சாப்பிட ஆளைக் காணோம்னு ஊர் முழுக்க உன்னைத் தேடிக்கிட்டு இருந்தேன்" என்றாள்.

"ஆமாம். கோழி அடிச்சு வறுத்து வச்சிருக்க. நான் நேரத்துக்கு சாப்பிட வராமல் போயிட்டேன். போம்மா... போ. போய் ரசத்தை ஊற்றி, சோற்றைப் போடு. தொட்டுக்கொள்ள என்ன கொன்னு துவையல்தானே வச்சிருப்பே?"

"எப்படிடா கண்டுபிடிச்சே... என் ராசா?"

"அது ஒண்ணுதானே நம்ம வீட்டு அடுக்கு பானையில் இருக்கு. கொஞ்சமாய் எடுத்து வறுக்க வேண்டியது. அரைக்க வேண்டியது. இப்படியே நம்ம காலம் போகுது... ம்ஹூம்..."

"அதுக்கு ஏன்டா புதுசா இப்பப் போய் அலுத்துக்கிறே. ஊருக்கே தெரிஞ்ச கதைதானே! உன் அப்பன், இருந்த சொத்தை எல்லாம் குடிச்சே கரைச்சுட்டு ஒரு வழியா போய் சேர்ந்தாரு. என்னவோ... அண்ணன் மகராசன் புண்ணியத்துல என் வீட்டு அடுப்பு எரியுது. நீ இத்தனை குறை சொல்ற! வாடா வா... போக்கத்தவன் போறவன் குறை சொன்னானாம்."

செவ்வந்தி எரிச்சலுடன் வீட்டுக்குள் சென்று, தட்டை எடுத்து வைத்தாள். கை, கால், முகம் அலம்பிக்கொண்டு வந்த துரை- தட்டின் முன் அமர்ந்தான். சோற்றைப் போட்டு குழம்பை ஊற்றினாள் அவள்.

"அட... மெய்யாலுமே கோழிக் குழம்பு! எப்படிம்மா... நீ



அடிச்சிக் குழம்பு வச்சியா?"

... சொத்தும், கிட்ட வந்து பொண்ணு

அடிச்சிக் குழம்பு வச்சியா?"

"ஆமாம்... அதுக்குத்தான் நான் ஆளு. ஏன்டா நீ வேற வயிற்றெரிச்சலைக் கிளப்பற! எல்லாம் உன் மாமன் வீட்டில வைத்ததுதான். அண்ணன் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போனாரு. சாப்பிடு..."

துரை சாப்பிடுவதை நிறுத்திவிட்டு தாயை முறைத்தான். செவ்வந்தி கேள்வியாய் மகனைப் பார்த்தாள்.

"ஏன் இப்படி இருக்கிற...? என்னவோ உன் வீட்டுச் சொத்தை யாரோ கொள்ளையடிச்சிட்டுப் போன மாதிரி பார்க்கிற?"

"கொள்ளையடிச்சுட்டுத்தான் போயிட்டான். என் சொத்தை இன்னொருவன் கொள்ளை அடிச்சுட்டுத்தான் போயிட்டான்."

"ஏன்டா... உனக்கு ஏது சொத்து. அதை யாரு திருடிக்கிட்டுப் போனது? உன் புத்திகித்தி பிசகிப் போச்சா..?"

"அட போம்மா... நீ சரியான வெள்ளந்திப் பொம்பளை. உன் அண்ணன் வீட்டில் போடுற சோத்தையும், ஊத்துற குழம்பையும் பெரிசா பேசிக்கிட்டுத் திரியறே. இங்கே கவுரவமே கொள்ளை போயிருச்சு. அதைத் தெரியாம பினாத்திக்கிட்டு... ச்சே... நீயெல்லாம் புத்திசாலிப் பொம்பளையா...?"

"ஆமாடா... நான் புத்திக்கார பொம்பளையா இருந்திருந்தால் உன் அப்பன்கிட்ட எப்படி பொழப்பை நடத்தி இருப்பேன்? வெள்ளந்தியாய் இருக்கப் போய்த்தான் பொழைச்சேன். வந்துட்டான்... காலம் போன கடைசியில வெட்டி நியாயம் பேசிக்கிட்டு... தட்டைப் பார்த்து சாப்பிடுடா."

"நீ சாப்பாட்டிலேயே இரு..."

"வேறு எதில் இருக்கச் சொல்ற!"

"ஏம்மா... உன் அண்ணன் மக கஸ்தூரி எனக்கு உடந்தைப் பட்டவன்தானே! நான் தூக்கிக்கொண்டு போய், கழுத்துல தாலி கட்ட உரிமை உள்ளவன்தானே!"

"டேய்... நீ என்ன பெரிய பெரிய பேச்செல்லாம் பேசுற...? என் அண்ணனுக்குத் தெரிஞ்சா, உன் தோலை உரிச்சு உப்புக்கண்டம் போட்டுவார்."

"போடுவாரு... போடுவாரு. இளைச்சவன் தங்கச்சி மகனா இருந்தா, உப்புக் கண்டம் போடுவாரு. பணக்காரன் மச்சினன் மகனா இருந்தா, பொண்ணைக் கொடுத்து மாப்பிள்ளை ஆக்கிடுவாரு. ச்சே... பணத்தைக் கண்டால் பல்லைக் காட்டும் அண்ணன் கூடப் பிறந்துட்டு, உனக்கு ஏம்மா இத்தனை வாய் சவடாலு...?"

"டேய்... யாரைப் பார்த்து பணத்தைக் கண்டு மயங்குற ஆள்னு சொன்னே? என் அண்ணனைப் பார்த்தா? அவர் சொக்கத் தங்கம்டா.



இத்தனை நாள் தனனி தின்ன சொந்தம். கிட்ட வந்து பொண்ணு கேட்டப்ப... என் அண்ணன் உடனே சம்மதம் சொல்லிடலைடா. கஸ்தூரியின் சம்மதத்தைதான் கேட்டாரு. அதுவும் சும்மா கேட்கலை... உனக்கு யாரைக் கட்டிக்க விருப்பம்னு நேடியாவே கேட்டாரு. கஸ்தூரி அவளோட மாமன் மகனைத்தான் கட்டிக்குவேன்னு சொல்லிட்டா. அவரும் சரவணனுக்கு அவளைக் கொடுக்க சம்மதம் கொடுத்துட்டாரு. அவ மட்டும் உன்னைக் கட்டிக்கத்தான் விருப்பம்னு சொல்லி இருந்தா, கட்டாயம் உனக்குத்தான் கொடுத்திருப்பாரு. என் அண்ணனுக்கு பாரபட்சம் பார்க்கத் தெரியாதுடா. உன்மேல் ஆசைப்படறேன்னு கஸ்தூரி ஒரு வார்த்தை சொல்லட்டும். என் அண்ணன், கல்யாணத்தையே மாற்றி அமைப்பாருடா. ஏன்னா... அவருக்கு அவரோட மகள் விருப்பம்தான் முக்கியம்."

தனது தமையனைப் பேசிவிட்டான் என்ற துடிப்பில் மகனிடம் செவ்வந்தி கூறிய இவ்வார்த்தைகள், துரையின் மனதில் எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருந்தால் அவள் அப்படி பேசி இருப்பாளா என்ன...?

'சொல்ல வைக்கிறேன்மா... கஸ்தூரியை அவள் வாயால் என் மேல்தான் ஆசைன்னு சொல்ல வைக்கிறேன்.'

துரை முடிவு எடுத்துவிட்டான்.

## 2

விளாத்திகுளம் என்ற அந்த கிராமம், ஆற்றோரமாய் அமைந்திருக்கும் வளமையான இடம். பச்சைப் பசேல் என்ற வயல்வெளிகளும் அதில் நிறைந்திருக்கும் நீரும், நீந்திப் பறக்கும் நாரைகளுமாக... கண்ணைக் கவர்ந்து இழுக்கும்.

அந்த ஊரின் பெரிய பண்ணையாரின் மகன்தான் காயத்திரி. அவள் அண்ணன் கதிரேசன், தன் தங்கைக்கு நேரான ஜோடி அந்த ஜில்லாவிலேயே இல்லை என்று ஜில்லாவிட்டு ஜில்லா போய் மாப்பிள்ளை தேடிக்கொண்டிருக்க... காயத்திரியோ உள்ளூரிலேயே தனக்கு வரன் தேடினாள்.

தான் உண்டு, தன் வயல் உண்டு... வயதான பெற்றோரும், உடன் பிறந்த தங்கை செவ்வந்தியும் உண்டு என்று வாழ்ந்து வந்த மகேஸ்வரனை... 'எங்க பார்த்தாலும்... நீ மட்டும்தான் உண்டு' என்று காயத்திரியின் மேல் துதி பாட வைத்துவிட்டான் அவன்.

செய்தியை அறிந்த கதிரேசன் வெகுண்டார். தங்கள் வசதிக்கு



தங்கையின் மேல் ஆத்திரம் கொண்டார்.

தங்கையின் மேல் ஆத்திரம் கொண்டார்.

காயத்திரி தன் காதலில் உறுதியாக நின்றாள். வேறு வழியின்றி... வசதி இல்லாத மாப்பிள்ளையாக இருந்தாலும், இனம் ஒன்றுதானே என்ற நினைவுடன் அவளை மகேஷ்வரனுக்கே மணம் முடித்துக் கொடுத்தார் கதிரேசன்.

ஆனால்... தன் விருப்பப்படி வாழ்வைத் தேடிக்கொண்ட தங்கையை தள்ளியே வைத்தார்.

காயத்திரி அதைப் பற்றிக் கவலையே படவில்லை. தன் மனதிற்குப் பிடித்த மணாளனோடு மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தினாள்.

தன்னை நம்பி வந்த மனைவியின் மேல் உயிரையே வைத்திருந்த மகேஷ்வரன், தங்கை செவ்வந்திக்கு உள்ளூரிலேயே மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார்.

காயத்திரியின் அண்ணன் கதிரேசனுக்கு சரவணன் பிறந்த மறுமாதம்... மகேஷ்வரனின் தங்கை செவ்வந்திக்கு துரைசிங்கம் பிறந்தான்.

நீண்ட நாள்களாக குழந்தை இல்லாமல் இருந்த மகேஷ்வரன் - காயத்திரி தம்பதிக்கு ஆறு ஆண்டுகள் கழித்து பிறந்த அருமை மகள்தான் கஸ்தூரி!

அரைத்து விட்ட கஸ்தூரி மஞ்சளின் நிறத்தில் குழந்தை இருந்ததால், 'கஸ்தூரி' என்ற பெயரிட்டார்கள்... மகேஷ்வரனும், காயத்திரியும்.

கஸ்தூரி வளர... வளர... அவளது அழகும் சேர்ந்து செழித்தது. விளாத்திகுளத்திலேயே கஸ்தூரியின் அழகுக்கு நிகர் யாருமில்லை என்ற

வண்டியை ஓட்டுவார்.

அப்படிப்பட்ட தாய் மாமனின் தயவில் படித்த துரைசிங்கம், கல்லூரியின் பக்கம் தலை வைக்காமல் பின் தங்கிவிட்டான். அதை பெரிது பண்ணாமல் தனக்கு உதவியாக அவனை வைத்துக்கொண்டார் மகேஷ்வரன்.

தாய் மாமனின் நிழலில் அவன் உழைத்ததற்கு, மாமன் மேல் கொண்டிருக்கிற விசுவாசம்தான் காரணம் என்று மற்றவர்கள் நினைத்தனர். மாமன் மகள் மேல் இருக்கும் ஆசைதான் காரணம் என்பதை அடிமனதில் புதைத்து வைத்திருந்தான் அவன்.

ஆண்டுகள் ஓடின... சரவணன் முதுகலைப் பட்டதாரியாகி சொந்த ஊரில்... சொந்தமாய் கரும்பு ஆலை ஒன்றை நிறுவினான்.

கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த கஸ்தூரி, தன் சைக்கிளில்... அவனது கரும்பு மில்லைக் கடந்து தினமும் கல்லூரி சென்று வந்தாள்.

ஒரு நாள் அவளது சைக்கிள் டயர் காற்று இறங்கிப் போக- தள்ளிக்கொண்டே வந்தபோது... காரின் மீது சாய்ந்து நின்றிருந்த சரவணன் அவளை வம்புக்கு இழுத்தான்.

"என்ன... அத்தை மகளே, சைக்கிளை ஏன் உருட்டிக்கிட்டே போகிறாய்...?" என்று அவன் கேட்கவும்- கஸ்தூரிக்கு கோபமும், ரோசமும் சேர்ந்து பொத்துக்கொண்டு வந்தது.

"ம்ம்... வேண்டுதல்! அதுதான் உருட்டிக் கொண்டே போறேன்."

நீண்ட பின்னலை பின்னால் விசிறியபடி சொன்ன அவளின் தோற்றம் மனதில் பதிய, அவன் மயங்கிப் போனான்.

அவளுடன் இன்னும் பேச வேண்டுமென்ற ஆவல் கிளர்ந்து எழுந்து- மேலும் வாயைப் பிடுங்கினான்.

"வேண்டுதலா...? இப்படிக்கூட வேண்டிக் கொள்வார்களா?"

"உங்களைப் போன்ற ஆள்கள் இருக்கும் ஊரில் எப்படி வேண்டுமானாலும் வேண்டிக்கொள்வார்கள்."

"இதைப் பாருடா... என் அத்தை பெத்த அன்னக்கிளி... இப்படிப் போட்டுத் தாக்குவதை! தினமும் ஊமை போல் சைக்கிளில் நீ போய் வருவதைப் பார்த்துவிட்டு... பேசா மடந்தைன்னு நினைத்தேனே?"

"உங்கள் நினைப்பிற்கு நான் பொறுப்பில்லை."

"அது எப்படி...? நினைவைக் கொடுத்தவள் பொறுப்பில்லாமல் பேசலாமா... தூக்கம் கெடுவது எனக்குத்தானே!"

"என்னது...?"

கோபமாய் நிமிர்ந்தன கஸ்தூரியின் விழிகள். அவற்றில் அவன் கலக்க... தன்னுள் தெரிந்த ஏதோ ஒன்றில் அவள் கட்டுண்டு நின்றுவிட்டாள்.



"என்ன கஸ்தூரி... பேச்சையே காணோம்...?"

"நான் போகணும்."

"போ... நான் என்ன உன் கையைப் பிடிச்சா நிறுத்தி இருக்கிறேன்?"

"கையைப் பிடிப்பீங்களோ...?"

"கட்டாயம் பிடிப்பேன். இதற்கு உரிமையுள்ளவன்தானே? ஏன்... நான் கையைப் பிடித்தால் நீ உன் கையை இழுத்துக் கொள்வாயா?"

சரவணன் அருகில் வரவும், அவள் பயந்து போய் பின் வாங்கினாள். முகத்தில் மருட்சி தெரிந்தது.

பாவாடை- தாவணியில், பயந்த விழிகளோடும்... நீண்ட பின்னலோடும்... நெற்றியில் திலகத்தோடும்... அவள் பின்னால் நகர்ந்ததைக் கண்ட சரவணனின் கண்கள் மின்னின.

'அச்சம்... மடம்... நாணம்... பயிர்ப்பு...'

பெண்களுக்கே உரிய நான்கு வகை குணங்களை அன்று அவளிடம் கண்டான். மனதைப் பறிகொடுத்தான். அவளைத் தொட்டு இழுத்து பயம் போக்க அவனது நெஞ்சம் விழைந்தது. பயந்து விலகுபவளின் அருகே செல்ல அவனது மனம் தயங்கவும் செய்தது.

தன் டிரைவரை அழைக்க... அவன் ஓடோடி வந்தான்.

"கோபி, பக்கத்தில் சைக்கிள் ரிப்பேர் கடை இருக்கா?"

"இருக்கு முதலாளி."

"இந்த சைக்கிளைத் தூக்கி டிக்கியில் போட்டுக்கொண்டு போய், டயரை மாத்திட்டு வா."

டிரைவர், கஸ்தூரியின் சைக்கிளை தூக்க முயல... அவள் அவசரமாய் தடுத்தாள்.

"வேண்டாம்... வேண்டாம்..."

டிரைவர், சரவணனின் முகம் பார்க்க... அவன் கஸ்தூரியை அதட்டினான்.

"என்ன வேண்டாம்...?"

"என் சைக்கிளை நீங்கள் ஒன்றும் 'ரிப்பேர்' பண்ணித் தர வேண்டாம்."

"ஏன்...?"

"நீங்கள் சண்டைக்காரங்க."

அவள் குழந்தையாய் முறைக்க- சரவணனுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"யார் சண்டைக்காரங்க...? நானா..."

"நீங்க எல்லோரும்தான்."

"நாங்க எல்லோரும்னா..?"

"உங்க குடும்பம் மொத்தமும்."

"உன் அம்மா மட்டும் யார்? அவங்களும் எங்க குடும்பம்தானே?"

"அவங்க என் அம்மா..."

"அதுக்கு முன்னால் அவங்க யார்...?"

கேள்விகள் தொடர்ந்தன. பதிலும் கிடைத்தது.

அந்தப் பதில், கஸ்தூரியின் வாழ்வை வண்ணமயமாக்கி... அவளுக்கு வாழ்வின் மறுபக்கத்தை உணர்த்தியது.

## 3

கஸ்தூரி, சரவணனை முறைப்புடன் பார்க்க... அவனோ சிரிப்புடன் எதிட்டான். கஸ்தூரி பல்லைக் கடித்துக்கொண்டாள்.

"என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு...?"

"எனக்கு வேண்டியது இருக்கிறது... சிரிக்கிறேன். உனக்கு என்ன நஷ்டம்... கஷ்டம்?"

"என்னைப் பார்த்து ஏன் சிரிக்கணும்?"

"நான் கேட்டதற்கு நீ பதில் சொல்லாவிட்டால், சிரிக்காமல் என்ன செய்வார்களாம்?"

"ஆஹா... பெரிய விடை இல்லாத கேள்வியைக் கேட்டு விட்டீர்களாக்கும்... பீற்றிக் கொள்கிறீர்களே...! எனக்கு அம்மா ஆவதற்கு முன்னால், அவங்க என் அப்பாவின் மனைவி... போதுமா..."

"போதாதே... உன் அப்பாவிற்கு மனைவி ஆவதற்கு முன்னால் அவங்க யார்?"

"யார்...?"

கஸ்தூரி பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள். கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்தாலும்... அறியாமையுடன் விழிக்கும் அவளின் சுபாவம் அவனை ஈர்த்தது.

"என் அப்பாவின் தங்கை. என் தாத்தா, பாட்டிக்கு மகள்... என்னோட அத்தை..." —சரவணன் சொந்தத்துடன் கூறினான்.

கஸ்தூரியின் மனதில் ஏதோ ஓர் இனம் புரியாத உணர்வு தோன்றியது. மனம் படபடக்க அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நீ யாரோ இல்லை... என் சொந்த அத்தை மகள். நானும் உனக்கு வழிப்போக்கன் இல்லை. உன் மாமன் மகன். இப்போது சொந்தம் புரிகிறதா? கோபி... நீ சைக்கிளை எடுத்துக்கொண்டு போ."



கஸ்தூரியால் இப்போது தடுக்க முடியவில்லை. டிரைவர் சைக்கிளை எடுத்துப் போய் விட... அவள் தன் தலையில் சூடி இருந்த முல்லை மலர்களை பிய்த்து போட்ட வண்ணம்... தரையை பெருவிரல் நகத்தால் கீறிக்கொண்டு நின்றிருந்தாள்.

"மெல்ல...! பூமியில் இருந்து நீர் ஊற்று வந்துவிடப் போகிறது" என்றான் சரவணன், கேலியாக.

"நீர் ஊற்று வருமா? எப்படி...?"- விழிகளை விரித்தாள்.

"வெட்கப்படுகிறேன் பேர் வழின்னு... இப்படித் தரையை கால் பெருவிரலால் தோண்டினால் நீர் வராதா?"

அவனது கேலியில் முகம் சிவந்தவள், கால் மாற்றி நின்றாள்.

"நீ நின்றால் எனக்கு கால் வலிக்கிறது"- மென்மையாக கூறினான்.

"ம்... என் கால், நான் நிற்கிறேன்... உங்களுக்கு எப்படி கால் வலிக்குமாம்...? அந்தக் கதையெல்லாம் என்னிடம் வேண்டாம்."

"ஓஹோ... கதை பேசுவதைக் கண்டுபிடித்துவிடும் அளவிற்கு நீ கெட்டிக்காரியா? பயமாய் இருக்கிறதே..."

"பயப்படுகிற ஆளைப் பாரேன்."

"நீதான் பாரேன்."

சரவணன் அவளை விழுங்கிவிடுவதைப் போல் பார்க்க... கஸ்தூரின் முகம் அந்தி வானமாய் சிவந்துவிட்டது. அவன் ரசனையாய் அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தான். தூரத்தில் கார் வருவது தெரிந்தது.

"அப்பாடா... என் சைக்கிள் வந்துவிட்டது" - அவள் ஒரு விடுதலை உணர்வுடன் கூறுவதைப் புருவம் உயர்த்திப் பார்த்தான்.

"இதில் உனக்கு இவ்வளவு சந்தோஷமா?"

"ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்!"

"என்னை விட்டு ஓடுவதிலேயே குறியாய் இருக்கிறாயே!"

அவனது வார்த்தைகள் குற்றம் சாட்டும் தொனியில் இருப்பதை உணர்ந்தவள், திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் விழி பேசிய மொழி... அவள் அதுவரை அறியாதது. கஸ்தூரி தன் வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறப்பதைப் போல உணர்ந்தாள்.

அவளது மனதில் பாரதியின் கவி வரிகள் ஒலித்தன.

'இனம் விளங்கவில்லை - எவனோ
என் அகம் தொட்டுவிட்டான்...'

சரவணன், கஸ்தூரியின் மனக் கதவைத் தட்டித் திறந்துவிட்டான். திறந்த அவளது மனக் கதவு அவனுக்காக வழிவிட... ஓர் அரசனை

போல் அவளில் பிரவேசித்து குடியேறிவிட்டான்.

அதன் பின்னால், கஸ்தூரி கல்லூரிக்குச் செல்லும் பாதையில் தினமும் காத்திருப்பதை வழக்கமாகக் கொண்டான். அவளும்... அவனுடன் பேசும் நேரம் தவிர... மற்ற நேரங்களில் உயிரைப் பிரியும் உணர்வைப் பெற்றாள்.

கஸ்தூரியின் கல்லூரிப் படிப்பு முடிந்தது. அவளது வரவுக்காக காத்திருந்த சரவணன், சந்திப்பு தளத்தை கோவிலுக்கு மாற்றிக்கொண்டான். தினமும் மாலை வேளைகளில் தவறாமல் கோவிலுக்கு வருவதை கஸ்தூரி தன் வழக்கமாக்கினாள்.

ஒரு நாள் மாலையில் அவளது முகம் வாடி இருப்பதைக் கண்ட சரவணன் காரணத்தைக் கேட்டான்.

"அத்தான், நீங்கள் பணக்காரர்."

"அது என்ன பெரிய குற்றமா?"

"நாங்கள் உங்கள் அளவுக்கு வசதியான குடும்பமில்லை."

"ச்சு... இப்போது நீ என்னதான் சொல்ல வருகிறாய்?"

"என் தோழி சொல்கிறாள்..."

"என்ன சொன்னாள்?"

"நீங்கள் சும்மாதான் என்னுடன் பொழுது போக்குக்காக பழகுகிறீர்களாம்."

"அப்புறம்?"

"கல்யாணம் என்று வரும்போது நீங்கள் உங்களுடைய மாமன்களின் மகள்களைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வீர்களாம்."

கஸ்தூரியின் விழிகள் நீரில் மிதக்க... சரவணன் செய்வதறியாது திகைத்தான்.

அவன் தாய் ராஜலட்சுமி பிறந்தது பெரிய செல்வந்தரின் குடும்பத்தில். அவனுடைய தாய் மாமன்கள் மூன்று பேரும்... சென்னை, பெங்களூர், கோயம்புத்தூர் என்று மூன்று ஊர்களிலும் பெயர் பெற்ற கோடீஸ்வரர்கள். அவர்களின் பெண்கள் வெளிநாட்டுப் படிப்பும், அளவற்ற செல்வமும் கொண்டவர்கள்.

'எத்தனை கோடி பணம் இருந்தாலும், மனதுக்கு பிடித்தவளுடன்தானே வாழ முடியும்? அது ஏன் இந்த மக்கு கஸ்தூரியின் மரமண்டையில் ஏறவில்லை...?'- என்று அயாசமாக இருந்தது சரவணனுக்கு.

"நீ வீட்டுக்குப் போ..."

அவன் விருட்டென்று கோவில் மண்டபத்தைவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

[illegible] தகப்பன் அறியாமல் தலையணையை [illegible]



விடிந்து... சூரியன் கிழக்கே உதயமாகி தன் பவனியை ஆரம்பித்தும்விட்டான்.

கடமைக்காக எழுந்து, குளித்து முடித்து வந்தவளை, வாசலில் கேட்ட பேச்சுக் குரல்கள் இழுத்தன.

'யாராக இருக்கும்...?'- என்ற அசிரத்தையாய் எட்டிப் பார்த்தவளின் விழிகள் விரிந்தன.

வீட்டு வாசலில் நான்கு கார்கள் வரிசையாய் நிற்க... கதிரேசனும், ராஜலட்சுமியும் சீர்வரிசைகளுடன் கஸ்தூரியைப் பெண் கேட்டு வந்திருந்தனர்.

'வராத விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள்...' என்ற நினைவில் அவசரமாய் வந்தவர்களை வரவேற்று உபசரித்தார் மகேஷ்வரன்.

கூடத்தை நிரப்பி இருந்த சீர்வரிசைகளைப் பெருமையுடன் பார்த்த காயத்திரி... கணவனை ஏறிட்டாள். அவள் விழிகளில் மன்றாடல் தெரிந்தது. தன் மனைவி- பிறந்த வீட்டினருடன் உறவாட விரும்புவதை அறிந்து கொண்டாலும், மகேஷ்வரன் நிதானமாகவே செயல்பட்டார்.

"காப்பி, பலகாரம் சாப்பிடுங்க மச்சான்."

"அதுக்கென்ன மாப்பிள்ளை... வந்த வேலை முடியட்டும். இருந்து விருந்தே சாப்பிட்டுட்டுப் போகிறோம்."

"மச்சான் என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குப் புரியலையே... கொஞ்சம் விளக்கமாச் சொன்னால் தேவலை."

"அன்றைக்கு நீங்க, எங்க வீட்டுப் பெண்ணை, உங்க வீட்டுக்கு கொண்டு வந்திட்டீங்க. இன்றைக்கு நாங்க, உங்க வீட்டுப் பெண்ணை எங்க வீட்டுக்கு கொண்டு போக வந்திருக்கிறோம்."

"அப்படின்னா...?"

"உங்கள் மகள் கஸ்தூரியை... என் மகன் சரவணனுக்கு கல்யாணம் பண்ணிக் குடுங்கன்னு பெண் கேட்டு வந்திருக்கிறோம் மாப்பிள்ளை."

காயத்திரி பரவசப்பட்டுப் போனாள். ஆவலாய் மகேஷ்வரனின் முகத்தை அவள் பார்க்க... அவர் நிதானமாய் பேசினார்.

"ரொம்ப சந்தோசம் மச்சான். என் மகளைப் பெண் கேட்டு நீங்க வந்ததில் எனக்குப் பெருமைதான். ஆனால்..."

மகேஷ்வரன் 'ஆனால்' போட்டதில் கதிரேசன் கேள்விக்குறியோடு தங்கையின் முகத்தை ஏறிட்டார். காயத்திரி கைகளைப் பிசைந்தபடி கணவனின் முகம் பார்த்தாள்.

அண்ணன்... தங்கை இருவரின் பார்வை பரிமாற்றத்தைக் கண்டு காணாதவர் போல் மகேஷ்வரன் எழுந்து நின்றார்.

"மச்சான்... கல்யாண விசயத்தில் ஆம்பளையாக இருந்தாலும், பொம்பளையாக இருந்தாலும் அவங்கவங்க சம்மதத்தைக் கேட்டிரணும். ஏன்னா... வாழ்க்கையில கல்யாணம் ஒரு தடவை வந்து போகிற விஷயம்."

# 4

ஒரு நொடி... காயத்திரியின் திருமணத்தின்போது... பொட்டப்புள்ளக்கி தானாக மாப்பிள்ளை தேடிக்க எவ்வளவு தைரியம் இருக்கணும்... வீட்டில் சொல்கிற மாப்பிள்ளைக்கு கண்ணை மூடிக்கிட்டு கழுத்தை நீட்டுவதை விட்டுவிட்டு காதலாம்... கத்தரிக்காயாம்...' என்று தான் பேசியதற்கு பதில் சொல்லுகிறாரோ என்று கதிரேசன் நினைத்தார்.

அது இல்லை என்பது மகேஷ்வரன் அடுத்துப் பேசிய பேச்சுகளில் இருந்து அவருக்குத் தெளிவானது.

"மச்சான்! ராஜா... ராணிக் காலத்திலே சுயம்வரம்னு ஒண்ணை வச்சாங்க. அப்போ பார்த்திங்கன்னா மாப்பிள்ளைகள்தான் வரிசையாக உட்கார்ந்திருப்பாங்க. பொண்ணு, கையில் மாலையோடு மண்டபத்தை சுற்றி வந்து பார்க்கும். பிடித்த மாப்பிள்ளையின் கழுத்தில் மாலையைப் போடும். காலம் வளர... வளர... நாமும் வளர்ந்திருக்கணும். ஆனால், மத்த விசயங்களில் வளர்ந்த நாம... நம்ம வீட்டுப் பொண்ணுக விசயத்தில் கீழேதானே போய்கிட்டே இருக்கோம்.

பொண்ணு பார்க்க மாப்பிள்ளை வந்து பிடிச்சிருக்குன்னு சொல்லிவிட்டால், பெண்ணோட சம்மதத்தைக் கூடக் கேட்காமல் தள்ளி விடத்தானே பார்க்கிறோம். ஒற்றைப் பொண்ணைப் பெற்றவன் நான். அது மனசு கஷ்டப்படக் கூடாதுன்னு நினைக்கிறவன். அது விருப்பம் எனக்கு முக்கியம். ஒரு நிமிஷம் பொறுங்க... என் பொண்ணுகிட்ட சம்மதம் கேட்டுவிட்டு வருகிறேன். அவளுக்கு சம்மதம்னா, எனக்கும் இந்தக் கல்யாணத்தில் பரிபூரண சம்மதம்."

'இவ்வளவுதானா...?' என்ற மன நிம்மதியுடன் சிரித்தார் கதிரேசன்.

மகளின் காதல் விவகாரம் அறிந்துதானே அவர் பெண் கேட்டு வந்திருக்கிறார். எனவே...

"அதுக்கென்ன மாப்பிள்ளை, கஸ்தூரிகிட்டே கேட்டுட்டு வாங்க. நாங்க அதுவரைக்கும் தங்கச்சிகிட்டே பேசிக்கிட்டு இருக்கோம்"



என்றார்.

மகேஷ்வரன் உள்ளே சென்றார். கஸ்தூரி அவசரமாய் தலையை உள்ளே இழுத்துக்கொண்டாள்.

"கஸ்தூரி... உன் தாய் மாமன் வீட்டில் உன்னைப் பெண் கேட்டு வந்திருக்காங்க. உனக்குச் சம்மதமாம்மா...?" என்று கனிவுடன் மகளிடம் கேட்டார் மகேஷ்வரன்.

"எனக்கு சம்மதம்தான்ப்பா..."

மகளின் விருப்பத்தை அறிந்த உடனே... சபைக்கு வந்து கதிரேசன் நீட்டிய நிச்சயதாம்பூலத் தட்டைப் பெற்றுக்கொண்டு திருமணத்தை உறுதி செய்துவிட்டார் மகேஷ்வரன்.

வயலுக்குச் சென்றிருந்த துரைசிங்கம் வழக்கம் போல் மதிய நேரத்தில் மாமன் வீட்டிற்கு வந்தபோது, தடபுடலாக விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

புரியாமல் திகைத்து விழித்தவனிடம், சாப்பிட்டுவிட்டு வந்த உறவுக்காரர் ஒருவர் சொன்னார்.

"என்னப்பா... துரை. என்னவோ சந்தையில் வித்த ஆடு போக, இருக்கிற சொச்ச ஆடு மாதிரி இந்த முழி முழிச்சிக்கிட்டு நிற்கிற... நீ சாப்பிடப் போகலையா...?"

"ம்ம்ம்... போகணும் பெரியப்பா. ஆனால், மாமன் வீட்டில் விருந்து போடறாங்களே, என் விசேஷமாம்?"

"எம்ப்பா... உன் மாமன் வீட்டு விருந்தைப் பத்தி ஒண்ணும் தெரியாதவன் போல என்கிட்ட கேள்விக் கேட்கிற... விளையாடுகிறாயா?"

'ஆமாம்ய்யா... குடுகுடு கிழவன் உன் கூட நான் சடுகுடு விளையாடணும்னு வந்திருக்கேன். ஆளைப் பாரு. கேள்வியைப் பாரு'- மனதிற்குள் கடுகடுத்துக் கொண்டே துரைசிங்கம் வெளியே வெள்ளையாய் ஒரு சிரிப்பை சிரித்தான்.

"காலையிலேயே கழனிக்குப் போய்விட்டேன் பெரியப்பா. அதான் விசயம் தெரியலை."

"என்னது, விசயம் தெரியாதா? உன் ஆத்தா செவ்வந்தி அங்கே விழுந்து விழுந்து விருந்து பரிமாறிக்கிட்டு இருக்கா. நீ இப்ப வந்து இப்படிக் கேட்கிற?"

"ஏன் பெரியப்பா?"

"உன்னோட மாமன் மகள் கஸ்தூரிக்கு கதிரேசன் மகன் சரவணன் பரிசம் போட்டுட்டான்ப்பா... அதுக்குத்தான் விருந்து நடக்குது."

கை கழுவிவிட்ட பெரியவர், தோளில் கிடந்த துண்டில் கையைத் துடைத்துக் கொண்டே அங்கிருந்து நகர- துரைசிங்கத்தின் முன்னால் உலகமே சுழன்றது.

'சேரவே சேராது என்று நினைத்த சொந்தங்கள் சேர்ந்துவிட்டதா. கஸ்தூரி அவனுக்கு இல்லையா...? அவளை சரவணன் தட்டிக்கொண்டு போய்விட்டானா...'

மனம் கொதிக்க நின்றிருந்தவனிடம் யாரோ...

"சாப்பிடப் போப்பா..." என்று கூற...

'இந்த விருந்தில் நான் கலந்து கொள்வதா...?' என்று வெதும்பியவன் வேகமாய் கண்மாய்கரைப் பக்கம் சென்றுவிட்டான்.

அவனுடைய கூட்டாளிகள் செய்தியைக் கேள்விப்பட்டதும் அவனை இன்னும் கொஞ்சம் உசுப்பேற்றிவிட்டனர்.

"நல்ல ஆளு வந்து வாய்ச்சா போ. கண்ணுக்கு முன்னால வளர்ந்த பொண்ணை... கைக்குள்ள போட்டுக்க முடியாமல் கோட்டை விட்டுவிட்டு வந்து நிற்கிறாயே...?"

"எம்ப்பா துரைசிங்கம்... நீ பெயரிலதான் வெறும் சிங்கம் போல இருக்கு. நிசத்துல வெறும் சுண்டெலிதானா...? ஐயய்யோ..."

"என் முறைப் பொண்ணையெல்லாம் எவனாவது கட்டிக்க நினைச்சான்னு வையிப்பா... ஒரே வெட்டுத்தான். முறைப் பெண்ணைப் போய் தோத்துட்டு வந்து நிற்கிறயே...?"

"அட நீ வேற ஏம்ப்பா... அவன் வயித்தெரிச்சலைக் கிளப்பற. தட்டிக்கிட்டுப் போய் இருக்கிறவனும், கட்டிக்கிற முறையில் இருக்கிறவன்தானே!"

"அதுவும் சரிதான். அவனோ படிச்சவன். நீ படிப்பில கம்பி... அவன் முதலாளி. நீ உன் மாமனை அண்டிப் பிழைக்கிறவன்."

"ஏய்யா... இவன் அவனோட மாமனை அண்டிப் பிழைச்சாலும் நாளைக்கு மாமன் மகளைக் கட்டிக்கிட்டா... மாமனோட சொத்து பூராவும் இவனுக்குத்தானே...?"

"இதுக்கு இப்படிச் சொல்ற. அவன் ஆள் வெள்ளையும்... சொள்ளையுமா... அழகாய்... அம்சமாய் இருக்கான். நம்ம ஆளு ரவுடி போல இல்ல இருக்கான்."

"ரவுடி... ரவுடி போலத்தானே இருப்பான்? ஹா... ஹா..."

"ஆமாம்... இவன் பெரிய ரவுடி... கட்டிக்கப் போற பெண்ணை தோத்துப்புட்டு வந்து நிற்கறவனெல்லாம் ஒரு ரவுடியாடா?"

இரவு வெகு நேரம் கழித்து... ஊர் அடங்கிய பின்னால் வீட்டுக்கு வந்த மகனுக்காக கதவைத் திறந்த செவ்வந்தி...

"எங்கேடா தம்பி போயிட்ட? இன்னைக்கு உன் மாமன் வீட்டில ஊருக்கே விருந்து ஆக்கிக் போட்டாங்க. நீ ஒரு வாய் சாப்பிடாமல் போயிட்டயே...?" என்று ஆற்றாமையுடன் கேட்டாள்.



"இப்படி சாப்பாட்டுக்கே ஆலாய் பறந்து, பொண்ணை விட்டுக் கொடுத்துவிட்டு வந்து நில்லு..."- துரைசிங்கம் சீறினான்.

"என்னடா மகனே... இப்படியொரு குண்டைத் தூக்கி என் தலையில போடுற...?" செவ்வந்தி விதிர்த்தாள்.

"எதுக்கும்மா இப்படி அலறுற? அப்படி நான் என்ன கேட்கக் கூடாததைக் கேட்டுட்டேன்? என் மாமன் மகளைக் கட்டிக்க எனக்கு உரிமை இல்லையா?"- வாதாடினான்.

'தகுதி இருக்கணும்...' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டாள் செவ்வந்தி.

நினைப்பதை எல்லாம் எல்லோராலும்... எல்லா நேரங்களிலும் வெளியில் சொல்ல முடிவதில்லை! இது செவ்வந்திக்கு அப்படிப்பட்ட நேரம்.

கணவனை இழந்து, அண்ணனின் நிழலில் மகனை வளர்த்துக் கொண்டிருப்பவளுக்கு மகனின் மனம் கோண பேச மனமில்லை. எனவே, பேச்சின் போக்கை வேறு திசையில் திருப்பி விட்டுவிட்டாள்.

"என் அண்ணனுக்கு மகள் மேல் உயிர். கஸ்தூரி எதைச் சொன்னாலும் அவர் கேட்பார். கஸ்தூரி, சரவணன் வேணும்னு கேட்டுவிட்டாள். கல்யாணத்திற்கு தேதியைக் குறிச்சிருக்கார். நாளைக்கே நீதான் வேணும்னு அவ சொல்லிவிட்டால்... கல்யாணத்தை உன்னுடன் நடத்தி வைத்துவிடுவார். என்ன செய்யலாம்... கஸ்தூரி, சரவணன் மேலல்ல ஆசைப்பட்டுவிட்டாள்."

மகனைச் சமாதானம் செய்ய செவ்வந்தி அடிக்கடி இந்த வார்த்தைகளை பிரயோகிக்க ஆரம்பித்தாள்.

அதன்விளைவு எதிர்மறையாய் அமைந்து போகும் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை... பாவம்...!

'சொல்ல வைக்கிறேன்... இந்த துரைசிங்கம்தான் வேணும்னு கஸ்தூரியின் வாயால் நான் சொல்ல வைக்கிறேன்...'

மனதில் சூது வைத்துக்கொண்டான்.

அது தெரியாமல் செவ்வந்தி... மகன் அமைதியாகிவிட்டான் என்று நினைத்து அமைதியாகிவிட்டாள்.

மகனின் மனதில் இருக்கும் வஞ்சகமும்... சூதும் அவளுக்கு தெரியாமலே போய்விட்டது.

தெரிந்திருந்தால் வேரிலேயே அதைப் பிடுங்கி எறிந்திருப்பாள். தாயால் பண்படுத்த முடியாத மகனின் போக்கு எங்குமில்லை.

செவ்வந்தி அறியாமல் துரைசிங்கம் தன் வேலைகளைத் தொடங்கினான். வயல்வெளியை விட்டுவிட்டு... தாய் மாமனின் வீட்டிலேயே அதிக நேரத்தைச் செலவிடவும் ஆரம்பித்தான்.

# 5

**த**ன்னைச் சுற்றி ஓர் மனிதச் சிலந்தி... சதி வலை பின் கொண்டிருப்பதை அறியாதவளாய் கஸ்தூரி கனவுகளில் சரித்தாள்.

தனது காதல் ஜெயித்துவிட்டதை அவளால் இன்னும் நம்ப முடியவில்லை. சரவணன் தனக்கு மட்டும்தான் என் உண்மைதானா என்ற பிரமிப்பில் இருந்தாள். சரவணனை கோவி சந்தித்தபோதெல்லாம் அதைக் கேட்கவும் செய்தாள்.

"ஏன் அத்தான்... நிஜமாகவே உங்களுக்கு என் பிடித்திருக்கிறதா?"

"ஏண்டி... நிச்சயம் பண்ணி பரிசமே போட்டுவிட்டேன்... இன் ஏன் இப்படிக் கேள்விகளைக் கேட்டு என் உயிரை எடுக்கிறாய்!"

"இல்லை அத்தான்..."

"என்ன இல்லை?"

"அது வந்து..."

"அதுதான் வந்துவிட்டாயே... இன்னும் என்ன?"

"நீங்கள் ரொம்பவும் அழகு அத்தான்..."

சரவணனின் முகம் ஒளிர்ந்தது. தான் விரும்பும் பெண்ணின் வாய 'அழகு' என்று சொல்லக் கேட்பதும்... அவளால் ரசிக்கப்படுவ எவ்வளவு பெரிய இன்பம் என்பதை அனுபவபூர்வமா உணர்ந்தான்.

சொன்னவளோ பேரழகி. ஆனால், அதை உணராத அறியாமை கொண்டிருந்தாள். அந்த அறியாமை அவளது அழகை அதிகப்படுத் மூக்கைப் பிடித்துத் திருகினான்.

"சரி... நான் அழகு... அதற்கு என்ன...?"

"இல்லை... இல்லை... உங்களுக்கு நான் பொருத்தம்தானா...?"

சரவணன் இமைக்காமல் முறைத்தான். அவள் பயத்துடன் விழிகளை தாழ்த்திக்கொண்டாள். தன் பின்னலில் சேட்டை பண்ணியபடி லேசாய் இமைகளை உயர்த்தி அவனைப் பார்ப்பதும்... அவன் முறைப்பைக் கண்டதும் உடல் நடுங்க... இமை மூடிக்கொள்வது இருந்தவளைப் பார்த்து சிரிப்பு வந்துவிட்டது.

'இவளை என்ன செய்தால் தேவலாம்...?'

"ம்ம்... குடும்பம் நடத்த... அடச் சீ... கிட்ட வா..."

அவன் அதட்டவும் அவசரமாய் அருகே வந்தாள்.

சரவணன் தன் பையிலிருந்த செல்போனின் திரையை காண்பித்தான்.

"இதைப் பாரு..."

"இது செல்போன்... இது எனக்குத் தெரியாதா?"

"அறிவாளி... செல்போனில் உன் முகம் தெரிகிறது... அதைப் பாரு..."

கஸ்தூரி பார்த்தாள். அவளது முகம் அழகாகத் தெரிந்தது.

"பார்த்துவிட்டாயா?"

"ம்..."

"எவ்வளவு அழகாக இருக்கிறாய் பார்த்தாயா?"

"ம்... ம்..."

"எனக்கு பொருத்தம்தான் என்பதை புரிந்துகொள்கிறாயா?"

"ம்..."

"வாயைத் திறந்து சொல்லுடி."

"ம்... ம்..."

கஸ்தூரி அன்று சமாதானமானது போல் போய்விட்டாள். மறுநாள் மாலையில் புதிதாய் ஒரு கேள்வியோடு அவனுக்காக காத்திருந்தாள். சரவணன் வந்ததும் தன் கையில் இருந்த விபூதி, குங்குமத்தை அவளது நெற்றியில் பூசி விட்டாள். அவன் வேண்டுமென்றே கண்ணை கசக்கவும், அவள் பதறிப் போய் அருகே தன் வாயைக் குவித்து ஊதிவிட்டாள்.

அவளது அக்கறையைக் கண்டு அவன் மனம் மிருதுவானது. தனக்கு வெகு அருகில் இருந்த அவளது கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டான்.

கஸ்தூரியின் உடல் சிலிர்த்தது. வெட்கத்துடன் விலகிக்கொண்டாள். அவள் ஏதோ கேட்க நினைப்பது அவனுக்குப் புரிந்தது.

"என்னடி?"

"என்ன...?"– அவள் விழிகளை விரித்தாள்.

"என்னவோ உன் அழகிய மண்டைக்குள் குடைந்து கொண்டிருக்கிறதே... அது என்னன்னு கேட்டேன்."

"சொன்னால் நீங்கள் கோபித்துக்கொள்வீர்கள்..."

"சொல்லாவிட்டாலும் நான் கோபித்துக்கொள்ளத்தான் செய்வேன்."

"அத்தான்..."



"சொல்லு..."

"அந்தப் பெண்கள் மூன்று பேரும் வெளிநாட்டில் டித்தவர்களாமே...?"

அவள் யாரைச் சொல்கிறாள் என்றுகூட சரவணனுக்குத் தரியவில்லை. புரியாமல் விழித்தான்.

"யாரைச் சொல்கிறாய்...?"

"வேறு யாரைச் சொல்வேன்...? உங்கள் மாமன்களின் கள்களைத்தான் சொல்கிறேன். அவங்க மூன்று பேரும் ரொம்ப கரீகமாமே?"

சரவணனுக்கு சிரிப்பதா... இல்லை அழுவதா என்றே தரியவில்லை!

'இவளுக்கு ஏன்தான் புத்தி இப்படிப் போகிறதோ...?' என்று ாந்தபடி அவளைப் பார்த்தான்.

"ஏண்டி... உன் லொள்ளுக்கு ஒரு அளவே இல்லையா...?"

"இதுக்குத்தான் நான் சொல்லமாட்டேன்னு சொன்னேன். ங்கள்தான் என்னை வற்புறுத்தி சொல்ல வச்சீங்க... இப்ப ட்டுறீங்க..."

கஸ்தூரி அழகாக சிணுங்கினாள். சரவணனுக்கு அவளைத் னுடன் சேர்த்து அணைத்துக்கொள்ள வேண்டும் போல் ருந்தது.

ஆனால்... 'இவள் ஏன் இப்படி இருக்கிறாள்...?'– யோசனையுடன் வளைப் பார்த்தான்.

'இதை வளரவிடுவது ஆபத்தாயிற்றே... வாழ்நாள் முழுவதும் ள் இப்படியே பிதற்றிக் கொண்டிருந்தால் எப்படி நிம்மதியாய் ழ முடியும்? இவளுக்கு இதுவே பிழைப்பாக போய்விட்டதே.'

அவளை சரி பண்ணுவதற்கு என்ன செய்வது என்ற யோசனையில் ன் இருக்க... மாமன் மகள்களைப் பற்றிய நினைவுகளுக்குக் ய்விட்டான் என்று அவள் தப்புக் கணக்கு போட்டாள்.

"பார்த்தீங்களா... இதுக்குத்தான் நான் அன்றைக்கே ான்னேன்."

"என்னத்தைடி சொன்னாய்?"

"நீங்க உங்களுக்குப் பொருத்தமான பெண்ணைக் கல்யாணம்

அவள் என்ன சொல்வாள் என்பதுதான் அவனுக்கு மனப் ஆகிவிட்டதே...

சரவணன் கவலையில் ஆழ்ந்தான். கஸ்தூரிக்கு தன் காதல் வேண்டுமே என்று! தன் மனதில் கஸ்தூரியைத் தவிர வேறு யாரு இடமில்லை என்பதை அவளுக்கு எப்படித் தெரிய வைப்பது தவிப்பு.

'அதிர்ச்சி வைத்தியம் செய்தால்தான் இவள் சரிப்படுவாள்...' முடிவிற்கு வந்தான்.

இந்த முடிவால் ஏற்படப் போகும் பின் விளைவுகளைப் அறியாமல், தன் காதலியைப் பார்த்து மர்மமாகப் புன்னகைத்

'இவர் ஏன் இப்படிச் சிரிக்கிறார்?'– கஸ்தூரியின் விழி தெரிந்த அச்சத்தைக் கண்டு தனக்குள் மேலும் நகைத்துக்கொண் சரவணன்.

'முள்ளை... முள்ளால்தான் எடுக்க வேண்டும்...'

இளம் வயதிலேயே தனியாகத் தொழில் ஆரம்பித்து வெற்றி சரவணன்... தனக்குள் மனக் கணக்கைப் போட்டான். அவன் கல பிசகி, அவனது காதல் கேள்விக்குறியாகப் போவதை அறிய கஸ்தூரியிடம் வம்பு வளர்க்க ஆரம்பித்தான்.

"இப்ப என்னங்கிற... நீ? உனக்கு என் மாமன் மகள்களைப் ப தெரிய வேண்டும். அவ்வளவுதானே...?"

"நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை..."

"நீ எப்படிச் சொன்னாலும், நான் சொல்றதைக் கேட் கொள்."

"என்னவாம்...?"

"என் பெரிய மாமா ஆதிமூலத்தின் மகள் ஆஷா ஒரு சவர்ணக்கிளி. அவள் அழகென்ன... அறிவென்ன... ஸ்டைலென் அட... அட..."

"எதற்கு இத்தனை அடா போடுகிறீர்கள்...?"

"அது ஆச்சரியத்தால் வந்த 'அட' டீ..."

"ஆச்சரியத்தால் வந்ததா...?"

"ஆமாம்... அப்படியே பாலைக் குழைத்து உடம்பெல் அப்பினாற் போல ஒரு நிறம்."

சரவணன் இதைச் சொன்னதும், கஸ்தூரி அவசரமாய் தனது செ மஞ்சள் நிறத்தைப் பார்த்துக்கொண்டாள். அதைக் கவனிக்காத போல் உதட்டில் நமட்டுச் சிரிப்போடு, மேலும் கதை பி

... காதலாய்

சால்லிக்கொண்டிருந்தவனும், தூண் மறைவில் மறைவாய் நின்று வர்கள் பேசுவதைக் கவனிக்கும் துரைசிங்கத்தைக் கவனிக்கவே ல்லை.

## 6

துரைசிங்கத்திற்கு அவன் சிக்கலாக்க வேண்டிய காதல் தைக்கு ஒரு நூல் முனை கிடைத்துவிட்டது. தலையை ஆட்டிக் காண்டு அதை ரசித்தபடி கண்களில் வன்மம் மின்ன மனதிற்குள் ரிக்கொண்டான்.

'சரவணா... நீ வகையாய் சிக்கிக் கொண்டாயடா... இதை வைத்தே ன் திருவிளையாடலை ஆரம்பிக்கிறேன் பார்.'

துரைசிங்கம், கஸ்தூரியோடு வளர்ந்தவன். அவளது குணாதிசயம் வனுக்கு அத்துபடி.

கஸ்தூரி பால் மனம் கொண்டவள். யார் எதைச் சொன்னாலும் பிவிடுவாள். தான் மிகவும் நேசிக்கும் நபரோ... பொருளோ... க்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்று நினைப்பாள். வயதில் அவள் ஆசையாய் கேட்டு, ஒரு பொம்மையை தேடிப் த்து மகேஷ்வரன் வாங்கி வந்து கொடுத்தார். அதை இரவும்... லும் தன் வசம் அவள் வைத்திருந்ததையும், அதன் மேல் மற்றவர் ர்வை படவிடாமல் பாதுகாத்ததையும் நினைத்துப் பார்த்த ரைசிங்கத்தின் இதழ்களில் சிரிப்பு அரும்பியது.

சரவணன் பிரிந்து வளர்ந்தவன். விடுதிகளில் தங்கி படிப்பை த்தவன். வளர்ந்த பருவப் பெண்ணாகத்தான் அவன் கஸ்தூரியைப் ர்த்தான்.

அவளது குண... இயல்பைப் பற்றி அதிகம் அறியவில்லை. ிந்திருந்தால் ஒருவேளை... இந்த விபரீத விளையாட்டில் ஈடுபடாமல் ந்திருப்பானோ... என்னவோ...?

சரவணன் கண்களில் காதல் மின்ன... கஸ்தூரியின் மஞ்சள் மேனியை சையுடன் பார்த்தபடி மேலும் தொடர்ந்தான்.

"அடுத்து என் இரண்டாவது மாமா சேசகோபாலனின் மகள் ா. அவள் சிறுவயதில் டெல்லியில் படித்தாள். பெரியவளானதும் ளிநாட்டில் படிக்க பறந்துவிட்டாள். அவள் நடந்து வந்தால்... இந்தியாவில் உள்ள அத்தனை 'மாடல்' அழகிகளும் ாய்விடுவார்கள். அப்படி ஒரு நளினம்."

கரும்பு மில்லில் ஆயிரம் வேலைகள் இருக்கிறது. அத்தனையை போட்டுவிட்டு, உன் முகத்தைப் பார்க்க ஓடி வந்திருக்கிறேன்... நீயா எதையாவது பினாத்திக் கொண்டிருக்கிறாய். அப்புறம் எனக்கு கோ வருமா... வராதா?"

மண்டபத்தின் மேல் படியில் அவன் அமர்ந்திருக்க... ஒரு தள்ளி... அடுத்த படியில் அமர்ந்திருந்த கஸ்தூரி ஆறுதல் தேடி அ மடியில் தலை சாய்ந்தாள்.

சரவணன் உருகிவிட்டான். 'எல்லாமும் எனக்கு நீ ஒரு மட்டும்தான்...' என்பதை செயலில் உணர்த்திய கஸ்தூரியின் க கண்டு அவன் மனம் தளும்பியது.

அவளது தலைமுடியைக் கோதியவாறு மெல்லிய குரலில் அவ மட்டும் கேட்கும்படி பாடினான்.

"என் மனது ஒன்றுதான்...
உன் மீது ஞாபகம்!
வான் நிலவு ஒன்றுதான்...
வான் மீது சத்தியம்!"

கஸ்தூரி இப்போது வாய் விட்டு அழுதாள். அவனது கால் இறுக்கமாக சரணாகதி வேண்டுபவள் போல பற்றிக்கொண்டா

அன்று வீடு திரும்பும்போது... அவளது நெஞ்சில் தைரிய சரவணனுக்கு அவள் மேல் இருந்த காதல் பற்றிய நம்பிக்கையும் மு விட்டிருந்தன.

துரைசிங்கம் இந்தத் திருப்பத்தை எதிர்பார்க்கவில்லை. சரவ மேலும்... மேலும்.. கஸ்தூரியின் பொறாமைத் தீயை தூண்டிவிடுவ நேரம் பார்த்து அதில் பெட்ரோல் ஊற்றி, சரவணனின் காதலை அ தீயில் போட்டு பொசுக்கிவிடலாம் என்று– தான் போட்ட க தவறிவிடுமோ என்று பயந்துவிட்டான்.

மாமன் வீட்டில் கஸ்தூரியின் முகத்தில் பழைய ம மீண்டிருந்ததைக் கண்ட துரைசிங்கம், அவளுக்குள் முளை விட்டி நம்பிக்கையை கண்டுகொண்டான்.

'ஊஹூம்... இந்த இணக்கம் இவர்களுக்குள் வரக்கூடாதே... முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டுமே...'

துரைசிங்கம் தருணம் பார்த்துக் காத்திருந்தான். கஸ்தூ மனதைக் கலைப்பதற்கான நேரமும் அவனுக்கு கூடிய விரை வாய்த்துவிட்டது.

கோடை விடுமுறையை... அத்தையின் கிராமத்தில் கழிக்க வி சரவணனின் மூன்று மாமன்களின் பெண்களும் விளாத்திகுள வருகை தந்தனர்.

# 7

துரைசிங்கம், மகேஷ்வரனின் வீட்டிற்குச் சென்றபோது... காயத்திரி ட்டுச் சேலையும், நகையுமாக வெளியே கிளம்பிக்கொண்டிருந்தாள்.

துரைசிங்கத்தைக் கண்டதும், "வாய்யா... மருமகனே..." என்று ய்நிறைய வரவேற்றாள்.

'இதுக்கொண்ணும் குறைச்சல் இல்லை. என்னை வெறும் வாய் தல் போட்டு கவிழ்த்துவிட்டு... உன் அண்ணன் மகளை என் தாய் மனுக்கு மருமகளாக்கிய வித்தாரக் கள்ளி நீதானே...!'

மனதிற்குள் மாமன் மனைவியை மரியாதை குறைவாய் அர்ச்சனை ய்தவன்... வெளியே வெகு மரியாதையாய் புன்னகைத்து வத்தான்.

"மாமா எங்கே அத்தை?"

"அவரு எங்கே வீடு தங்குறாரு...? விடியற்காலமே வயலு பக்கம் யிட்டாரில்ல..."

கொண்டையைச் சுற்றி மல்லிகைச் சரத்தை வைத்துக்கொண்டே சியவளை பவ்வியமாய் பார்த்த துரைசிங்கம்,

"அத்தை எங்கேயோ வெளியே கிளம்பிட்டாப்புல இருக்கே...?" என்று ட்டான்.

'எங்கே போகிறாய்...?' என்ற அமங்கலமாய் நாத்தனார் மகன் கவில்லையாம்... அந்த சாதுர்யத்தில் மகிழ்ந்து போய் சிரித்தாள் யத்திரி.

"கிழக்குத் தெரு ஆவுடை வீட்டில் சடங்கு மருமகனே. ஒரு எட்டு ய் தலையைக் காட்டிவிட்டு வந்துடுறேன்."

"வீடு திறந்து கிடக்கே அத்தை...?"

வீட்டிற்குள் கண்களால் துழாவியபடி கேட்டவனைக் கவனிக்காமல், னுக்குத் தேவையான பதிலைச் சொல்லிவிட்டாள் காயத்திரி.

"கஸ்தூரி வீட்டிலதான் இருக்கா."

'எனக்கு அதுதானே வேண்டும்... என் அயித்தை...'

துரைசிங்கம், காயத்திரியின் தலைமறையும் வரை காத்திருந்துவிட்டு... டுக்குள் சென்றான்.

கஸ்தூரி ஊஞ்சலில் அமர்ந்து... ஊஞ்சலாடிக்கொண்டே ஒரு தகத்தைப் படித்தாள்.

ஒரு நிமிடம்... அவள் ஊஞ்சலாடும் அழகில் மயங்கி அதை ரசித்தவாறு றான் துரைசிங்கம். மறுகணம் அவன் நிமிர்ந்து பார்த்துவிடவும்

னகைத்தான்.

அவனது வழக்கமான 'டிரேட் மார்க்' வெள்ளைச் சிரிப்பு. பதி
ன்மையிலேயே மனதில் சூது வாது ஏதுமில்லாத கள்ளமில்
முறுவலைப் பூத்தான் கஸ்தூரி.

'என்னமாய் சிரிக்கிறான்...!'– முல்லைப் பூக்களை நெருக்கிக் கட்டி
ான்ற அவனது பல் வரிசையில் மயங்கிப் போனவன்...

'என்ன செய்கிறாய் கஸ்தூரி...?' என்று அர்த்தமில்லா
ட்டான்.

"கதை படிச்சுக்கிட்டு இருக்கேன் மாமா..."– இயல்பாய் பதில்
ரைசிங்கத்தின் மனம் கடுத்தது.

'அவன் மட்டும் உனக்கு அத்தான். நான் மாமாவா? அவனும் நா
ரே வயதுதானேடி...'

"என்ன மாமா... என்னவோ போல் ஆகிட்டீங்க..."– கஸ்
கேட்டாள்.

"நீ பேசிய லட்சணத்தால்தான் இப்படி ஆகிவிட்டேன்...' 
சொல்ல முடியாத துரைசிங்கம்

"ஒன்றுமில்லை கஸ்தூரி..." என்று பொய்யுரைத்தான்.

"ஒன்றும் இல்லாததற்கெல்லாம் உம்முன்னு இருப்பாங்களா?

'களுக்'கென்று சிரித்தாள்.

"ம்... என் மனதில் இருப்பதைத்தான் உன்னிடம் எப்
சொல்லவென்று தெரியவில்லையே...!" என தன்னையும் அறிய
கூறிவிட்டான்.

"என்னது...?"–புரியாமல் நோக்கினாள்.

"இல்லை... ஊருக்குள் பேசிக்கொள்வதை நான் எப்படி உன்
சொல்வது என்று தெரியவில்லை..."

"ஊருக்குள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"அது நிறைய பேசிக் கொள்கிறார்கள்... அது எதற்கு உனக்கு

"இல்லை... சொல்லுங்கள்... எனக்கு என்னவென்று தெ
வண்டும்."

"ச்சு... வேண்டாம் கஸ்தூரி..."

"ஏன் மாமா?"

"நான் கேள்விப்பட்டதை உன்னிடம் சொன்னால், நீ 
ாய்விடுவாய்... உன் கண்பம் பார்க்க எனக்கு சகிக்காது..."

துரைசிங்கத்தின் இறுகின முகம்... அவன் எதையோ சொல்லப்
ாகிறான் என்பதை அவளுக்கு உணர்த்தியது.

"என்ன மாமா...?"

"வேண்டாம் கஸ்தூரி... என்னை விட்டுடு..."

என்னமோ அவன் போகத் துடிப்பதைப் போலவும்... அவனது
கையைப் பிடித்து அவள் நிறுத்தி வைத்திருப்பதைப் போலவும்
ாவனையாய் பேசினான்.

"மாமா... உங்களுக்கு என் மேல் பாசம் இருக்கிறதா...
ல்லையா...?"

'பாசமா...? காதல் இருக்கிறதடி என் மாமன் மகளே...' என்று
நாக்கைக் கடித்துக்கொண்டான்.

"உன் மேல் நான் என் உயிரையே வைத்திருக்கிறேனே கஸ்தூரி..."

"அப்படியானால் என்ன நடந்தது என்பதைச் சொல்லுங்கள்..."

"சொல்கிறேன்... ஆனால், நீ ரொம்பவும் தைரியமாக இதை
திர்கொள்ள வேண்டும்..."

"சரி..."

"அழக்கூடாது... கலங்கக் கூடாது..."

"சரி..."

"வாழ்வே பறிபோய் விட்டதுன்னு மூலையில் உட்கார்ந்துவிடக்
கூடாது..."

"சரி..."

இது ஒரு வகையான– மனோ தத்துவ ரீதியான தாக்குதல். ஒருவரைத்
தைரியம் இழக்கச் செய்யும் வழி முறைகளில் இதுவும் ஒன்று. அதை
கடைபிடித்தான் துரைசிங்கம்.

'என்னவோ... ஏதோ...' என்று முதலில் கஸ்தூரியைப் பயப்படு
த்தினான் பின்னர்... சொல்ல வந்ததை கனமான குரலில்... அவளது
மனதில் அழுந்தப் பதியும் வண்ணம் சொன்னான்.

"சரவணனின் மாமா பெண்கள் வந்திருக்கிறார்கள் கஸ்தூரி..."

"என்னது...?"

அவர்கள் எங்கோ தொலைதூரத்தில் இருக்கும்போதே... இங்கே
நிம்மதி இழந்து தவித்தான் கஸ்தூரி. இன்று அவர்கள் இங்கேயே
வந்துவிட்டார்கள் என்பதை அறிந்ததும் பதறிப் போய்விட்டாள்.

"ஆமாம் கஸ்தூரி... ஊரே சிரிப்பாய் சிரிக்குது..."

"ஆமாம் கஸ்தூரி... உன் மாமன் பெண்டாட்டி சப
போட்டிருக்காம்."

"என்னன்னு...?"

"என் ஒரே மகனுக்கு கல்யாணம் கட்டினால், என் அண்ண
மகள்களில் ஒருத்தியைத்தான் கட்டுவேன்னுதான்..."

"நிஜமாவா...?"

"ம்... அதனால்தான்... மூன்று அண்ணன் மகள்களையும் மொத்த
தன் வீட்டுக்கு வரவழைச்சு... மகன் கூடப் பழகவிடுதாம்..."

"இப்படிக்கூட செய்வாங்களா மாமா...?"

"இது பொல்லாத உலகம் கஸ்தூரி... எப்படியும் செய்வார்கள்.

"அத்தான் மனம் மாறுவாரா?

"மாறாமலா நேரத்துக்கு ஒருத்தியுடன் ஊரைச் சுற்றுகிறான்?"

"எனக்குப் பயமாய் இருக்கிறதே மாமா..."

"எனக்கும்தான் பயமாய் இருக்கிறது கஸ்தூரி. இந்த 'ஷ
"எனக்கும்தான் பயமாய் இருக்கிறது கஸ்தூரி. இந்த 'ஷ... மோகினியாம். சரவ
இருக்கிறானே... அவன் ஒரு மயக்கும் மோகினியாம். சரவ
இருக்கிறானே... இவனுக்கு அவன் மேல் அதிக மயக்கப
மற்றவர்களைவிட அவள் பின்னால்தான் அதிகம் சுற்றுகிறா
அவளைப் பார்த்து அவன் விடுகிற ஜொள்ளில், இந்த ஊ
கழுவி விட்டுவிடலாமாம். இப்போது அவர்கள் இரண்டு பே
கோவிலுக்குள் போய் சாமி கும்பிட்டுவிட்டு... கொஞ்சி பேசிக்கொ
உட்கார்ந்திருக்கிறார்கள்."

'கோவிலிலா...?'– கஸ்தூரியின் மனம் தவித்தது.

'அது அவனுக்கும்... அவளுக்குமான உரிமைப்பட்ட சந்தி
இடமல்லவா? அங்கே போய் அவன்... அவளை விட்டுவிட்டு
ஒருத்தியுடன் நேசம் பாராட்டிப் பேசுவதா...?'

கஸ்தூரி பொறுக்க முடியாமல் பொங்கி எழுந்தாள். வேக
வெளியே கிளம்பினாள். துரைசிங்கம் அவளைத் தடுத்து நிறுத்துகி
பேர்வழியென்று... முதல் முறையாக அவளது கையைப் பி
நிறுத்தினான். அவளது மனமெல்லாம் சரவணனிடத்தில் இரு
துரைசிங்கத்தின் தொடுகையை உணராதவளாய் அவள் நின்றா

"விடுங்க மாமா... நான் போகணும்..."

"எங்கே?"

"கோவிலுக்கு..."

"அங்கே போனால் இன்னும் வீணாய் உன் மனம் கஷ்டப்ப
வேண்டாம்..."

"ம்... ஆமாம் மாமா. இப்போது நான் என்ன செய்றது?"

"கட்டாயம் போய்த்தான் ஆக வேண்டுமா?"

"என் வாழ்க்கையே... நான் இப்போது அங்கு போவதில்தான்
இருக்கிறது."

'உன் வாழ்வு மட்டுமில்லையடி மாமன் மகளே. என் வாழ்வும் நீ
இப்போது அங்கு போவதில்தான் அடங்கி இருக்கிறது...'– துரைசிங்கம்
மனதிற்குள் வெற்றி முரசு கொட்டிக்கொண்டான்.

"ஒன்று செய்யலாமா?"

"என்ன மாமா?"

"என் சைக்கிளில் உன்னைக் கூட்டிட்டுப் போகவா?"

"உங்கள் சைக்கிளில் 'கேரியர்' இல்லையே!"

"உங்கள் சைக்கிளில் 'கேரியர்' இல்லையே!" ... கேரியரையே
கஸ்தூரி தயங்கினாள். துரைசிங்கம் அவளுக்காகத்தானே கேரியரையே
கழட்டி வீட்டில் போட்டான்!

"அதனால் என்னம்மா... நீ முன் பக்கம் உட்கார்ந்துகொள்."

"வேண்டாம் மாமா... நான் வேண்டுமானால் உங்கள் சைக்கிளை
எடுத்துக்கொண்டு கோவிலுக்கு போய்விட்டு வரவா?"

கஸ்தூரி கல்லூரிப் படிப்பை முடித்ததும், கேட்பார் இல்லாமல்
மூலையில் கிடந்த அவளது சைக்கிளை, பண்ணையாளின்
மகளின் படிப்புக்கு உதவியாக இருக்கட்டும் என்று மகேஷ்வரன்
கொடுத்துவிட்டார்.

சைக்கிள் ஓட்டுவதில் அனுபவம் உள்ள கஸ்தூரி இப்படிக் கேட்டதும்
துரைசிங்கம் எரிச்சல் அடைந்தான்.

'காரியத்தையே கெடுக்கிறானே...!'

"இல்லை கஸ்தூரி, இந்த நிலைமையில் உன்னைத் தனியாக நான்
அனுப்ப மாட்டேன். என் மாமனுக்கு யார் பதில் சொல்வது?"

கஸ்தூரி செய்வது அறியாதவளாய் திகைத்து நின்றாள்.

"சரி விடு... அவர்கள் எப்படிப் போனால் உனக்கென்ன...? நீ கதவைப்
பூட்டிக்கிட்டு, பத்திரமாய் வீட்டில் இரு. நான் கிளம்புகிறேன்..."

அவன் கிளம்பப் போவது போல் பாவனை செய்ய... கஸ்தூரி
பதற்றத்துடன் அருகே வந்தாள்.

"இருங்க மாமா... நானும் வர்றேன்."

கதவைக்கூடப் பூட்டாமல், ஆவேசம் கொண்டவளாய் துரைசிங்கத்தின்
சைக்கிளில் முன் பக்கம் கம்பியில் ஏறி அமர்ந்து கொண்டாள். அவளை
அப்படியே கட்டி அணைத்து... அவளது பின் கழுத்தில் முகம் உரா...
சைக்கிளை மிதித்த துரைசிங்கம் சொர்க்கத்துக்கே போய்விட்டான்.

'இதுக்குத்தான்டி... நான் இத்தனை நாளும் காத்திருந்தேன்.'

கிறங்கிக் போனவனாய் கோவில் வாசலில் அவன் சைக்கிளைகர்ந்துவிட்ட 'ஷாஷா'வை நிம்மதியுடன் பார்த்தான் அவன்.
றுத்த... அங்கே நின்று கொண்டிருந்த சரவணனின் பள்ளித் தோழ
ாரதி ஆச்சரியமாக பார்த்தான்.

'இந்தப் பொறுக்கி... இப்படி உரசிக் கொண்டு வர... கஸ்தூ
இவனுடன் சைக்கிளில் உட்கார்ந்து வருகிறாளே...?'

அவனைக் கவனியாதவளாய் கஸ்தூரி... துள்ளிக் குதித்து இறங்
புள்ளி மான் போல் கோவிலுக்குள் ஓடிவிட்டாள்.

வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்த சாரதியை முறைத்தா
துரைசிங்கம்.

"ஏண்டா... இப்படிப் பார்க்கிற? அது என் முறைப் பெண். நினைப்பு
இருக்கட்டும். இப்படிப் பார்க்கிற வேலையெல்லாம் வைத்துக்கொள்ளா
கன்னத்தை பெயர்த்துவிடுவேன்... ஜாக்கிரதை."

"சரவணன் கட்டிக்கப் போகிற பெண்... உன் கூட சைக்களில் வந்
இறங்குதேன்னு பார்த்தால் நீ வில்லங்கமாய் பேசுகிறாயே. வேண்டா
துரைசிங்கம்... என்னிடம் வீணாய் மோதாதே. நீ என் கன்னத்தை
பெயர்க்க... நான் கன்னத்தைக் காட்டிக்கொண்டு நிற்பேனாக்கும்?"

"என்னது... அவள் சரவணன் கட்டிக்கப் போற பெண்ணா? கண்
காண வேணாம்னு நான் சொன்னேன்னு அவன்கிட்டப் போ
சொல்லு."

"எனக்கு இதுதான் வேலையா? ஏன்... அவன் கோவிலுக்குள்ளேதா
இருக்கிறான்... நீயே போய் சொல்ல வேண்டியதுதானே?"

"சொல்வேண்டா... அவன்கிட்ட கட்டாயம் சொல்வேன்."

"சொல்லு... சொல்லு..."

'இந்த முரடன் என்ன வினையை இழுக்கக் காத்திருக்கிறானோ
என்ற கவலையுடன் சாரதி... கோவில் வாசலில் தள்ளிப் போய் நின்
யோசிக்க ஆரம்பித்தான்.

வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் கஸ்தூரி, கோவிலுக்கு
நுழைந்தாள். அவர்கள் வழக்கமாக உட்காரும் மண்டபத்தில் சரவண
ஒரு தூண் மேல் சாய்ந்து உட்கார்ந்திருக்க... சற்றுத் தள்ளி நின்றிரு
நவநாகரீகமான அழகிய பெண் ஒருத்தி தன் செல்போன் காமிரா
கோவிலில் இருந்த சிற்பங்களைப் படம் பிடித்துக்கொண்டிருந்தா
மூச்சு வாங்க வந்த கஸ்தூரியை வியப்புடன் பார்த்த
சரவணன்.

"ஏன் இப்படி ஓடி வருகிறாய்...?"

"ம்... உங்கள் வண்டவாளத்தை எல்லாம் தண்டவாளத்
...க்கான்."

'நல்லவேளை... இவன் இப்படி தரக்குறைவாய் பேசுவதை அவள்
கேட்கவில்லை... பிழைத்தேன்...'

"என்னடி... பேச்செல்லாம் ஒரு தினுசாய் இருக்கிறது?"

"நீங்கள்தான் தினுசு... தினுசாய் பார்க்க அலைகிறீர்களே...?"

'இதை விடவும் கேவலமாய் பேசிவிட முடியுமா?'

சரவணனின் முகம் கோபத்தில் சிவந்துவிட்டது.

"மரியாதையாய் பேசு... யாரிடம் பேசுகிறாய் என்ற நினைவு
இருக்கிறதா.... இல்லையா...?"

"ஏன் இல்லை... மாட்சிமைப் பொருந்திய ராஜலட்சுமியின்
மகனிடம்தானே பேசிக்கொண்டு இருக்கிறேன்."

"அடிக் கழுதை... என் அம்மாவையா பெயர் சொல்கிறாய்..."

சரவணன் ஆத்திரத்துடன் எழுந்துவிட்டான். அவளோ சண்டைக்
காரியாய் மாறி அவனை முறைத்தாள். அவள் முகம் உக்கிரமாய்
மாறி இருந்தது.

'அப்பாவின்னு பொறுத்துப் போனால்... தேளாய்
கொட்டுகிறாளே...?'

# 9

சரவணன் தன் பொறுமையை கைவிட்டான். தாயாரைப் பெயர்
சொல்லி அழைத்ததில், அவன் குற்றம் காணவில்லை. அதை அவள்
கூறிய விதம்தான் கொதிக்க வைத்துவிட்டது.

அவனை நேசிப்பவள்... அவனைப் பெற்ற தாயை மதிக்க வேண்டாமா?
கன் விரும்பியதற்கு மறுப்புச் சொல்லாமல்... கணவனிடம் வாதாடி...
ன் அண்ணன் மகள்களை விட்டுவிட்டு... நாத்தனார் மகளை... தன்
களுக்கு திருமணம் பேசி முடிக்கச் செய்தவளை... பேசும் முறையா
இது? தனக்கு மனைவியாகப் போகிறவள் இதைக் கற்றுக்கொள்ள
வண்டாமா?– என்ற கோபம் பொங்கி எழ... அவன் நிதானத்தை
கைவிட்டான்.

"யார் அவள்...?"

தொலைவில் படம் எடுத்துக்கொண்டிருந்த ஷாஷாவைக் காட்டி
அவள் கேட்கவும்... அவனுக்கு இன்னும் கோபம் கூடியது.

"ஏன்... மரியாதையாய் பேசமாட்டாயா?"

"ஓஹோ... அவளுடைய மரியாதையில் உங்களுக்கு அவ்வளவு

அக்கறையோ?"

தன் மாமன் மகள்... வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளி. அவளு
மரியாதைக் கொடுக்க வேண்டியது... தனக்கு மனைவியாகப் போ
கஸ்தூரியின் கடமை ஆயிற்றே என்ற சிந்தனையில் இருந்தவன்-

"ஆமாம்..." என்றான்.

"ஆமாம்னு சொல்றீங்களா...?"

"அட... ஆமாண்டி! நீ என்ன செவிடா? நான் சொன்னது
காதில் விழலையா? ஆளையும்... மூஞ்சியையும் பார்... பேசத் தெரிந்
பேச. இல்லாவிட்டால் இடத்தைக் காலி பண்ணு..."

"என்னையா போகச் சொல்கிறீர்கள்?"

"உன்னைத்தான் போகச் சொல்கிறேன்..."

"என்னைவிட அவள் முக்கியமாகப் போய்விட்டாளா?"

"அவள் முக்கியமானவள்தான்டி..."

"அவள்தானே ஷாஷா?"

"ஆமாம்... இப்ப என்ன அதுக்கு?"

"அவன் கல்யாணம் பண்ணிக்கொள்வாளாமே...?"

சில நேரங்களில் சிலர் பேசும் லட்சணம்... வாழ்க்கை
போக்கையே மாற்றிவிடும். கஸ்தூரியும் அப்படித்தான் பேசி வைத்
தொலைத்தாள்.

சும்மாவே அவனுக்கு உருப்படியாய் பேச வராது. இன்று காதலித்த
கைநழுவிவிடுவாளோ என்ற பயத்துடன் வாய்க்கு வந்ததைக் கே
வைத்தான்.

சரவணனுக்கு தலையில் அடித்துக்கொள்ளலாம் போல் இருந்
"ஏண்டி... நீயென்ன பச்சைக் குழந்தையா? அவளுக்கு கல்யா
வயதுதானே! கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் வேறு எ
செய்வாள்? கொஞ்சம் கூட விவரமாகப் பேசக்கூடாதுன்னு விர
கடைபிடிக்கிறாயோ?"

"ஓஹோ... அந்த அளவுக்கு போய்விட்டதா...?"

"எந்த அளவுக்கு...!"

"அவன் கல்யாணம் பண்ணிக்கொள்வானா? எப்படி பண்
கொள்வான்? அதையும் நான் பார்க்கிறேன்..."

'இவளுக்கு என்ன பித்துப் பிடித்துவிட்டதா...?'- என்ற கவலை
சரவணனுக்கு வந்துவிட்டது.

'ஷாஷாவுக்கு கல்யாணமானால் இவளுக்கென்ன வந்தது!
வேலை... அவள் மேல் இருக்கும் வெறுப்பால், அவள் நல்

இந்தச் சந்தேகம் மனதிற்குள் முளைவிட்டதும், அவனுக்குள்
கண்டிப்பு தோன்றியது.

'சரவணனின் மனைவியாகப் போகிறவளுக்கு, இப்படிப்பட்ட
அல்பத்தனமான சிந்தனைகளே வரக்கூடாதே...'

"ஏய்ய்... திமிராடி உனக்கு? அவளைப் பற்றி இனி ஒரு வார்த்தை
கூட நீ பேசக்கூடாது."

"ஏன் பேசக்கூடாது...?"

"நீ யாருடி அவளைப் பற்றிப் பேச?"

"என்னது! நான் யாரா? நான் யாரோதானா...?"

"ஆமாம்டி... நீ யாரோதான்..."

"எனக்கு இதைப் பேச உரிமை இல்லையா...?"

"அடடா... உனக்கு என்னடி உரிமை இருக்கிறது? உரிமை இல்லை...
இல்லை... இல்லை! போதுமா... வாயை மூடிக்கொண்டு போ..."

"அப்போ... நீங்கள் உங்கள் அம்மா சொன்னபடிதான்
கேட்பீர்களா?"

"ஆமாம்டி... என் அம்மாதான் என் தெய்வம்..."

"நான் உங்களுக்கு முக்கியமில்லை...?"

"தாய்க்கு பின்தான் நீ..."

இவர்கள் இருவரும் இந்த மார்க்கமாய் பேசிக்கொள்வதை வழக்கம்
போல தூண் மறைவுக்குப் பின்னால் ஒளிந்து நின்று கேட்டுக்கொண்டிருந்த
ராசிங்கத்திற்கு சிரிப்பு வந்துவிட்டது.

'கேப்பையில் நெய் வடிகிறதுன்னா... கேட்கிறவனுக்குமா புத்தி
இல்லாமல் போகும்? கஸ்தூரி கேட்பது என்னவென்று புரியாமலே
ாயை விட்டுக் கொடுக்காத மகனாய்... அதே நேரம்... கஸ்தூரியை
ன் தாரமென்றும் மறைபொருளாய் உணர்த்தும் விதத்தில் இவன்
பேசுகிறானே! 'தாய்க்குப் பின்னால் தாரம் நீதானேடி'ன்னு ஒற்றை
வார்த்தையைச் சொல்லி இவளை மடக்கிப் போடுவதை விட்டுவிட்டு...
ாடையாய் சொல்கிறானாம். இந்த மக்கு கஸ்தூரிக்கு நேரடியாய்
சொன்னாலே எதுவும் அவ்வளவு சீக்கிரத்தில் புரியாது. 'டியூப்
லைட்'டிலும்... இவள் 'பியூஸ்' போன 'டியூப் லைட்'. இவள்தானா இவன்
சொல்வதைப் புரிந்துகொண்டு மலை இறங்கப் போகிறாள்...?'

கஸ்தூரியின் ஆவேசம் அதிகமாகிக்கொண்டே இருந்தது.

'எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால்... இவன் அம்மாவின் பேச்சைக்
கேட்டுக்கொண்டு அந்த ஷாஷாவை கல்யாணம் பண்ணிக்கொள்ள
முடிவு செய்திருப்பான்...'

"இதுதான் உங்கள் முடிவா?"

"அட... ஆமாண்டி..."



“அப்போ... அந்த ஷாஷாவிற்கு கல்யாணம் நடக்கும்...?”

“ஆமாம்... நடக்கும்.”

“அவள் வாழ்வாள்... நான் அதைப் பார்த்து வயிறு எரிய வேண்டும். நீங்களும், உங்கள் அம்மாவும் மட்டும் சந்தோஷப்பட வேண்டும்... அப்படித்தானே?”

“அவள் வாழ்க்கையை அவள் வாழ்ந்தால் நீ ஏண்டி வயிறு எரிய வேண்டும்? சிச்சி... இவ்வளவு சின்னப் புத்தியா உனக்கு?”

“எனக்கா சின்னப் புத்தி?”

“உனக்குத்தான் சின்னப் புத்தி... வேறு யாருக்கு நம் குடும்பத்தில் இப்படிப்பட்ட புத்தி வரும்? என் அத்தை நல்லவங்களாச்சே... அவங்க பெத்த மகளா நீ. எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.”


## ராணி முத்து
## சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

### வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
‘ராணி முத்து’,
சென்னை–600 007.


கஸ்தூரியின் பொறாமை குணம் தனக்குப் பிடிக்கவில்லை என்று சரவணன் கூற... தன்னையே பிடிக்கவில்லை என அவன் சொல்லிவிட்டதாக நினைத்தாள் கஸ்தூரி.

“நீங்கள்தானா இப்படிப் பேசுவது...?”

“நான்தாண்டி.... அதிலும் உனக்கு சந்தேகமா...?”

... கோடுகள் இறங்கவும்,

நின்ற ஷாஷா கேட்டாள்.

"ஷாஷ்... இவன்தான் கஸ்தூரி..."

சரவணன் பெருமையாய் காட்டினான். தன் அத்தை மக... இரவும், பகலும் நினைத்து உருகும் கனவு தேவதை இவள்தானா என... வியப்புடன் பார்த்தாள் ஷாஷா.

'வாவ்...' என்று மனதிற்குள் வியந்துகொண்டாள்.

'எப்பேர்ப்பட்ட பேரழகு...'- அவளது விழிகளில் தெரி... பாராட்டைப் பெருமையுடன் பார்த்தபடி சரவணன் நிற்க... அவர்... இருவரும் தன் முன்னாலேயே காதல் பார்வை பார்த்துக்கொள்வது... நினைத்து துடித்துப் போனாள் கஸ்தூரி.

"இவள்தான் கஸ்தூரியா...?"

"ஆமாம்... இவள் என்ன கேட்கிறாள் தெரியுமா?"

"என்ன கேட்கிறாள்?"

"அவளைவிட நீ உயர்வான்னு கேட்கிறாள்...?"

"ஓ... அப்படியா...?"

கஸ்தூரியிடம் சென்று நின்ற ஷாஷா, சரவணனைப் பார்த்... கேட்டாள்.

"சரண்... நன்றாகப் பார்த்துச் சொல்லுங்க. எங்க ரெண்டு பேர்... யார் உயர்த்தி...?"

கேட்ட ஷாஷா... கண்ணீர் ததும்ப நின்றுகொண்டிருந்... கஸ்தூரியைவிட உயரமாக இருந்தாள்.

அவள் குறும்பாக கண் சிமிட்டுவதைப் புரிந்துகொண்ட சரவண... தானும் அவளது குறும்பில் பங்கெடுத்தான்.

"இதைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டுமா? கண்ணை மூடி... கொண்டு சொல்வேனே... நீதான் உயர்த்தி..."

அவ்வளவுதான்... அதுவரை அடங்கி இருந்த அழுகை பொத்த... கொண்டு வர... 'கோ' வென்று கதறி அழுதபடி கஸ்தூரி வெளி... ஓடினாள்.

## 10

கஸ்தூரி அழுதுகொண்டே வெளியே ஓடியதும், ஷாஷ... திகைத்துவிட்டாள்.

"வாட் இஸ் திஸ் சரண்...?"

"ஷி இஸ் சைல்டிஷ்... நான் போய் சமாதானப்படுத்திட்டு வர்றேன் ஷாஷா... கொஞ்சம் 'வெயிட்' பண்ணுறியா?"

"நோ பிராப்ளம்... டேக் யுவர் ஓன் டைம்... ஆனா, இவள் ஏன் இப்படி இருக்கிறாள்?"

"அவள் என் விசயத்தில் ரொம்பவும் அதிக உரிமையா இருப்பா..."

"யூ ஆர் லக்கி... சரண்..."

"ஆமாம்... ஆமாம்..."

தன் அதிர்ஷ்டத்தை நொந்துகொண்டே சரவணன், கோவிலைவிட்டு வெளியே சென்றான்.

அவன் ஷாஷாவுடன் பேச்சை முடித்துவிட்டு தாமதமாக வருவதற்குள்... துரைசிங்கம் தாவிப் போய்... கஸ்தூரியை வழி மறித்துக்கொண்டான்.

"ஏன் அழுதுகொண்டு வருகிறாய் கஸ்தூரி...? கோவிலுக்குள் என்னதான் நடந்தது? அடடா... நானும் உன்னுடன் கோவிலுக்குள் வராமல் போய்விட்டேனே! நீ சரவணனுடன் பேசும்போது குறுக்கிடக் கூடாதுன்னு நினைச்சு... உனக்காக இங்கேயே காத்திருந்ததுதான் தப்பாகிவிட்டது. நானும் கோவிலுக்குள் வந்திருக்க வேண்டும். வந்து அவனை இரண்டில் ஒன்று கேட்டிருக்க வேண்டும். நீ அழாதேம்மா... உன் அருமை பெருமை அந்த மடையனுக்குத் தெரியவில்லை..."

துரைசிங்கம் பேசிக்கொண்டே- மரத்தின் மேல் சாய்ந்து அழுது கொண்டிருந்த கஸ்தூரியின் அருகே நெருங்கி நின்றுகொண்டான்.

சற்றுத் தொலைவில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவள்... துரைசிங்கத்தின் மார்பின் மேல் சாய்ந்து நின்று அழுவது போல் தோன்றும்.

சில கோணங்களில்... சில காட்சிகள்... பார்ப்பவர்களுக்கு தவறாக தோன்றிவிடுவது இப்படித்தான்!

துரைசிங்கம் கையாண்ட யுக்தி பலித்தேவிட்டது.

கோவிலில் இருந்து வெளிப்பட்ட சரவணன்... கஸ்தூரி, துரைசிங்கத்தின் மார்பில் சாய்ந்து அழுது கொண்டிருந்தது போன்ற காட்சியைக் கண்டு அதிர்ந்துவிட்டான்.

போதாத குறைக்கு... சரவணன் பார்ப்பதைக் கவனித்துக் கொண்டே "அழாதேம்மா... அழாதே..." என்று ஆறுதல் கூறிய வண்ணம் அவளது கண்ணீரை துடைத்துவிடவும் செய்தான் துரைசிங்கம்.

"நீங்கள் சொன்னது உண்மைதான் மாமா...?"

"தெரிந்துகொண்டாய் இல்லையா...? இதுதான் இந்த மனிதர்களின் உண்மையான நிறம். வெளித் தோற்றத்தை வைத்து அவனை நல்லவன்

நம்பிவிட்டாயேம்மா..."

பாதும் மாமா... எனக்குத் தாங்கவில்லை! நாம் வீட்டுக்கு
விடலாம்..."- கஸ்தூரி தேம்பியவாறு கூற...

துவும் சரிதான்! கோவிலுக்கு வருகிறவர்களும், போகிறவர்களு
யே பார்க்கிறார்கள் பார்..."- என்றபடி துரைசிங்கம், சைக்கிளி
கொண்டான்.

னம் ஒடிந்து போயிருந்த கஸ்தூரி... சரவணன் தொடர்ந்து வந்ததை
க்கவில்லை. இயந்திரம் போல் சைக்கிளில் ஏறி, முன் பக்
பில் அமர்ந்துகொண்டாள். துரைசிங்கம் இரு பக்க தோள்களை
யவாறு, அவளை அணைத்துப் பிடித்தபடி சைக்கிளை ஓட்
பித்தான்.

பாகும்போது திரும்பி... சரவணனின் பக்கம் ஒரு வெற்றிப்
வையை வீசவும் அவன் மறக்கவில்லை!

ரவணன் தன் கண்களைத் தானே நம்ப முடியாதவனாக திக் பிரமை
த்துப் போய் நின்றான்.

சரவணா..."- அவன் பின்னால் இருந்து ஒரு குரல் அழைத்தது
பிப் பார்த்தான். சாரதி நின்றிருந்தான்.

என்ன சாரதி...?"

உன்னைக் கட்டிக்கொள்ளப் போகிற பெண்ணோடு இப்படித்தான்
கிளில் வந்து இறங்கினான் அந்த துரைசிங்கம்..."

வரும்போதும் இப்படித்தான் உட்கார்ந்து வந்தாளா?"

ஆமாம்ப்பா! நான் என்னடா... இது நம்ம சரவணன் பரிசம்
டிருக்கிற பெண்ணாச்சேன்னு பார்த்தேன். அதுக்கு அவன்
முறைப் பொண்ணை ஏண்டா பார்க்கிறேன்னு சண்டைக்கு
ன்..."

வனுக்கு முறைப் பெண்ணா...?"

ட ஆமாம்ப்பா... அவன் அப்படித்தான் சொன்னான். நான்
ரவணன் கட்டிக்க போற பொண்ணாச்சேன்னு சொன்னேன்.
த அவன் என்ன சொன்னான் தெரியுமா?"

ன்ன சொன்னான்...?"

ப்படிக் கனவு காண வேணாம்னு உன்கிட்ட சொல்லச்
றான்ப்பா..."

படியா...?"

! சரவணா... இவன் வில்லங்கம் பிடிச்சவன். கஸ்தூரிக்கு
முறைப் பையன்தானே! பார்த்து இருப்பா..."

நடந்த கூத்தை நீ பார்த்துக்கொண்டுதானே இருந்தாய்?"

"கஸ்தூரி விவரம் இல்லாத பொண்ணுடா சாரதி..."

"அது எனக்குத் தெரியும். ஊருக்குத் தெரியுமா? எதற்கும் அவனிடம் தொட்டுப் பேசிப் பழக வேண்டாம்னு கஸ்தூரியிடம் எச்சரிக்கை பண்ணி வை..."

"சரிடா..."

சரவணன் யோசனையுடன் கோவிலுக்குள் போய்விட்டான்.

அங்கே... வீட்டில் போய் இறங்கிய கஸ்தூரி... இரண்டு நாட்கள் இடைவிடாமல் உட்கார்ந்து அழுது தீர்த்தாள். பெற்றவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக அழுதுகொண்டிருக்க... அவள் முகம் வாடி இருப்பதைக் கண்ட மகேஷ்வரன் காரணம் கேட்டார்.

"ஏண்டி காயத்திரி..."

"என்னங்க..."

"கஸ்தூரி ஏன் சோர்ந்து தெரிகிறாள்?"

"தலைவலியாம்..."

"தலைவலியா...?"

மகேஷ்வரனின் புருவம் சுருங்கியது. திருமணம் ஆகப் போகும் பெண்ணிற்கு திடீரென்று... இடைவிடாத தலைவலி வரக் காரணம் என்ன...?

'ஒரு வேளை... அவளுக்கு இந்தக் கல்யாணத்தில் பிடித்தமில்லையோ...? பிரிந்து நிற்கும் குடும்பங்கள் ஒன்று சேரட்டும்னு நினைச்சு என் குழந்தை தியாகம் பண்ணுகிறாளோ...?'

நினைத்ததை மனைவியிடம் பகிர்ந்துகொள்ள அவரால் முடியவில்லை. மனதிற்குள் புதைத்துக்கொண்டு... மகளைக் கண்காணிக்கலானார்.

இந்த நிலையில்... ஒரு நாள் மழை வலுத்துப் பெய்துகொண்டிருந்தது. காயத்திரி திடீரென்று வயிற்று வலியால் துடித்தாள். வயலுக்குப் போயிருந்த மகேஷ்வரனுக்கு செய்தி போகவும்... அவர் பதறியடித்துக்கொண்டு ஓடி வந்தார்.

செவ்வந்தி செய்த கை வைத்தியத்துக்கு கட்டுப்படாமல், காயத்திரியின் வயிற்று வலி 'பெப்பே' காட்டிக்கொண்டிருக்க... சரவணனுக்கு சொல்லிவிட்டார்கள். அவன் காரோடு வந்தான். செவ்வந்தியும், மகேஷ்வரனும் கைத்தாங்கலாய் பிடித்துக்கொள்ள– காயத்திரி காரில் ஏற்றப்பட்டாள்.

அருகில் இருந்த நகரத்திற்கு விரைந்தது கார்.

சரவணன் வந்திருக்கும் செய்தி அறிந்து, கஸ்தூரி ஓடி வந்து பார்த்தும்– அவன்... அவள் பக்கம் தன் பார்வையைத் திருப்பவே

போல் போய்விட்டான்.

கஸ்தூரி இடிந்து போய்விட்டாள். கார் வெளியேறியதும், ஓடி சென்று பார்த்தாள். கார் போயே போய்விட்டது.

கட்டுப்படுத்த முடியாத அழுகையுடன் கீழே நின்றால் யாரேனு பார்த்து விடுவார்களோ என்று... தனிமையில் அழ மாடியேறி சென்றாள் அவள்.

மொட்டை மாடியில் மழை வலுத்துப் பெய்து... வானத்தில் இருந் ஊற்றாகக் கொட்டிக்கொண்டிருந்தது. கஸ்தூரியின் கண்களிலும் நீ பெருகி வழிந்தது.

தன் உணர்வில்லாமல் மழையைப் பார்த்த வண்ணம் மாடியி இருந்த ஒற்றை அறையில் சாய்ந்து நின்றுகொண்டு, கண்ணீர் வடித் கஸ்தூரி திடீரென்று அந்தத் தொடுகையை உணர்ந்தாள்.

பின்னால் நின்றுகொண்டு அவளை இறுக்கி இணைத்து... அவள் பின்னங்கழுத்தில் இதழ் பதித்தான் துரைசிங்கம்.

அதிர்ந்து விலகிய கஸ்தூரி...

"மாமா... என்ன இது...?" என்று கேட்டாள்.

"நான் உன் மேல் என் உயிரையே வைத்திருக்கிறேன் கஸ்தூரி..."

"அதற்காக... இப்படியா செய்வீர்கள்? சீச்சீ... தள்ளிப் போங்க..."

"ஏன் கஸ்தூரி... நான் உன் மாமன்தானே...?"

"பேசாதீங்க...! அத்தையின் முகத்திற்காகப் பார்க்கிறேன். அப்பாவுக்கு மட்டும் இது தெரிந்தால், உங்களை கொன்றேவிடுவார் என் முகத்தில் விழிக்காமல் போய்விடுங்கள்..."

"கஸ்தூரி."

"இப்போதுதான் எனக்கு எல்லாம் புரிகிறது. நீங்கள் வேண்டுமென்றே என்னிடம் என் அத்தானைப் பற்றித் தவறாய் பேசி இருக்கிறீர்கள்!"

கஸ்தூரி இவ்வளவு சீக்கிரம் இதைப் புரிந்துகொள்வாள் என்பதை எதிர்பார்க்காத துரைசிங்கம் வெகுண்டான்.

ஒரு பெண் எத்தனை அப்பாவியாய் இருந்தாலும்... பெண்மையைப் பொறுத்தவரையில் சிறு தவறான தொடுகையையும் இனம் கண்டுகொள்வாள் என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

## 11

இருந்த ஆசையின் தகிப்பை கஸ்தூரி இனம் கண்டுகொண்டாளோ... அந்த நொடியில் அவனுடைய துரோகச் செயலையும் புரிந்துகொண்டுவிட்டாள்.

"அடப்பாவி... உன்னை ஆதரித்து வளர்த்த என் அப்பாவிற்கு நீ செய்யும் நன்றிக் கடனா இது...?"

கஸ்தூரி கேட்ட இந்த வார்த்தைகளை செவிமடுத்ததும், துரைசிங்கம் வெறி பிடித்தவன் போலானான்.

'என்ன ஒரு தைரியமும், தெனாவெட்டும் இருந்தால்... இவளுடைய அப்பனை அண்டிப் பிழைத்ததைச் சொல்லிக் காட்டுவாள்... இந்தத் திமிரை அடக்க வேண்டாமா?'

"யார்... யாரை ஆதரித்தது? உன்னுடைய அப்பன் ஒன்றும் சும்மா என்னை ஆதரிக்கவில்லை. நாயாய் உழைத்தேன். அதற்கு அந்த ஆள்தான் நன்றி விசுவாசம் காட்டி... உன்னை எனக்கு கட்டிக் கொடுத்து, இந்த வீட்டிற்கு வாரிசு ஆக்கியிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு பொண்டாட்டி பிறந்த வீட்டில் பெண்ணைக் கொடுக்கப் பார்க்கிறானே... அந்த பேடிப்பயல். அவனுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேனா?"

"யாருடைய சொத்திற்கு யார் வாரிசாவது?"

"ஏய்... இது என் ஆத்தா பிறந்த வீடு. சொத்தில் பாதி உரிமை என் அம்மாவுக்கும் இருக்கிறது."

"தெரியாதவன் போல பேசாதே! உன் அப்பாவுக்கு அத்தையைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கும்போதே... என் அப்பா சொத்தைப் பிரித்து... பாதிச் சொத்தை அத்தையின் பெயருக்கு எழுதிக் கொடுத்துவிட்டார். குடித்துக் குடித்தே சொத்தை அழித்துவிட்டு மண்டையைப் போட்டுவிட்ட மகராசன் பெத்த மகன்தானே நீ... என்னுடைய அப்பாவைப் பார்த்து நீ பேடிப் பயலுனு சொல்கிறாயா?"

"கஸ்தூரி..."

"ச்சீ... என்னுடைய பெயரைக் கூட நீ சொல்லாதே... உனக்கு அந்த அருகதை இல்லை..."

"ஆ... அருகதையைப் பற்றி பேசாதே! உன் அத்தானைப் பற்றிப் போட்டுக் கொடுத்ததும்... கொஞ்சம் கூட யோசிக்காமல் என் சைக்கிளின் முன் கம்பியில் ஏறி... என் கைகளுக்குள் உட்கார்ந்துகொண்டவள்தானே நீ..."

"கேடு கெட்டவனே... இந்த நினைப்போடுதான் என்னை சைக்கிளில் வரச் சொன்னாயா...?"

"ஆமாம்... உன் பூவாசம் பிடித்துக்கொண்டே... உன்னை கட்டியணைத்தபடி சைக்கிளில் இந்த ஊரே பார்க்க...

போகத்தான்... பின்பக்க சேரியவரையே கழட்டி வைத்துவிட்டு வந்தே... இப்ப என்னங்கிற...? எங்க அம்மாவுக்கு வெறும் பத்து ஏக்கர் நிலமா? உன் அப்பனுக்கு மட்டும் அறுபது ஏக்கர் நிலமா? எந்த ஊர் நியாயம் இது...?"

"இந்த நியாயத்தை செத்துப் போன உன் அப்பனிடம் போய் கே... பரம்பரைச் சொத்து இருபது ஏக்கரை சரிசமமாய் பகிர்ந்து கொடு... என் அப்பா... அவர் காலத்தில் பத்தை... அறுபதாக்கி காட்டினார். உ... அப்பா... பெண்டாட்டி சொத்தையும் சேர்த்து அழித்தார். அந்த மனி... பெற்ற பிள்ளை... நீ எப்படி இருப்பாய்? இப்படித்தான் இருப்பாய்! உ... புத்தியும் கோணல் புத்தியாகத்தான் இருக்கும்."

"விட்டால் பேசிக்கொண்டே போகிறாயே... இந்தக் கோண... புத்திக்காரன் வேலையைக் காட்டினால் நீ தாங்கமாட்டாய்..."

"இன்னும் என்ன பாக்கி இருக்கிறது?"

"எத்தனையோ இருக்கிறது... முதலில் உன்னை என் பெண்டாட்... ஆக்கிக்கொள்ள வேண்டுமே..."

"கனவிலும் அது நடக்காது..."

"நான் நனவிலேயே நடத்திக் காட்டுவேன்..."

"வேண்டாம்... கிட்ட வராதே..."

கஸ்தூரி அச்சத்துடன்... கொட்டும் மழையில் நனைந்துகொண்டு மொட்டை மாடியில் பின் வாங்கினாள்.

மழையில் நனைந்த அவளது பொன்னிற உடலின் வளைவுகளை நனைந்த உடை தெரியப்படுத்த... துரைசிங்கம் வெறி கொண்ட வேங்கையாய் அவள் மீது பாய்ந்தான்.

மழை நீரில் கால் வழுக்கி... மாடியில் சரிந்து விழுந்த கஸ்தூரியின் மேல் வேட்கையுடன் அவன் படர்ந்து... இறுகத் தழுவி... அவளது இதழோடு இதழ் சேர்த்து முத்தமிட்டுவிட்டான்.

வேகமாய் விழுந்த மழைத் துளிகள்... கஸ்தூரியின் முகத்தின் மீது சிறு கற்கள் பொழிவதைப் போன்று பொழிந்து கொண்டிருக்க... இ[illegible] நிகழ்வு நேர்ந்ததும்... கஸ்தூரி துடித்துப் போய்விட்டாள்.

அருவருப்புடன்... தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி அவனை தன் மேலே இருந்து தள்ளிவிட்டு எழுந்தவள், மொட்டை மாடியில் இருந்த இரும்பு வாளியை கையில் எடுத்துக்கொண்டா[illegible] துரைசிங்கத்தின் தலையில் ஓங்கி அடித்தாள்.

அடித்த வேகத்தில் துரைசிங்கத்தின் மண்டை உடைந்து ரத்[illegible] கொட்ட... அவன் வலியால் துடித்துப் போய் அலற ஆரம்பித்தான்.

"ஐயோ..."

"செத்துப் போடா நாயே...! உன்னைப் போல உண்ட வீட்டு[illegible]

ரெண்டகம் பண்ண நினைக்கும் பிறவிகள் இந்த பூமிக்கு பாரமாக இருக்க வேண்டாம்... செத்து ஒழி..."

பொறுமையாய்... அப்பாவியாய்... வெள்ளை மனதுடன்... பூப்போல் சிரிக்கும் கஸ்தூரியின் மென்மை மறைந்திருந்தது.

இது மனதின் மறுபக்கத்தை புரிந்துகொண்டிருந்த புதிய கஸ்தூரி. மனிதர்களின் கசடுகளை தெரிந்தவள் கோபமும், வெறுப்பும், ஆவேசமும் ஒன்று சேர துரைசிங்கத்தை கொன்றுவிடும் வெறியோடு முன்னேறினாள்.

"கஸ்தூரி... கஸ்தூரி..."

யாரோ அழைத்துக்கொண்டு வரும் அரவம் கேட்டு... மழை நீரில் ரத்தம் கலந்து வழிந்தோட... காயத்தைப் பிடித்துக்கொண்டே மழையோடு மழையாய்... ஒன்றிப் போனவனாய் துரைசிங்கம் பதுங்கிக்கொண்டான்.

'இந்த நாயோடு... நம்மை யாரும் சேர்த்து வைத்து பார்த்துவிடக் கூடாது...'

கஸ்தூரி தன் கையில் இருந்த வாளியை மொட்டை மாடியிலேயே போட்டுவிட்டு... சட்டென்று அறைக்குள் வந்தாள்.

வீட்டு வேலை செய்யும் பொன்னம்மாள், கையில் சூடான காப்பியோடு வந்திருந்தாள்.

"மழை இந்தக் கொட்டு கொட்டுது. சூடாய் காப்பித் தண்ணி போட்டேன். உனக்குக் கொடுக்கலாம்னு வந்தால்... உன்னை கீழ் வீடு பூராவும் காணலை. நீயானால்... இங்கே பச்சைப் புள்ளையாட்டம் மழையில நனைஞ்சுக்கிட்டு வந்து நிற்கிற. உங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லாம இருக்கிறது பத்தாதா? நீயும் இழுத்துக்கணுமா?"

"இல்லைம்மா... கார் வர்ற மாதிரி சத்தம் கேட்டது. அம்மா வந்திருச்சான்னு போய் எட்டிப் பார்த்தேன்..."

"சரி சரி... சூடாய் இந்தக் காப்பித் தண்ணியைக் குடி. கீழே வந்து துணியை மாத்து."

"சரிம்மா..."

கஸ்தூரி, பொன்னம்மாவுடன் போய்விட்டாள். மழையில் பதுங்கி இருந்த துரைசிங்கம், தன் சட்டையைக் கழட்டி காயத்தின் மீது இறுக்கி கட்டிக்கொண்டான். ரத்தம் வழிவது சற்று நிற்பது போல் அவனுக்குத் தோன்றியது.

அவசரமாய் கீழே இறங்கி... யாரும் பார்க்கும் முன்னால் சைக்கிளில் ஏறி ஓடிவிட்டான்.

நனைந்த உடைகளை மாற்றும்போதே... தலையோடு தண்ணீர் ஊற்றிக் குளித்துவிட்டு, உலர்ந்த உடைகளுக்கு மாறிய கஸ்தூரியின்

உடல் எரிவது போல் தகித்தது.

'தொட்டுவிட்டானே... கட்டிப் பிடித்துவிட்டானே... எனக்கு முத்தம் கொடுத்துவிட்டானே...?'

தன் அறையில் கட்டிலில் ஈர கூந்தல் காய்வதற்காக விரிந்து– தரை மீது புரள... முழங்கால்களில் முகம் புதைத்து அமர்ந்து– கஸ்தூரி மறுகிக்கொண்டிருந்தாள்.

அவளது அறைக்குள் யாரோ வரும் காலடியோசை கேட்டது.

அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. நடந்த நிகழ்வை எண்ணி... எண்ணி கூசிப் போனவளாய் தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள்.

அப்போதுதான் அவளது காதுகளில் பேரிடியாய் சரவணனின் வார்த்தைகள் இறங்கின.

## 12

"ஏன்... என் முகத்தைப் பார்க்க உனக்குப் பிடிக்காதா? அந்த துரைசிங்கத்தின் முகம்தான் பிடிக்குமா?"

'பேசுவது யார்...? இது... இது... சரவணனின் குரல் அல்லவா? சரவணனா வந்திருக்கிறான்?'

கஸ்தூரி பதறி நிமிர்ந்தாள். அவனது முகத்தைப் பார்க்கக் கூசியவளாய் சட்டென்று எழுந்து ஜன்னலோரம் போய்... அவனுக்கு முதுகு காட்டி நின்றுகொண்டாள்.

சரவணனின் புருவங்கள் முடிச்சிட்டன. அவளது இந்த ஒதுக்கம் அவனை இன்னும் தாக்கியது. முகம் இறுக... அருகில் செல்லப் போனவன், உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றுவிட்டான்.

இருவரும் மனதிற்குள் போராடிக் கொண்டிருந்தனர். அதை வார்த்தைகளில் வெளிப்படுத்தத் தெரியாத தவிப்புடன் மவுனமாய் நின்றிருந்தார்கள்.

மவுனம்... பேச்சுக்களற்ற ஆழ்ந்த மவுனம்...

தன் மனம் கவர்ந்தவன் தன் இதழ்களை... அவன் இதழ்களால் தொடும் முன்னரே... ஒரு கயவனின் இதழ்கள் முத்தமிட்டுவிட்ட கொடுமையை ஜீரணிக்க முடியாமல்... தன்னைத்தானே கொன்று கொண்டிருந்தது கஸ்தூரியின் மவுனம்.

சிரிப்பால், பேச்சால், பார்வையால், நாணத்தால்... அனைத்து வகைகளிலும் அவன்நெஞ்சில் நிறைந்தவள். இன்று ஏன் விலகிப் போகிறாள்? வெஞ்சினத்தால் கொதித்தது சரவணனின் இதயம்.

பெருமூச்சுடன் அறையைவிட்டு வெளியேறிவிட்டான். அவனது



காலடியோசைகள் தேய்ந்து மறைவதை மனம் கனக்கக் கேட்டுக் கொண்டிருந்தவள்... அவனுக்கு முகம் காட்ட முடியாமல்... ஜன்னலின் கம்பிகளில் முகத்தைத் தேய்த்து... மவுனமாய் பொங்கி அழுதாள்.

அன்று இரவு... கஸ்தூரி தனக்குப் பிடித்த நாவலில் வந்திருந்த அந்தக் கவிதையை ஒரு முறை படித்துப் பார்த்தாள்.

'காத்திருத்தல் ஒரு வேள்வி–
தீயெனவே எனைத் தாக்கும்...
மவுனத்திலே கரையமைத்த...
உயிர் நதியோ ஊமையாகும்...'

அடுத்து வந்த நாட்களில் சரவணன் அவளுக்காக தோவில் காத்திருந்து... திரும்பிச் சென்றான். அவள் வரவில்லை. வீட்டிற்கு தேடிச் சென்றால்... அவளது கண்களில் அவள் தென்படுவதே இல்லை.

ஆயிரம்தான் அத்தையின் மகளாக இருந்தாலும்... பரிசம் போட்டுவிட்டாலும்... காதலியாக இருந்தாலும்... கல்யாணம் பண்ணிக் கொள்கிறவளிடம் நேரடியாக பேசவோ– பழகவோ கிராமத்தில் அனுமதிக்க மாட்டார்கள்... அது கலாசாரம்.

எனவே, எந்த வகையிலும் அவளைப் பார்க்க முடியாமல் சரவணன் தவித்தான்.

இனித் தாங்காது என்ற நிலை வந்தவுடன், தன் தகப்பனாரிடம் திருமண தேதியைக் குறிக்கும்படி சொல்லிவிட்டான்.

மகேஷ்வரனின் வீட்டில், தேதி குறிப்பது பற்றிய பேச்சு எழுந்தது. மனைவியுடன் அவர் கலந்து ஆலோசித்தார்.

"அடுத்து வருகிற முகூர்த்தத்தில் கல்யாணத்தை நடத்திடணும்னு மாப்பிள்ளை... உங்க அண்ணன்கிட்ட சொல்லிட்டாராம். பத்தே நாளில் கல்யாணமாம்... நீ என்ன சொல்ற காயத்திரி..."

"நான் சொல்ல இதில என்ன இருக்கு? நம்ம மகளுக்கு இனிமேல்தான் நகை வாங்கப் போகிறோமா? இல்லை, சீர் வாங்கப் போகிறோமா? சேர்த்து வைத்த சீர், வீடு பூராவும் நிறைஞ்சிருக்கு. செஞ்சு வைச்ச நகை... பீரோவை நிறைச்சிருக்கு. அவங்க சொல்லுற நாளில் பொண்ணைக் கொண்டு போய் ஒப்படைக்கிறதுதானே பாக்கி. சரின்னு சொல்லுங்க..."

"அப்படியா சொல்ற...?"

"ஆமாங்க... பரிசம் போட்ட பின்னால... நாளைக் கடத்தாம கல்யாணத்தைப் பண்ணிடணும். அதுதான நம்ம நாட்டு வழக்கம்!"

அவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட கஸ்தூரியின் மனதில் திகில் படர்ந்தது.

'கல்யாணமா... சரவணனுடனா...? எப்படி...! கூடல் இல்லாத

ல்யாண வாழ்க்கை சாத்தியமில்லை. முத்தமில்லாத கூடலும் ாத்தியமில்லை. எனும்போது... எப்படி அந்த நிகழ்வை மறந்து... டலை எதிர்கொள்வது...?"

கஸ்தூரி, நினைவுகளைத் தாங்க முடியாது தவித்தாள்.

"அப்பா..."– பதற்றத்துடன் அழைத்தாள்.

அவளது குரலின் மாற்றத்தையும்... தடுமாற்றத்தையும் உணர்ந்த மகேஷ்வரனின் புருவங்கள் மேலேறின. யோசனையுடன் மகளைப் பார்த்தார் அவர்.

"என்னம்மா...?"

"எனக்கு... எனக்கு..."

"ஏன்ம்மா... இவ்வளவு பயப்படுகிறாய்? என்னிடம் சொல்ல உனக்கு என்ன பயம்? எதுவாக இருந்தாலும் சொல்லு..."

'எப்படிச் சொல்வேன்... அம்மாவிடம் கூட என்னால் இதைச் சொல்ல முடியவில்லையே... உங்களிடம் எப்படிச் சொல்வேன்...?'

கஸ்தூரி தாங்க முடியாமல் கதறி அழுதாள். மகேஷ்வரன் பதறிப் போய்விட்டார். காயத்திரி கலங்கிப் போனாள். இருவரும் மாறி மாறி... மகளிடம் விசாரித்தார்கள்.

பதில் சொல்லாமல் அழுது தீர்த்த கஸ்தூரி... தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு... முடிவாய் சொல்லிவிட்டாள்.

"அப்பா... எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை..."

"கஸ்தூரி..."– காயத்திரி அதிர்ந்துவிட்டாள்.

"என்னடி பேசுகிற...? ஊரறிய என் அண்ணன் பெண் கேட்டு ந்துபோது... நான் உடனே சரின்னு சொன்னேனா...? உங்க ப்பாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டு பேசாமல்தானே நின்றேன்? ன் அப்பாவும் உடனே சரின்னு சொன்னாரா? உன் விருப்பத்தைக் ட்டுட்டுத்தானே சம்மதம் சொன்னார்.

இப்ப பரிசம் போட்ட கல்யாணத்தை நிறுத்தச் சொல்கிறாயே... இது க்கே நல்லா இருக்கா? இதுதான் நீ பெண்ணை வளர்த்து வச்சிருக்கும் சணமான்னு என் பிறந்த வீடும்... இந்த ஊராரும் என்னைப் பார்த்து க மாட்டார்களா? பெத்தவளுக்கு நல்ல பெயரைத் தேடித் தர ிஞ்சிருக்கடி மகராசி. கல்யாணத்தை நிறுத்தணும்கிற பேச்சிற்கே கே இடமில்லை... ஆமாம், சொல்லிட்டேன்?"

காயத்திரி..."

னைவியைக் கோபத்துடன் அதட்டினார் மகேஷ்வரன்.

அவளை மிரட்டாதே... நான் அதை அனுமதிக்க மாட்டேன்..."

"என் பேச்சுக்கு... எதிர் பேச்சு பேசுறியா?"

"ஏன்... நான் பேசக்கூடாதா? இந்த வீட்டில் அவரவர் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் பேசலாம். அதற்கு உங்களுக்கும்... உங்கள் மகளுக்கும் உரிமை இருக்கிறது. ஆனால், ஏனென்று நான் கேட்டுவிட்டால்... என்னை அடக்க வருகிறீர்கள். எனக்குப் பேச உரிமை இல்லையா? நான் என்ன இந்த வீட்டில் அடிமையா?"

"உன்னை அடிமை போலத்தான் நான் நடத்தி வருகிறேனா?"

"அப்படித்தான் நான் நினைக்கிறேன். வெண்ணெய் திரண்டு வரும்போது இவள் பாத்திரத்தை உடைப்பாளாம்... நான் பார்த்துக்கொண்டு சும்மா நிற்க வேண்டுமாம். உங்க நியாயத்தை ஊரில் சொல்லிப் பாருங்க... யாராவது கேட்கிறாங்களான்னு பார்ப்போம்."

"யாரும் கேட்க வேண்டுமென்ற அவசியம் இல்லையடி. எனக்கு என் மகளின் விருப்பம்தான் முக்கியம்..."

"அப்படியெல்லாம் நீங்க மனம் போனது போல செய்துவிட முடியாது. இது விளையாட்டுச் சமாசாரம் இல்லை..."

"எவ்வளவு பெரிய சமாசாரமாக இருந்தாலும், எனக்கு கவலை இல்லை. கஸ்தூரிக்கு பிரியமில்லாத விசயத்தை நான் செய்ய மாட்டேன்."

"எனக்கொரு சந்தேகம்..."

"என்னடி...?"

"இந்தக் கல்யாணம் நடப்பதில் உங்க மகளுக்கு மட்டும் பிரியம் இல்லையா... இல்லை, உங்களுக்கே பிரியமில்லையா?"

"காயத்திரி...?"

"கத்தாதீங்க...! உங்க மனசில் இருக்கிற கசடு தெரிஞ்சு போச்சு. பொண்ணு கேட்டு என் அண்ணன் வந்த அன்னைக்கு... என்னவோ ஊருல இல்லாத பேரழகி போல பீற்றிக்கொண்டு பிகு பண்ணினீங்க. இப்ப பரிசம் போட்ட பின்னால கல்யாணத்தை நிறுத்த திட்டம் போட்டு வேலை செய்கிறீங்க. உங்களுக்கு என் அண்ணன் குடும்பத்தை அவமானப்படுத்தணும். அதற்காக பெத்த பெண்ணின் கல்யாணம் நின்று போனாலும் பரவாயில்லை. சிங்காரிச்ச மூக்கை அறுக்கிறதுக்காக காத்திருந்தீங்களா? உங்க மனசில் இவ்வளவு பழி உணர்ச்சி இருக்கா? உங்களுடனா இத்தனை நாள் குடும்பம் நடத்தி... பிள்ளையும் பெத்துக்கொண்டேன்? நினைத்துப் பார்க்கவே எனக்கு நெஞ்சம் எரிகிறது..."

மகேஷ்வரனின் கண்களில் அனல் பறப்பதை வெறுப்புடன் பார்த்தாள் காயத்திரி. இணைந்து நின்ற இருவரும், பலமாக மோதிக்கொண்டனர்.

# 13

இதுவரை மகேஷ்வரனுக்கும், காயத்திரிக்கும் சிறு பிணக்கு கூட வந்ததில்லை. பழைய திரைப்பட பாடல் ஒன்று உண்டு...

'காதல் என்பது எது வரை...?

கல்யாண காலம் வரும் வரை...!' என்று...

ஆனால், திருமணத்திற்குப் பின்னாலும் காதலுடன் வாழ்ந்த தம்பதிகள் அவர்கள். காயத்திரியின் புன்னகை என்றும் வாடியதே இல்லை. மகேஷ்வரனின் கண்களில் இருந்த காதலும் என்றும் மாறியதே இல்லை.

இன்றோ... இருவரும் எதிரும் புதிருமாய். கஸ்தூரி கலங்கிப் போனாள்.

'என்னால்தானே இந்த நிலைமை...'- பூப்போன்ற அவளது மனம் துடித்தது... கண்ணீர் விட்டுஅழுதாள்.

"அம்மா... கோபப்படாதீங்க. அப்பா மேல தப்பில்லை."

"ஏய்ய்... பேசாதேடி துரோகி."

"காயத்திரி... அவளிடம் அப்படிப் பேசாதே. அவள் நீ பெற்ற பெண். அதை மறந்துவிடாதே..."

"இவளை என் வயிற்றில் சுமந்து ஏன் பெற்றேன்னு இப்போதுதான் வருத்தப்படுகிறேன்."

காயத்திரி வெறுப்புடன் கூறியதும்... கஸ்தூரி "அம்மா" என்று வாய் பொத்தி அழுதாள். அதைக் கண்ட மகேஷ்வரன் "பளார்..." என்று காயத்திரியின் கன்னத்தில் ஒரு அறைவிட்டார்.

"அப்பா..." என்று அதற்கும் தலையில் அடித்துக்கொண்டு அழுத கஸ்தூரி... தன் அறைக்கு ஓடி விட்டாள்.

அப்போது வீட்டிற்குள் வந்து கொண்டிருந்த செவ்வந்தி, இந்தக் காட்சியைக் கண்டதும் பதறி ஓடி வந்தாள்.

"அண்ணே... என்ன இது? என்றைக்கும் சிரிக்காதவள், திருவிழாக் கடையில் சிரித்த கதையாய்! கல்யாணமான நாளில் இருந்து மதினியை கோபமாய் ஒரு பார்வை கூடப் பார்க்காமல் இருந்துட்டு, இப்ப மகளைக் கட்டிக் கொடுக்கப் போகிற நேரத்தில் உங்க வீரத்தைக் காண்பிக்கிறீங்களா?"

"உனக்குத் தெரியாது செவ்வந்தி. இவ நான் பெத்த பொண்ணை பார்த்து என்ன வார்த்தை சொன்னாள் தெரியுமா?"

... மட்டுமா மகள்... உங்களுக்கு வந்திருச்சு?"

"அப்போ... இவள் என் மகளை உசிரோடு கூறு போடுவாள்... அதை நான் பார்த்துக்கிட்டு சும்மா இருக்கணுமா?"

"என்ன மதினி இது! எலியும், பூனையுமா இங்கே நீங்க ரெண்டு பேரும் அடிச்சுக்கிட்டு நின்னா... கஸ்தூரியின் கல்யாணத்தை எப்படி நடத்துவது?"

"இந்த வீட்டில் கஸ்தூரியின் கல்யாணம் நடக்காது. செவ்வந்தி... நான் செத்து கருமாதிதான் நடக்கும்."

"மதினி..."

செவ்வந்தி துடிதுடித்துப் போய்விட்டாள். அதைவிட மகேஷ்வரனின் நெஞ்சில் அந்த வார்த்தைகள் மரண அடியாய் வந்து விழுந்தன.

'என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்? இந்தக் கல்யாணம் நின்று போய்விடும் என்பதில் இவளுக்கு இவ்வளவு ஆக்ரோஷமா...? அப்போ... இத்தனை நாள் என்னுடன் வாழ்ந்த வாழ்க்கை...பொய்யானதா? என்னைவிட இவளுக்கு அவளுடைய அண்ணன்தான் முக்கியமாய் போய்விட்டானா....?'

செவ்வந்தி ஆறுதலாகப் பிடித்த கையை- அழுகையும்... ஆத்திரமுமாய் தட்டி விட்டுவிட்டு கோபத்துடன் போய்விட்டாள் காயத்திரி. செவ்வந்தி ஆற்றாமையுடன் தமையனின் அருகே வந்து, "அண்ணே... என்ன இது? நம்ம வீட்டுல நடக்கப் போகிற மொத விசேஷம். அதை நல்லபடியாய் நடத்தி வைக்கிறதை மறந்துட்டு... இப்படி செய்கிறீங்களே...!" என்று கேட்டாள்.

"கஸ்தூரிக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லையம்மா..."

"என்ன அண்ணே சொல்றீங்க... நிசமாவா?"

"ஆமாம் செவ்வந்தி. கொஞ்ச நாளாவே... அவ முகமே சரியாக இல்லை... எதையோ மனசில வைச்சுக்கிட்டு சொல்ல முடியாமல் மறுகி மறுகி நிற்கிறா. நான் நினைக்கிறேன்... இவ காயத்திரிக்காக தன் மனசில இருக்கிறதை மறைச்சுக்கிட்டு... தியாகம் பண்ணி இருக்கிறா. இப்ப கல்யாண தேதி வரைக்கும் போகவும்... கல்யாணத்தை நிறுத்தப் பார்க்கிறா..."

"இருக்காது அண்ணே! நீங்களா எதையாவது மனசில நினைச்சுக்கிட்டுப் பேசாதீங்க..."

"இல்ல செவ்வந்தி... அப்படித்தான் இருக்கணும்..."

வீடு இரண்டு பட்டு நின்றது. அன்று இரவு யாருமே சாப்பிடவில்லை. செவ்வந்தி, மூவரிடமும் மன்றாடிப் பார்த்துவிட்டு... தோற்றுப் போனவளாய் தன் வீட்டிற்குப் போனாள்.

எதையோ பறிகொடுத்தது மாதிரி

ந்திருக்கிற...!"

ன் என்னத்த சொல்வேண்டா...! எங்க அண்ணன் வீட்டில இல்லாம கெடக்றாங்க."

னவாம்...?"– எரிச்சலுடன் கேட்ட துரைசிங்கத்திடம் ாரியாய் விசயத்தை எடுத்துச் சொன்னாள் செவ்வந்தி. வுதான்... அவன் எரிச்சல் போன இடம் தெரியவில்லை.

னம்மா இப்படிச் சொல்கிறாய்!"– ஆவலுடன் கேட்டான்.

த சரவணன் பய நல்லவன்... அழகன்... சொத்து பத்து இருக்கிற ரன்... படிச்சவன். அவனை விட்டால் கஸ்தூரிக்கு இணையான ளை இந்த ஜில்லா பூராவும் தேடினாலும் கிடைக்காது. ஆனா, பாவி கண்ணு பட்டதோ... கல்யாணம் கலைஞ்சிடும் போல ...!"

தக் கலைத்த படுபாவியான துரைசிங்கத்திற்கு சர்ரென்று மேல் கோபம் வந்துவிட்டது.

வையில்லாம லொட்டலொட்டன்னு ஓட்டைப் பானைக்குள் வீட்டிருக்காப்புல ஏம்மா பேசித் தள்ளுர? பேசாம படு..."

னோடா விவரம் கேட்டே..."

ன் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேல்ல. இதுக்கு மேல ண்ணன் குடும்பம் நல்லா இருந்தா நமக்கென்ன... இல்லை போனால்தான் நமக்கென்ன? தூங்கு... தூங்கு..."

ரை அதட்டி தூங்க வைத்துவிட்டு... விடிய விடிய விழித்துக் மனக்கணக்கு போட்டான்.

ந்தும் எழுந்து... வயல் பக்கம் ஓடினான். அங்கே வரப்பின் மேல் ண்டு, நாற்று நடவை மேற்பார்வை இட்டுக்கொண்டிருந்தார் ன்.

சென்றவன்... மிகவும் பவ்வியமான குரலில், கையைக் கட்டி... ளைத்து நின்று கொண்டு, "மாமா" என்று அழைத்தான்.

மாப்பிள்ளை?"

ட்ட ஒரு விசயம் தனியாப் பேசணும்..."

வரன் வியப்புடன் தங்கை மகனின் முகத்தைப் பார்த்தார்.

ப்பா... என்ன விசயம்?"

... மோட்டார் அறை பக்கம் வருகிறீங்களா?"

போச்சு... இப்ப சொல்லுப்பா... என்ன விசயம்?"

சொல்வதைக் கேட்டு, மாமா என் மேல் கோபப்படக்

"நீங்க கோபப்பட்டாலும் பரவாயில்லை மாமா... நான் சொல்ல நினைக்கிறதை சொல்லிடுறேன். நான் சொன்ன பின்னால் நீங்க என்னை வெட்டிப் போட்டாலும் சரி... மனசுக்குள்ளேயே நினைச்சு மறுகிக்கிட்டு... நானும், கஸ்தூரியும் தவிக்கிற தவிப்பு போதும் மாமா..."

மகேஸ்வரனின் கையில் இருந்த குடை கீழே நழுவியது. அவர் அதிர்ச்சியுடன் தங்கையின் மகனைப் பார்த்தார்.

'இவன் என்ன சொல்கிறான்...?'

தாய் மாமனின் உணர்ச்சிகளைக் கவனிக்காதவன் போல் துரைசிங்கம் மடமடவென்று பேச ஆரம்பித்தான்.

"மாமா... சின்ன வயசில இருந்தே கஸ்தூரிக்கு என் மேல பிரியம். கட்டிக்கிட்டா உன்னைத்தான் கட்டிக்குவேன்னு என்னிடம் அடிக்கடி சொல்லும்..."

"நிஜமாகவா...?"

"என் அப்பன் மேல ஆணையா சொல்கிறேன் மாமா..."

செத்துப் போன தகப்பன் மேல் தீராத கோபம் கொண்டிருந்த துரைசிங்கம்... இப்படி பொய் சத்தியம் செய்து தன் வன்மத்தைத் தீர்த்துக்கொண்டான்.

"இதை ஏன் இத்தனை நாளாய் கஸ்தூரி என்கிட்ட சொல்லலை?"

"கல்யாணப் பேச்சு வரும்போது சொல்லிக்கலாமுன்னு இருந்தோம். அதோட... அவளுக்கு நான், எனக்குத்தான் அவள்னு நினைச்சுக்கிட்டு இருந்தோம். திடீர்னு சுந்திரேசன் பெரியப்பா பெண் கேட்டு வருவாருன்னு நாங்க கனவிலேயும் நினைக்கலையே..."

அப்படியே... உதடு துடிக்க... கண்கள் கலங்க... அப்பட்டமாக மகேஸ்வரனின் முன்னால் நடித்தான் துரைசிங்கம். நிஜ அம்பிகாபதி கூட இப்படி உருகி இருக்கமாட்டான்... அப்படியொரு உருக்கத்தை அவனிடம் கண்டார் மகேஸ்வரன்.

## 14

மகேஸ்வரனுக்கு தங்கையின் மேல் அளவு கடந்த பாசம் உண்டு. அந்தப் பாசத்திற்கு தகுதியான உடன் பிறப்பாகத்தான் செவ்வந்தியும் இருந்து வந்தாள். அவளின் வாழ்வின் ஒரே ஆதாரமான அவள் மகள் மேல் என்றுமே மகேஸ்வரன் கோபம் கொண்டதில்லை. கனிவை மட்டுமே காட்டி வந்திருக்கிறார்.

இன்னும் அவனது வார்த்தைகளில் அவர் சந்தேகம் கொள்ளவில்லை.

துரைசிங்கம் சொல்வதிலும் உண்மை இருக்குமோ என்று அவருக்கு
தோன்ற ஆரம்பித்துவிட்டது.

அதை உணர்ந்து கொண்ட அந்தக் கபவன்... தனது கயிறு திரிக்கும்
வேலையைக் கவனமாகத் தொடர்ந்தான்.

"அத்தைக்கு... அவங்க அண்ணன் மகனுக்கு பொண்ணு
கொடுக்கணும்னு ஆசை இருந்திருக்கும் போல! அத்தை என்ன
சொல்லுச்சோ... ஏது சொல்லுச்சோ... கஸ்தூரி என்னை மறந்திடுங்க
மாமான்னு என்கிட்ட சொல்லிட்டு அழுதா..."

"நீ ஏண்டா இதை என்கிட்ட முதலிலேயே சொல்லலை...?"

"எப்படிச் சொல்வேன் மாமா? ஏழையின் காதலுக்கு மதிப்பு
இருக்குமா? காசு... பணம் இல்லாதவன் காதலிக்கலாமா? அப்படியே
காதலித்தாலும்... அவனது காதல் கை கூடுமா? சரவணன் என்னைவிடப்
பணக்காரன்... படித்தவன்... எல்லாத்துக்கும் மேல் அத்தைக்கு அண்ணன்
மகன்..."

"உன் அத்தைக்கு அவன் அண்ணன் மகன்னா... நீ எனக்கு தங்கச்சி
மகன் இல்லையாடா...?"

"நான் சொல்றேன்னு தப்பா நினைக்க வேண்டாம் மாமா. எந்த
வீட்டிலேயும் பொம்பளைக சொல்தான் எடுபடும். அவங்க பக்க
சொந்தம்தான் வீட்டுக்குள்ள உரிமையா வந்து போக முடியும். நான்
ஆயிரம்தான் இருந்தாலும், அத்தைக்கு நாத்தனார் மகன்தானே... என்
சொந்தத்தை எப்படி அத்தை பெரிசா நினைக்கும்?"

என்னவோ... காயத்திரியின் சொந்த பந்தங்கள்தான் மகேஷ்வரனின்
வீட்டில் குடியிருந்தது போலவும், மகேஷ்வரனின் தங்கையும்...
தங்கை மகனாகிய தானும்... பேச்சுவார்த்தையே இல்லாமல் தள்ளி
நின்றுகொண்டிருந்தது போலவும் துரைசிங்கம் பேசிய விதத்தில்
மகேஷ்வரனுக்கு ரத்தக் கண்ணீரே வந்துவிட்டது.

"அது எப்படிடா மாப்பிள்ளை... நீ அப்படியொரு வார்த்தையை
என்கிட்ட சொல்லலாம்...? நான் உசிரோட இருக்கிற வரைக்கும்
என் தங்கச்சியையும், அவ பெத்த பிள்ளையையும் நட்டாத்தில்
விட்றமாட்டேன்."

"இப்ப நான் நட்டாத்துலதானே மாமா நிக்கிறேன்...?"

"கரையேத்திவிட உன் தாய்மாமன் நான் இருக்கேன்டா மாப்பிள்ளை.
நீ கலங்காதே... கஸ்தூரி உனக்குத்தான்."

"அது போதும் மாமா எனக்கு."

துரைசிங்கம்... கல்லை விட்டெறிந்து பார்க்கலாம். மாங்காய்
விழுந்தாலும் சரி... இல்லை... கூடு கட்டி இருக்கிற பறவைகளில் ஒன்று
விழுந்தாலும் சரி... கிடைத்த வரை ஆதாயம் என்றுதான் ...

நடத்தால் போதும் என்பதே அவனுடைய எண்ணம்.

வயலில் இருந்து வீடு திரும்பிய மகேஷ்வரன் சமையல் கட்டில்
போய் எட்டிப் பார்த்தார்.

"என்னங்கய்யா..." என்றாள் பொன்னம்மாள்.

"காயத்திரி எங்கே...?"- என்று அவர் கேட்க... பொன்னம்மாள்
அவரை ஒரு மார்க்கமாய் பார்த்தாள்.

'இது என்னடி கூத்தா இருக்கு... ஒரு நாளும் இல்லாத
திருநாளா... பெண்டாட்டி எங்கேன்னு என்கிட்ட வந்து இந்த ஐயாரு
கேட்கிறாரு... இரண்டு பேரும் பின்னிப் பிணைஞ்சுக்கிட்டு குடும்பம்
நடத்தறவங்களாச்சே... என்னவா இருக்கும்...?'

பொன்னம்மாளின் மனதில் ஓடிய செய்திகளை, அவளது கண்கள்
பிரதிபலிக்க... மகேஷ்வரன் தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தைத்
துடைத்துக்கொண்டார்.

"சரி... சரி... நானே போய் பார்த்துக்கிறேன்."

பொன்னம்மாளின் பார்வையில் இருந்து தப்பித்தால் போதுமென்று
எண்ணத்துடன் தங்களது படுக்கை அறைக்குப் போனார்
மகேஷ்வரன்.

காயத்திரி விட்டத்தை வெறித்தபடி அங்கே அமர்ந்திருந்தாள்.

"காயத்திரி..."

"........"

"காயத்திரி..."

"........"

"உன்னைத்தான் காயத்திரி..."

"........"

மூன்று முறை அழைத்தும் காயத்திரியிடம் இருந்து பதில் வராமல்
போகவும், மகேஷ்வரனுக்கு கோபம் எகிறிவிட்டது.

"இங்கே பாருடி... நீ என்னதான் மவுன விரதம் இருந்தாலும், நான்
சொன்னால் சொன்னதுதான்டி. அடுத்த முகூர்த்தத்தில் என் மகள்
கஸ்தூரிக்கு நிச்சயமா கல்யாணம் நடக்கும். மாப்பிள்ளை உன் அண்ணன்
மகன் சரவணன் இல்லை... என் தங்கச்சி மகன் துரைசிங்கம்..."

"அதுதானே பார்த்தேன்..."- என்றாள் காயத்திரி இகழ்ச்சியாக.

"என்னடி... எகத்தாளமாய் கேட்கிறாய்...?"

"வேறு எப்படிக் கேட்பேன்? ஆக... இதுக்குத்தான் உங்க மனைத்
தூண்டிவிட்டு கல்யாணத்தை நிறுத்தினீங்களா! இந்தக் கருமத்தை
முதலிலேயே சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே! ஏன் என்
அண்ணன் மகனுக்கு பொண்ணு கொடுக்கறேன்னு சொல்லணும்!
... போடணும்? கடைசியில் என் கல்யாணத்தை

மாத்தணும்? எனக்கு அண்ணனாகப் பிறந்ததைத் தவிர, என் அண்ணன் என்ன குத்தம் செஞ்சாரு...? அவரை அவமானப்படுத்தணும்னு அப்பனும், மகனும் எத்தனை நாளாய் கங்கணம் கட்டிக்கொண்டு காத்திருந்தீங்க...?"

"இங்கே பாரு... உன் கற்பனையைக் கண்டபடி அலையவிடாதே! ஆமாம்... சொல்லிட்டேன். என் பொண்ணு இஷ்டமில்லைன்னு சொல்லிட்டாடி. அதுக்கு அப்புறமும் அவனைக் கண்ணைத் திறந்துகிட்டே பாழுங்கிணத்தில் தள்ளினால் நானெல்லாம் என்னடி அப்பன்?"

"இந்தக் கூத்தை கேட்டால் சிரிப்புத்தான் வருது. எம்.எஸ்சி படித்துவிட்டு... சொந்தமாய் பெரிய கரும்பு மில்லையே வைத்திருக்கும் ஆணழகன் என் அண்ணன் மகன். அவனுக்குப் பொண்ணைக் கொடுப்பது பாழுங்கிணற்றில் பெண்ணை தள்ளிவிடுவதாம். அதே... இவரோட தங்கச்சி மகன், குடிச்சுக் குடிச்சே சொத்தை அழித்த தறுதலைக்கு பிறந்தவன். பத்தாவதில் பத்து தரம்... பதினொன்றாவதில் மொத்தமாய் கவிழ்ந்துட்டேன்னு சொல்லிப்புட்டு... வயலில் மண்வெட்டியைக் கூட ஒழுங்காய் பிடிக்காமல் ஊரைச் சுற்றி பொழைப்பை ஓட்டிவிட்டு... பொழுது சாய... கண்மாய்க்குள்... கண்ட கருமாந்திரத்தையும் குடிச்சுப்புட்டு... ராத்தூங்க வீட்டுக்கு வரும் வெம்போட்டு பயல். அவனுக்குப்பொண்ணைக் கொடுப்பது... வாழ வைப்பதாம். இங்கே பாருங்க! காதலிச்ச கொடுமைக்கு கழுத்தை நீட்டிவிட்டேன். கழுத்தை நீட்டின கொடுமைக்கு ஒரு பெண்ணைப் பெற்று உங்க கையில் கொடுத்துட்டேன். இனி நீங்களாச்சு... உங்க பெண்ணாச்சு. உங்க ரெண்டு பேருடைய விசயத்தில நான் தலை கொடுக்கமாட்டேன். என்கிட்ட எதுவும் சொல்லாதீங்க. உங்க மகளை வழியில் போகிற வழிப்போக்கனுக்குக்கூட கட்டிக் கொடுங்க. எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை..."

"வழிப்போக்கனுக்கு கொடுத்தாலும் கொடுங்கன்னு எப்படி நீ சொல்லலாம்? என் தங்கச்சி மகன் என்ன வழிப்போக்கனா?"

"நான் ஏன் அப்படிச் சொல்லப் போகிறேன்? அப்புறம் அந்த வழிப்போக்கன், 'நானென்ன வேலை வெட்டி இல்லாத வெம்போட்டுப் பயலா?'ன்னு கேட்டு சண்டைக்கு வரமாட்டானா...?"

"உனக்குத் திமிருடி..."

"அது இப்போதுதான் உங்களுக்குத் தெரிந்ததா?"

"உன் திமிரை என்னிடம் காட்டாதே..."

"நிச்சயம் காட்ட மாட்டேன். அதுபோல உங்க தன்மானத்தையும் காட்ட வராதீங்க. உங்க பொண்ணுக்கு கல்யாணம் வச்சா என்கிட்ட ஏன் நீங்க சொல்லணும்?"

"ஏய்... நீ பொண்ணுக்கு அம்மாடி..."

"அது கூட உங்க ரெண்டு பேருக்கும் நினைப்பில் இருக்கா?"

"என் மகளை... உன் அண்ணன் மகனுக்கு கட்டிக் கொடுக்கலைங்கிற வயித்தெரிச்சல் உனக்கு..."

"ஆமாமாம்... இந்த உலகத்தில உங்க மகளை விட்டால் வேறு பொண்ணே கிடைக்காது பாருங்க. எங்க மதினி கூடப் பிறந்தவங்க... மூணு பேரும்... மூன்று திசைக்கு ராஜாவாய் வாழுறவங்க. அவங்க பெத்த பொண்ணுங்க பட்டு போல காரில் வந்து... வெள்ளைக்காரிக போல இந்த ஊரைச் சுத்தி வந்ததைப் பார்க்கத்தானே செஞ்சீங்க. அந்தப் பொண்ணுங்க வைரத்தில் நேரத்துக்கு ஒரு நகை போடுறவங்க. கடல் தாண்டி போய் படிச்சுட்டு வந்தவங்க.

அந்த மூன்று பேரில் ஒருத்தியைக் கட்டிக்கன்னு என் அண்ணன் மகனிடம், மதினி கெஞ்சோ கெஞ்சுன்னு கெஞ்சிச்சாம். அது பேச்சைக் கேட்காமல் உங்க பட்டிக்காட்டு மகளைக் கட்டிக்க அவன் நினைச்சான். அது உங்களுக்கும் கொடுத்து வைக்கலை... உங்க மகளுக்கும் கொடுத்து வைக்கலை. ஒன்னு சொல்கிறேன் கேட்டுக்கங்க. கஸ்தூரியை விட்டால் ஆயிரம் பெண்கள் என் அண்ணன் மகனுக்கு உடனே கிடைப்பாங்க. ஆனால், கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்தாலும் என் அண்ணன் மகனைப் போல ஒரு மாப்பிள்ளை உங்களுக்கு கிடைக்கமாட்டான். வழியை விடுங்க..."

காயத்திரி அலட்சியமாய் கூறிவிட்டு, அறையில் இருந்து வெளியேறிவிட்டாள்.

அவள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அறியாத மனிதர் அல்ல மகேஷ்வரன். ஆனால், அவர்தான் புத்தியை துரைசிங்கத்திடம் கடன் கொடுத்துவிட்டாரே!

## 15

கதிரேசனின் தங்கையான காயத்திரியைக் காதல் செய்தபோது— மகேஷ்வரன் வெறும் பத்து ஏக்கர் நிலத்துக்கு சொந்தக்காரர். ஊரிலேயே பாதிச் சொத்தை தன் வசம் வைத்திருக்கும் கதிரேசன், தன் தங்கையைக் கொடுக்கத் தயங்கியதை... இன்றளவும் அவர் மறக்கவில்லை.

'ஏழை காதலிக்கக் கூடாதா?' என்று துரைசிங்கம் கேட்ட கேள்வி அவரது இதயக் கதவை தட்டி... அந்த நாள் நினைவுகளை விழித்து எழச் செய்துவிட்டது.

காதலித்து மணந்த மகேஷ்வரன், துரைசிங்கத்தின் காதலுக்கு

காவலாய் நிற்க தீர்மானித்துவிட்டார்.

எனவே, மனைவியின் ஒதுக்கத்தைக் கண்டுகொள்ளாமல் வீ நடைபோட்டு அவளின் அறைக்குள் சென்றார்.

அங்கே– கட்டிலில் குப்புறப்படுத்து அழுதுகொண்டிருந்தா கஸ்தூரி. கனிவுடன்... மகளின் அருகே அமர்ந்து, கூந்தலை வருடி கொடுத்தார் மகேஷ்வரன்.

"அப்பா..."– அவசரமாய் எழுந்து அமர்ந்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள் கஸ்தூரி.

"அழுதாயாம்மா?"

"இல்லைப்பா..."

"ஏன்ம்மா பொய் சொல்றே. அப்பன்காரன் நான் உயிரோடு இருக்கும்போது, உன் கண்ணில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வரலாமா?"

"நான் ஏதோ வருத்தத்தில் இருந்துட்டேன்ப்பா..."

"உன் மனசில் என்ன இருக்குன்னு எனக்குத் தெரியும்மா."

மகேஷ்வரன் நிதானமாய் கூறவும், கஸ்தூரி திகிலுடன் தந்தையைப் பார்த்தாள்.

"உங்களுக்குத் தெரியுமா... என்ன தெரியும்?"

"எல்லாம் தெரியும்..."

"எல்லாம்ன்னா...?"

"துரைசிங்கம் எல்லாத்தையும் சொல்லிட்டான்ம்மா..."

"அப்பா..."

அதிர்ச்சியில் கஸ்தூரியின் இதயமே நின்று போய்விடும் போல இருந்தது.

'துரைசிங்கமே அப்பாவிடம் சொல்லிவிட்டானா...? இனி எப்படி அப்பாவின் முகத்தில் நான் விழிப்பேன்...?'

அவள் தவிப்பதை அறியாத– காதலின் காவலர் மகேஷ்வரன் மேலும் தொடர்ந்தார்.

"அவன் சொன்ன பின்னால்தான்... நான் ஒரு முடிவிற்கு வந்தேன்..."

'அவன் என்ன சொன்னான்? அப்பா என்ன முடிவு செய்தார்?'

"உன்னை அவனுக்கே கல்யாணம் பண்ணி வைத்துவிடுகிறேன் கஸ்தூரி... நீ கவலைப்படாதே!"

'ஐயோ... தொட்டவனுக்கே கட்டி வைத்துவிடலாம்னு அப்பா முடிவு பண்ணிவிட்டாரா...?'

... சரின்னு நான் நினைக்கிறேன்...'

'அப்போ... சரவணனை கல்யாணம் பண்ணிக்க எனக்கு தகுதி இல்லைன்னு அப்பா முடிவே பண்ணிட்டாரா?'

"அடுத்த முகூர்த்தத்திலேயே உனக்கும், துரைசிங்கத்திற்கும் கல்யாணம்."

'அதற்கு பதில் என்னை வெட்டியே கொன்றுவிடுங்கள் அப்பா...'

"உன் அம்மாவைப் பற்றி நீ கவலைப்படாதே..."

'நான் என்னைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன்...'

"யார் தடுத்தாலும் துரைசிங்கம்தான் உனக்கு மாப்பிள்ளை..."

'அதற்கு பதில் நான் தூக்கில் தொங்கிவிடுகிறேன்...'

"அவனுக்கென்னம்மா ராஜா... என் தங்கை மகன். நீயேன் இதைப் பெரிதாக நினைத்துக்கொண்டு அழ வேண்டும்?"

'அப்போ... உங்க தங்கச்சி மகன் எது செய்தாலும், நீங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறீர்கள். உங்களிடம் எனக்கு நியாயம் கிடைக்காதாப்பா...? அவன் செய்தது உங்களுக்கு பெரிய தப்பாக தோன்றவில்லையா?'

"சொத்து சுகம் யாருக்கும்மா வேண்டும்...? குணம்தான் பெரிது..."

'அந்தக் குணம் சரவணனிடம் மட்டும்தான்ப்பா இருக்கிறது. இந்த நாயிடம் இல்லை. இது ஏன் உங்களுக்குத் தெரியவில்லை?'

"நான் இன்றைக்கே அழைப்பிதழ் அடிக்கக் கொடுத்துடுறேன்..."

'அப்படியானால் நானும் இன்றைக்கே இந்த உலகத்தைவிட்டுப் போய்விடுகிறேன்...'

"எப்படியோ... நான் இந்த முடிவிற்கு வர துரைசிங்கம்தான் காரணம்..."

'என்னுடைய முடிவிற்கும் அவன்தான் காரணம்ப்பா...'

மகேஷ்வரன் எழுந்து அறையைவிட்டுப் போகும்போது, கஸ்தூரி தலைநிமிர்ந்து அவரது முதுகைப் பார்த்தாள்.

கடைசியாக ஒரு முறை தகப்பனின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது.

"அப்பா..." என்று அழைத்தாள்.

"என்னம்மா...?"– அவர் அவசரமாய் திரும்பினார்.

"ஒன்றுமில்லைப்பா... அம்மாவிடம் இதைச் சொன்னீங்களா?"

"சொல்லிட்டேன்ம்மா..."

கஸ்தூரியை அவமானம் சூழ்ந்துகொண்டது.

'அம்மாவிற்கும் இந்த அசிங்கம் தெரிந்துவிட்டதா...?'

மகள் மவுனித்துவிடவும்... மகேஷ்வரன் வெளியே

அவளைக் கையில் அள்ளிக்கொண்டான். பின்னால் காயத்தி வருகிறாளா... இல்லையா என்று கூடப் பார்க்காமல்- காரின் பி பக்க கதவைத் திறந்தான். அவசரமாய் உள்ளே ஏறிய காயத்திரி, மக மடி தாங்கிக்கொள்ள... செவ்வந்தி... சரவணனின் அருகே அமர்ந் கொண்டாள்.

"காலையில காப்பிகூட குடிக்கலை. நான் இட்லியை அவித் வைத்துட்டு... சட்னியை அரைச்சுட்டுப் பார்த்தால்... யாரு சாப்பிடவரலை. கூப்பிடப் போனால்... இந்தப் பொண்ணு இப்ப குடை சாய்ஞ்சு கிடக்குது..."

– விசாரித்தவர்களுக்கு பொன்னம்மாள் விளக்கம் சொல்லி கொண்டிருக்க... கார் அங்கிருந்து பறந்தது.

மருத்துவமனையில் காரை நிறுத்திவிட்டு... கஸ்தூரியை தூக்கிக்கொண்டு உள்ளே ஓடினான் சரவணன். அடுத்த சில மண நேரங்கள்... எல்லோரும் அனலில் நிற்க- மருத்துவர்கள்... இடைவிடாம போராடி கஸ்தூரியின் உயிரை மீட்டனர்.

# 16

கிழிந்து போன நாராய் கட்டிலில் கிடந்தாள் கஸ்தூரி.. அவளது தலைமாட்டில் அமர்ந்துகொண்டு சத்தமே இல்லாமல் கண்ணீர் வடித்தாள் காயத்திரி. வெளிவராந்தாவில் நின்றுகொண்டு விளாத்திகுளத்துக்காரரிடம் பேசிக்கொண்டிருந்தாள் செவ்வந்தி அறையில் யோசனையுடன் குறுக்கும், நெடுக்குமாய் நடந்தான் சரவணன்.

"சொல்லுங்க அத்தை... என்னதான் நடந்தது?"

"எனக்கு ஒன்றுமே பிடிபடலயே சரவணா. நேற்று உன் மாமா, கல்யாணத் தேதியைப் பத்திப் பேசினாரு. அப்ப கஸ்தூரி குறுக்கே வந்து கல்யாணமே வேணாம்னு அவருகிட்ட சொல்லி அழுதாள்..."

"என்ன சொல்கிறீங்க..."- சரவணனின் நடை நின்றுவிட்டது.

"ஆமாம்... கல்யாணத்தில் அவளுக்கு விருப்பமில்லைன்னு சொல்லிட்டா..."

"இருக்காது அத்தை. கஸ்தூரி அப்படி சொல்லி இருக்கமாட்டாள்."

"நீ வேற ஏன்ப்பா எரிகிற கொள்ளியில இன்னும் கொஞ்சம் மண்ணெண்ணையை ஊத்துற...? அவள் அப்படித்தான்

"எப்படி அத்தை? அவள் என்னைக் காதலித்தாள்."

"என்னப்பா சொல்கிற?"- ஆச்சரியத்துடன் கேட்ட காயத்திரியின்
கண்ணீர் இப்போது நின்றுவிட்டது.

"ஸாரி அத்தை. நானும், அவளும் இரண்டு, மூன்று வருடங்களாகவே
காதலிக்கிறோம். எங்கள் காதலை அப்பாவிடம் சொன்னேன்...
அதனால்தான் உங்கள் வீட்டிற்கு பெண் கேட்டு வந்தார். அம்மாவும்
அவங்க அண்ணன் மகளை மருமகளா ஆக்கிக்கணுங்கிற எண்ணத்தை
விட்டாங்க. என் மாமன் பெண்களும், எங்க காதலை ஆதரித்து
விலகிக்கொண்டார்கள். கதை இப்படி இருக்கும்போது எப்படி
கஸ்தூரி என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லி
இருப்பாள்?"

காயத்திரி தன் சேலை முந்தானையில் முகத்தை துடைத்துவிட்டு
யோசனையுடன் எழுந்தாள். அறை வாயிலில் நின்றுகொண்டிருந்த
செவ்வந்தியை அழைத்தாள்.

"என்ன மதினி...?"

"நம்ம கஸ்தூரிக்கு துணி மாத்திவிடணும். கொஞ்சம் கடைத்தெரு
வரைக்கும் போய் ரெண்டு 'நைட்டி' வாங்கிக்கிட்டு வர்றியா?"

"சரி மதினி..."

செவ்வந்தி பணத்தை வாங்கிக்கொண்டு போனதும்... அறைக்
கதவை அடைத்தாள் காயத்திரி. அவளது செய்கைகளைப் புரியாத
பார்வையுடன் பார்த்துக்கொண்டிருந்த சரவணன்,

"என்ன விசயம் அத்தை...?" என்று கேட்டான்.

"சரவணா... நான் தப்பு செய்துட்டேன். கஸ்தூரி கொஞ்ச
நாட்களாகவே கலங்கிப் போயிருந்தாள். முகமே சரியில்லை.
அதை வைத்துத்தான் உன் மாமா, இந்தக் கல்யாணத்தில் மகளுக்கு
இஷ்டமில்லைன்னு நினைத்துவிட்டாரி..."

"அது... வேறு ஒன்றுமில்லை அத்தை... எங்களுக்குள் சின்ன தகறாா.
அவள் மேல் நான் கொஞ்சம் கோபமாக இருந்தேன்..."

"ஏன்ப்பா...?"

"நாங்க கோவிலில் சந்திப்போம். அவளுக்கு தாழ்வு மனப்பான்மை.
என் மாமன் பெண்கள் மேல் பொறாமை."

"இது பெண்களுக்கு இயல்பாய் வருகிற உணர்வுதானே..."

"நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால், ஒரு நாள் இவள்
துரைசிங்கத்துடன் சைக்கிளில் முன் கம்பியில் உட்கார்ந்துகொண்டு
கோவிலுக்கு வந்திருந்தாள். அங்கே என் மாமா பெண் ஷாஷானை
பார்த்துவிட்டு, கோபித்துக்கொண்டு போய்... கோவில் வாசலில் நான்
பார்க்கும்போதே... துரைசிங்கத்தின் தோள் மேல் சாய்ந்து அழுதாள்



அத்தை."

அத்தை."

"நம்ம கஸ்தூரியா? சேச்சே... இருக்காது சரவணா."

"கண்ணால் பார்த்த நான் என்ன பொய்யா சொல்லுறேன்?"

"என்னால் இதை இன்னமும் நம்பமுடியவில்லை. கஸ்தூரி மனசில் வெசனம் இல்லாம பேசிப் பழகுகிறவள்."

"நானும் அவளை குறை சொல்லவில்லையே! அந்த துரைசிங்கம் மனசில் வெசனம் இருந்திருக்கே."

"அவன் என்ன பண்ணினான்?"

"என் நண்பன் சாரதிகிட்ட... 'சரவணன் கனவில் கூட கஸ்தூரியை கல்யாணம் பண்ணிக்க முடியாது'ன்னு சொன்னானாம்."

"என்ன ஒரு நெஞ்சழுத்தம்?"

"அதனால் கஸ்தூரியிடம் நான் கோபமாய் நடந்துகொள்ள வேண்டியதாகிவிட்டது. அவள் என்ன இன்னும் சின்னக் குழந்தையா! உலக நடப்பு தெரிய வேண்டாமா?"

"நிஜம்தான்! ஆனால், நீ மனம்விட்டுப் பேசி இருந்தால், நிலைமை இந்த அளவுக்கு முத்தி இருக்காதே சரவணா. இப்பப் பாரு... அந்தப் படுபாவி நினைச்சதை சாதிச்சிட்டான்."

"ஏன் அத்தை... அவன் என்ன செய்துவிட்டான்...?"

"அவன் ஏதோ செய்திருக்கிறான்! இல்லாவிட்டால் உன் மாமா அவனுக்கு கஸ்தூரியை கல்யாணம் பண்ணி வைக்க முடிவு பண்ணி இருக்கமாட்டார்."

"அத்தை..."

"ஆமாம்! அவரும், அந்த துரைசிங்கமும் இப்ப கல்யாணப் பத்திரிக்கை அடிக்கத்தான் போய் இருக்காங்க."

சரவணனின் முகம் சினத்தைக் காட்டியது. கட்டிலில் கண் மூடிக் கிடந்த கஸ்தூரியைப் பார்த்தான்.

"இவளுக்கு விசயம் தெரியுமா?"

"தெரிஞ்சி இருக்கணும்! அதனால்தான் பாவி மக விஷத்தைக் குடிச்சிருக்காள். இது அந்த மனுசனுக்கு தெரியலையே...!"

சரவணன் கலக்கத்துடன் கஸ்தூரியின் அருகே அமர்ந்து, அவளது கலைந்த தலைமுடியை நீவி சரி செய்தான்.

"தப்பு பண்ணிட்டீங்க அத்தை. அவன் கல்யாணம் வேணாம்னு சொன்னால், அதில் ஏதாவது காரணம் இருந்திருக்கும். எனக்கு தகவல் சொல்வதை விட்டுவிட்டு... துரைசிங்கத்திற்கே கட்டிக் கொடுக்க நீங்க எப்படி முடிவு செய்யலாம்? எனக்கு இவளை நன்றாகத் தெரியும்... இவளுடைய மனசு புரியும். ஒரு நாளும் இவள் என்னைவிட்டு இன்னொருத்தனுக்கு பொண்டாட்டி ஆகமாட்டாள்..."

"இதை அவரிடம் யார் சொல்வது...?"

"யாரும் சொல்ல வேண்டாம்... நான் ஒரு நாளும் கஸ்தூரியை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுக்கமாட்டேன். நீங்க ஒரு காரியம் பண்ணுங்க..."

"என்னப்பா..."

"இப்ப மாமா ஓடி வருவாரில்ல... அவரிடம் ஏன் அவர் இந்த முடிவை எடுத்தாருன்னு கேட்டுச் சொல்லுங்க..."

"சரி..."

கதவு படபடவென்று தட்டப்பட்டது. காயத்திரி திறந்தாள். துரைசிங்கம் பின் தொடர, மகேஷ்வரன் பதற்றமாக உள்ளே வந்தார்.

"என்னடி நடந்தது... என் பொண்ணுக்கு என்ன ஆச்சு?" அவர் பரபரப்பாக கேட்க...

"ம்... பூச்சி மருந்தைக் குடித்துவிட்டாள்" என்று வெறுமையாய் பதில் சொன்னாள் காயத்திரி.

"ஏன்டி.... அப்படியொரு முடிவுக்கு போனாள்?"

"என்னைக் கேட்டால்... எனக்கென்ன தெரியும்? நீங்கதானே அவள்கிட்ட காலையில் பேசிக்கிட்டு இருந்தீங்க. நீங்கதான் ஏன் அவள் இப்படிப் பண்ணினாள்னு காரணத்தைச் சொல்லணும்..."

"நல்லாத்தானே பேசிக்கிட்டு இருந்தா."

"நல்ல யோசிச்சு பதில் சொல்லுங்க... அவள் நல்லாவா பேசினாள்?"

மகேஷ்வரனின் மனதில் 'பளீர்' என்று அந்தச் சிந்தனை வந்தது. காலையில் தான் பேசப் பேச... தனது முகத்தையே பார்க்காமல் சிலையாய் கஸ்தூரி அமர்ந்துவிட்ட கோலம் அவரது மனக் கண்ணில் தோன்றியது.

அறையைவிட்டு வெளியேறும்போது... அவள் 'அப்பா...' என்று அழைத்ததும், அவர் திரும்பி 'என்ன?' என்று கேட்ட போது 'ஒன்றுமில்லை' என்று கூறியதும் நினைவுக்கு வந்தது.

'என் தங்கம்... கடைசியாய் இந்த அப்பனின் முகத்தைப் பார்த்துக்க நினைத்தாளா...?'- அவரின் நெஞ்சம் குலுங்கியது. குமுறியது.

சரவணனின் பார்வை துரைசிங்கத்தை சுட்டெரித்துக்கொண்டு இருந்தது. அவனது பார்வையை லட்சியம் செய்யாமல், கட்டிலில் கிடந்த கஸ்தூரியை எரிச்சலுடன் பார்த்தான் துரைசிங்கம்.

'பாவி மகள்... இந்த ஆட்டம் காட்டுகிறாளே! அந்த மழை நாளில் இவளைத் தொட்டு ஆள நினைச்சால்... வானியாலே அடிச்சு மண்டையை உடைத்தாள். இப்ப ஒரு வழியா என் மாமன்காரனை பண்ணி... கல்யாண பத்திரிக்கை அடிக்கப் போனால்... அந்த

வாசலிலேயே இவள் சாகக் கிடக்கிறாள்னு போன் வருது. சண்டாளி தாலி கட்டாமலும் இவளைத் தொட விடமாட்டேன் என்கிறாள். தாலியைக் கட்டவும் விடமாட்டேன் என்கிறாள். மருந்தைக் குடித்தவள் செத்து தொலைந்திருக்க கூடாதா?'

அவனது மனதில் ஓடிய எண்ணங்களை அறிந்தவன் போல் சரவணன் அவன் தோள் மேல் கை போட்டான்.

"என்னப்பா...?"

"வா... போய் காப்பி குடிச்சிட்டு வரலாம்..."

"கஸ்தூரி இப்படிக் கிடக்கும்போது... என் தொண்டையில் பச்சைத் தண்ணி கூட இறங்காது..."

துரைசிங்கம், மகேஷ்வரனின் அருகில் போய் நின்றுகொண்டான். அவனது நோக்கம் சரவணனுக்கு தெளிவாகத் தெரிந்தது.

## 17

மகேஷ்வரனும், காயத்திரியும் பேசிவிடக்கூடாது. அவளது தாய் மாமனை தனியே விடக்கூடாது. மனைவியுடன் அவர் சமாதானம் ஆகிவிட்டால், சரவணனின் பக்கம் அவர் சாய்ந்துவிடுவார். அந்த வாய்ப்பு ஏற்பட்டுவிடக் கூடாது.

சரவணன், காயத்திரியைப் பார்த்த பார்வையில் செய்தி இருந்தது. அதைப் புரிந்துகொண்ட காயத்திரி சோர்வுடன் தலையைப் பிடித்தபடி எழுந்தாள்.

"என்ன அத்தை...?"

"காலையில் இருந்து காப்பி கூடக் குடிக்கலை சரவணா. தலையைச் சுத்துது. இரண்டு இட்லியைப் பிய்த்து வாயில் போட்டால்தான் சரி வரும்..."

"அப்படியா...? அப்ப மாமா கூடப் போய் சாப்பிட்டுட்டு வாங்க..."

துரைசிங்கம் விழித்துக்கொண்டான். அவனுக்கு சரவணனின் திட்டம் புரிந்துவிட்டது.

"ஏன்ப்பா... இப்ப நீ என்னை காப்பி குடிக்கக் கூப்பிட்டாயே... அத்தைக்கு இட்லி வாங்கிக் கொடுத்துட்டு, நீயும் காப்பி குடிச்சிட்டு வா..."

"அறிவு கெட்டதனமாய் பேசாதேப்பா..."

"ஏன்ப்பா... அப்படி நான் என்ன சொல்லக் கூடாததை

சொல்லிட்டேன்..."

"உனக்கு அறிவே இல்லை துரைசிங்கம். இதை ஆயிரம் தடவை சொல்வேன். அத்தையைக் கூப்பிட்டுக்கொண்டு நான் ஓட்டலுக்குப் போனால்... நம்ம ஊர்க்காரங்க என்ன சொல்வாங்க?"

"என்ன சொல்வாங்க...? அண்ணன் மகனோடு சாப்பிடப் போய் இருக்குன்னு சொல்வாங்க..."

"கூறு கெட்டவனே... மாமா இருக்கும்போது நான் கூட்டிட்டுப் போனால்... புருசன், பொண்டாட்டிக்குள்ள என்ன சண்டையோ... எதுவோ...! அதனாலதான் மகள் மருந்தைக் குடிச்சிட்டான்னு சொல்ல மாட்டாங்களா?"

மகேஷ்வரனின் மனதிற்குள் பொறி தட்டியது. 'அதனால்கூட மகள் இந்த முடிவிற்கு வந்திருப்பாளோ...?' என்று யோசித்தார். எதுவாக இருந்தாலும் இப்போது காயத்திரியைச் சாப்பிட அழைத்துச் செல்வது தன் கடமை என்பதை உணர்ந்தவராய் எழுந்துகொண்டார்.

"வா காயத்திரி... போய் சாப்பிட்டுட்டு வரலாம்."

'என்னது... புருசனும், பொண்டாட்டியும் தனியாச் சாப்பிடப் போகிறாங்களா? விடக்கூடாதே...'

துரைசிங்கம் அவசரமாய், 'நானும் வருகிறேன் மாமா...' என்று தொற்றிக்கொள்ள பார்த்தான்.

"அட இருப்பா... நீ எங்கே போற? இப்போதுதானே உன் தொண்டையில் பச்சைத் தண்ணிகூட இறங்காதுன்னு சொன்னாய்."

"அது இல்லைப்பா... எனக்கும் நா வறண்டது."

"அப்ப... அவங்க ரெண்டு பேரும் வந்த பின்னால், என்கூட வா... நான் நல்லா உன்னை கவனிச்சு அனுப்புறேன்..."

"நீ எதுக்குப்பா என்னைக் கவனிக்கணும்? எனக்கு என் மாமன்தான் எல்லாமும். அவர் என்னைக் கவனிச்சிக்குவார்."

'என்னமாய் கைக்குள் போட்டுக்கிறான்...'- காயத்திரி பல்லைக் கடித்தாள்.

'இத்தனை நாளாய் இவனைக் கவனிக்காமல் போனேனே...!' என்றும் மனதிற்குள் நொந்துகொண்டாள்.

"அட இருப்பா... கஸ்தூரியின் பக்கத்தில் ஆள் இருக்க வேண்டாமா?"

"அதான் நீ இருக்கிறாயே..."

"நான் மட்டும் இருந்தால் ஊர் என்ன சொல்லும்!"

'இவன் எதற்கு இன்றைக்கு ஊரைப் பத்தி அதிகமாய் கவலைப்படுகிறான்...?' துரைசிங்கம் எரிச்சல்பட்டுக்கொண்டு இருந்தபோது,

"அதுவும் சரிதான் சிங்கம். நீ சரவணன் கூட இரு. ரெண்டு பேரும் கஸ்தூரியைப் பார்த்துக்கங்க. நாங்க இப்ப வந்துவிடுவோம்..." என்று சொல்லிவிட்டு... மனைவியுடன் மகேஷ்வரன் சென்றுவிட்டார்.

'போச்சு... போயே போச்சு. அத்தை காதல் பண்ணி... என் மாமனை கல்யாணம் பண்ணிக்கொண்ட மகராசி. இந்த வயசிலேயும் என் மாமன், அத்தை நில்லுங்கன்னு சொன்னா நிற்பார். உட்காருன்னா உட்காருவார். முதன் முதலா இவர்களைப் பிரிச்சு வெச்சு ஜெயிக்கப் பார்த்தால், இந்த சரவணன் கோந்து இல்லாமலே இதுகளை ஒட்ட வைச்சுட்டானே...'

வெறுப்புடன் தாய் மாமனும்... அவருடைய மனைவியும் போன திசையைப் பார்த்துக்கொண்டிருந்த துரைசிங்கத்தின் தோளின் மேல் அழுத்தமாய் தன் கரத்தைப் போட்டான் சரவணன். துரைசிங்கம் அதை விலக்கப் பார்த்தான். முடியவில்லை! இரும்புப் பிடியாய் அவன் தோளில் இருந்தது சரவணனின் கரம்.

"கையை எடு..."

"எடுக்கத்தான் போறேன்... உன் கையை மட்டுமில்லை... தலையையும் சேர்த்து."

"மிரட்டுகிறாயா? சரவணா... நீ கோபம் வந்தால்தான் பொறுக்கி போல் நடந்துகொள்வாய். நான் பிறவியிலேயே பொறுக்கி. உன் தலையை எடுக்க எனக்கு அதிக நேரமாகிவிடாது."

"அதையும் பார்த்துவிடலாம்... டேய், ஆம்பளைன்னா நேருக்கு நேர் என்கூட மோதுடா. அதை விட்டுவிட்டு... பொட்டைச்சி மாதிரி ஏண்டா... முதுக்குக்கு பின்னால வேலை பார்க்கிற?"

"டேய்... அது ராஜதந்திரம். ஜெயிக்க முடியாமல் பேடித்தனமாய் நீ பேசாதே."

"யார் பேடி...? ஒன்றும் தெரியாத சிறு பெண்ணை விஷம் குடிக்கும் அளவிற்கு கொண்டு போன நீ பேடியா... இல்லை நான் பேடியா? ஏண்டா... உன் மாமன் உனக்கு நல்லதுதானே பண்ணுகிறார்? நீ ஏண்டா அவருக்கு துரோகம் பண்ணுகிறாய்?"

"நான் உன்னிடம் அறிவுரை கேட்டேனா...? எனக்கு உபதேசம் பண்ணுகிற வேலையை விட்டுவிட்டு, உருப்படியாய் உன் மாமன் மகள்களில் ஒருத்திக்கு தாலி கட்டி வாழும் வழியைப் பாரு..."

"இதோ பாருடா... எனக்கு இவன் யோசனை சொல்கிறான். டேய் துரைசிங்கம்... எனக்கு என் மாமன் மகளைக் கட்ட ஆசையில்லை. உன் மாமன் மகளைக் கட்டத்தான் ஆசை."

"அது நடக்காது. நான் நடக்க விடமாட்டேன்."

"அது நடக்காது. நான் கல்யாணத்தைத் தடுக்க...?"

"நீ யாருடா என் கல்யாணத்தைத் தடுக்க...?"

இருவரும் உக்கிரமாய் மோதிக்கொண்டு இருக்கையில்... கஸ்தூரி ...ண்டு படுத்து கண் விழித்தாள்.



"அம்மா..."– என்று ஈனஸ்வரத்தில் அழைத்தாள்.

"கஸ்தூரி..."– சரவணன் அருகில் விரைந்தான்.

"அத்தான்... நீங்களா...?"

"நானேதான்... என்ன முட்டாள்தனம் இது?"

"முட்டாள்தான் அத்தான்... முட்டாள்தான். யார் என்ன சொன்னாலும் நம்பிக்கொண்டு இருந்த நான் முட்டாள்தான்."

"போனது போகட்டும்... அலட்டிக்காதே."

அவர்கள் இணக்கமாய் பேசிக்கொண்டு இருந்ததைக் கண்ட துரைசிங்கத்தின் உடல் தகித்தது. அவனும் கஸ்தூரியின் அருகே சென்றான். அவளது நெற்றியில் கரத்தை வைத்தான்.

யாரென்று பார்த்த கஸ்தூரி... அதிர்ந்து போய் அவனுடைய கரத்தை தட்டிவிட்டாள்.

"பாவி... நீயா! எப்படி இங்கு வந்தாய்? அத்தான், இவனை போகச் சொல்லுங்க. இவன் என் கண் முன் நின்றால் நான் இவனைக் கொன்றுவிடுவேன்... ஆமாம்."

"கஸ்தூரி... நான் உன் ஆசை மாமாம்மா..."

"டேய்... இனியொரு முறை இதுபோல பிதற்றினால், நீ செத்துவிடுவாய். போ... என் கண் முன்னால் நிற்காமல் போய்விடு."

கஸ்தூரி வெறி கொண்டவளாய்... கட்டிலின் அருகே இருந்த எதையோ எடுத்து அவன் மீது வீசினாள். துரைசிங்கம் அவசரமாய் விலகிக்கொள்ள... அறைக்குள் வந்துகொண்டிருந்த செல்வநிதியின் காலடியில் அது விழுந்தது.

"என்னம்மா கஸ்தூரி...?"– செல்வநிதி பதற்றத்துடன் கேட்டாள்.

"அத்தை... அத்தை..."– கஸ்தூரி தேம்பினாள்.

சரவணன் சட்டென்று அருகில் அமர்ந்து, அவளது தலையைத் தாங்கிக்கொண்டான். அவளது மடியில் முகம் புதைத்து அவளிடம் ... அவளது உடலை நனைக்க– அவன் குலுங்கினான். கண்ணீர்... அவளது கண்களிலும் அந்த குலுங்கலுடன் ...

செல்வநிதியை பார்த்தான். அவளது யோசனையுடன் பார்த்தாள். தன் ... தெரிந்தது. துரைசிங்கத்தை அவன் சரவணனிடம் நீட்டிவிட்டு மகனிடம் கையில் இருந்த துணிப்பையை ... கூறினாள்.

"துரைசிங்கம்... வெளியில் வா..."

"எதுக்கு...?"

"உன்கிட்ட பேசணும்."

"வர முடியாது..."

"இப்போ வரப் போகிறாயா... இல்லையா?"

"முடியாதும்மா."

"இப்ப நீ அப்பன் இல்லாத பிள்ளை. இப்போ என்கூட வெளியில வரலைன்னா... அம்மாவும் இல்லாத பிள்ளையாய் ஆகிவிடுவாய். தெரிந்து கொள்."

"அம்மா..."

"நீ என்னை அம்மான்னு நினைச்சு பூஜை பண்ண வேண்டாம். மனுஷியாய் நினைச்சு... என் வார்த்தைக்கு மதிப்பு கொடு."

செவ்வந்தி முகம் இறுகி வெளியில் நடந்தாள்.

துரைசிங்கம் மவுனமாக பின் தொடர்ந்தான்.

# 18

காலடியோசை தேய்ந்து மறைந்ததும், தன் மடியில் கிடந்த கஸ்தூரியின் முகத்தை தன் பக்கமாய் திருப்பினான் சரவணன். அவள் பார்க்க மறுத்தாள்.

"கஸ்தூரி..."– அழுத்தமாய் அழைத்தான்.

"ம்..." அவளது குரலில் கண்ணீர் இருந்தது.

"என் முகத்தைப் பார்..." அவனது குரலில் கண்டிப்பு தொனித்தது.

அவள் மாட்டேன் என்று தலையை ஆட்டினாள்.

"முட்டாள்... என் முகத்தைப் பார்..."

"மாட்டேன்... எனக்கு அதற்கு அருகதை இல்லை."

சரவணனின் விழிகளில் அதிர்வு தெரிந்தது. கஸ்தூரி மீண்டும் கதற ஆரம்பிக்க... அவன் முரட்டுத்தனமாய் அவளது முகத்தை நிமிர்த்திப் பார்த்தான்.

"என்னடி நடந்தது...?"

"அத்தான்..."

"கதறாதே... நீ அழுதால் நான் தாங்கமாட்டேன். அவன் என்ன செய்தான்? ஏன் அவனைக் கொல்லத் துடிக்கிறாய்? எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லு..."

"அத்தான்..."

"கஸ்தூரி... திரும்பவும் அழ ஆரம்பிக்கிறாயே! ஒன்றை மட்டும் புரிந்து கொள். உனக்கு எது நடந்திருந்தாலும்... நான் உன்னை ஏற்றுக்கொள்வேன். நான் உன்னை காதலிக்கிறேன்டி. இது என் [illegible]

புரியவில்லை. சொல்லு... என்ன நடந்தது? அவன் உன்னிடம் தவறாய் நடந்தானா?"

"தவறாய் நடக்க முயன்றான்"– என்ற கஸ்தூரி அந்த மழை நாளை விவரித்தாள்.

அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவளது முகம் ஆயிரமாயிரம் உணர்வுகளை பிரதிபலித்தது.

"பொன்னம்மாள் மட்டும் வராமல் இருந்திருந்தால்... நான் அவனை அடித்தே கொன்றிருப்பேன். பாவி... தப்பிவிட்டான். ஆனால், அத்தான்... அவன் என்னை..."

"ச்சு..."

சரவணன் சட்டென்று எழுந்து... அறைக் கதவை அடைத்தான். ஒரே எட்டில் கஸ்தூரியின் அருகே வந்து. அவளை எழுப்பி நிறுத்தினான். நிற்க முடியாமல் தொய்ந்து சரிந்தவளை... தன்னுடன் சேர்த்து அணைத்து... அவளுடைய கழுத்தில் முத்தமிட்டான்.

கஸ்தூரி நெகிழ்ந்து போனாள். அவனது கையில் பாகாய் உருகினாள். அவளது முகம் திருப்பி... இதழோடு இதழ் பதித்தான். விழி மூடி... அவனுடன் இசைந்து நின்றவளைப் பார்த்து... கிசுகிசுப்பான குரலில் கேட்டான்.

"இப்போது சொல்... அவன் தொட்டபோது... நீ இப்படி கிறங்கி நின்றாயா?"

"ச்சீ..." அருவருப்புடன் முகம் சுளித்தாள் கஸ்தூரி.

"இப்போது புரிகிறதா... அவனது தொடுகைக்கும், என் தொடுகைக்கும் உள்ள வித்தியாசம்? மக்கு... ஒருவன் உன்னிடம் தவறாக நடந்துகொள்ள முயற்சி செய்திருக்கிறான். நீ அவனிடம் இருந்து தப்பியதோடு இல்லாமல்... அவனையும் தண்டித்து விரட்டி இருக்கிறாய். எனக்கு உன்னை நினைத்தால் எவ்வளவு பெருமையாய் இருக்கிறது தெரியுமா? நீ விவரம் இல்லாமல் அவன் நெஞ்சில் சாய்ந்து அழுது தொலைத்தபோது நான் ரொம்பவும் இடிந்து போனேன் தெரியுமா...?"

"அவன் மேல் சாய்ந்து அழுதேனா? நான் மரத்தின் மீதுதானே சாய்ந்து அழுதேன்...?"

"என்ன சொல்கிறாய்?"

"ஆமாம்... அவன் அங்கே நின்றது கூட எனக்குத் தெரியாது. அவனாக என் பக்கத்தில் வந்து நின்று கொண்டான். நீங்கள் அதை தப்பாக நினைத்துவிட்டீர்களா?"

"அட... ஆமாம்டி. தூரத்தில் இருந்து பார்த்தபோது. நீ அவன் மேல் சாய்ந்து அழுதது போல் தெரிந்தது. இப்போதுதான் எனக்கு மனம் நிம்மதியானது. ஆனாலும், அவனுடன் சைக்கிளில் முன்பக்க கம்பியில் [illegible]

அந்தப் பக்கம் போனவுடனே... இந்தப் பக்கம் அவன் மருந்தைக் குடித்துவிட்டானே... ஏன்?"

மகேஷ்வரன் அதிர்ந்தார்.

## 19

மகேஷ்வரனின் அறிவுக்கண்ணை திறக்க நினைத்தாள் காயத்திரி.

"ஏன்...?"- அவர் புரியாமல் விழித்தார்.

"நான் உங்களிடம் கேட்டால்... நீங்கள் அதே கேள்வியை என்னிடம் திருப்பிக் கேட்கிறீர்களா? சரி... இந்த அறிவாளி ஏன் அப்படியொரு முடிவை எடுத்தார்?"

"என்னா... கஸ்தூரியும், துரைசிங்கமும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள். இது நமக்கு தெரியாமல் போய்விட்டது."

"அடடா... அப்படியா... அப்புறம்...?"

"ஏண்டி... நான் என்ன வேடிக்கைக் கதையா சொல்றேன்?"

"உங்களுக்கு கதை சொல்லத் தெரியாது... அது எனக்கும் தெரியும். உங்களுக்கு இந்தக் கதையை யார் சொன்னது?"

"துரைசிங்கம்தான் சொன்னான். 'ஏன் மாமா... ஏழை காதலிக்கக் கூடாதா?'ன்னு கேட்டான்..."

"ச்ச...ச்ச... நெஞ்சைத் தொட்டுட்டான். உங்களுக்கு அப்படியே... நாம் காதல் செய்த காலத்தில் நடந்ததெல்லாம் நினைவுக்கு வந்திருக்குமே...?"

"எப்படிடீ... இவ்வளவு சரியா சொல்றே?"

"வெத்தலையில் மை தடவிப் பார்த்தேன். ம்... நல்லா வந்திரும் என் வாயில. ச்சே... மனுசனுக்கு வயதானால் அறிவு கூடணும். இங்கே குறையுது..."

"துரைசிங்கத்தை நீ சந்தேகப்படுறாயா...?"

"இதுக்கெல்லாம் நான் பதில் சொல்லமாட்டேன். இதே கேள்வியைச் சரவணனைப் பார்த்து நீங்கள் கேட்டிருந்தால், நான் பதில் சொல்லலாம். அவன் என் அண்ணன் மகன். துரைசிங்கம் என் நாத்தனாரின் மகன். அதனால், நான் வேணும்னே அவன் மேல் பழி போடுவதாய் ஊர் சொல்லிவிடும்."

"காயத்திரி... நீ என்னடி சொல்கிறாய்...?"

"துரைசிங்கம் சொல்வது உண்மைதானான்னு ஒரே ஒரு கேள்வியை கஸ்தூரியிடம் கேட்டிருந்தால் இப்படி நடந்திருக்காது. என்னைச்



சொல்லிவிட்டு... நீங்கள் இப்போது என்னை பண்ணி வைத்து இருக்கிறீர்கள்? உங்கள் தங்கை மகன் சொல்வது உண்மைதான்னு முழுதாய் நம்பலாமா! கஸ்தூரியிடம் உண்மை என்னன்னு ஒரு வார்த்தைக் கேட்டிருக்க வேண்டாமா?"

"கஸ்தூரி... நிச்சயம் பண்ணின கல்யாணத்தை நிறுத்தினானே?"

"அது ஏன்னு அவளிடம் கேட்க வேண்டியதுதானே!"

"அவள்தான் காரணம் கேட்காதீங்கன்னு அழுதாளே?"

"அப்போ... உங்களிடமும், என்னிடமும் சொல்ல முடியாத காரணம் எதுவோ... அவளுடைய கல்யாணத்தை நிறுத்தி இருக்கிறது. துரைசிங்கத்தின் மீதான காதலை நம்மிடம் சொல்ல அவள் ஏன் தயங்க வேண்டும்? அவனும் முறைப் பையன்தானே...!"

"உன்னிடம் பயந்திருக்கலாம்..."

"நான் அவளைப் பயமுறுத்தியது இல்லையே..."

"சரவணன் உன் அண்ணன் மகனாயிற்றே...?"

"அதைச் சொல்லி அவளை நான் கல்யாணத்திற்கு சம்மதிக்க வைக்கலையே! உங்களிடம் அவனாகத்தானே சம்மதம் சொன்னாள்...?"

"நேற்று அவள் கல்யாணம் வேண்டாம் என்றதும் கோபப்பட்டாயே!"

"பரிசம் போட்ட கல்யாணத்தை நிறுத்துவது தப்பு. இதுவே மாப்பிள்ளை சரவணனாக இல்லாமல்... துரைசிங்கமாக இருந்திருந்தாலும் நான் கோபப்பட்டிருப்பேன். எனக்கு என் அண்ணன் வேறு... செல்வந்தி வேறில்லை..."

"துரைசிங்கம் படிக்காதவன்... ஊர்சுற்றி... குடிகாரன்... என்றெல்லாம் பழித்தாயே..."

"உண்மையைத்தானே சொன்னேன்! இதே விசயங்கள் சரவணனிடம் இருந்திருந்தால், அதையும் தயங்காமல் சொல்லி இருப்பேன். எனக்கு என் பெண்ணின் வாழ்க்கை முக்கியம். அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறவன்... நல்லவனாக இருக்க வேண்டாமா!"

"ஆனால்... துரைசிங்கம் சொன்ன காதல் விவகாரம்..."

"பொய்..."

"அவனும், கஸ்தூரியும் காதலித்தது!"

"கட்டுக்கதை..."

"கஸ்தூரி அவனிடம் அழுதாளாமே...!"

"அவன் சொல்வது உண்மையாக இருந்திருந்தால்... அவள் துரைசிங்கத்துடன் கல்யாணம் என்றதும் மகிழ்ந்து போயிருக்க வேண்டுமே... ஏன் மருந்தைக் குடித்தாள்...?"

"நான் தப்புச் செய்துவிட்டேனா?"

"ஆமா..."

"இப்போ என்ன செய்வது?"

"விசயத்தை ஆறப் போடுவோம். சரவணன் வேறு ஒன்றைச் சொல்லுகிறான்..."

"என்னவாம்...?"

"அவனும், கஸ்தூரியும் காதலர்களாம். அதனால்தான் என் அண்ணன், மகனுக்காக பெண் கேட்டு வந்தாராம். அவங்க ரெண்டு பேருக்கும் ஒரு சின்ன விசயத்தில் கொஞ்ச நாட்களாவே மனஸ்தாபமாம். சரவணனோட மாமன் மகள் மேல் நம்ம கஸ்தூரிக்கு பொறாமையாம்..."

"இது என்னடி... நீ இப்படிச் சொல்ற? பரிசம் போட்ட பின்னால்... கஸ்தூரி, சரவணனை கோவிலில் சந்தித்துப் பேசுவது எனக்குத் தெரியும்..."

"தெரிந்துமா... அவளுக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லைன்னு நினைத்தீர்கள்...?"

"சரவணன் தானாக வந்து பேசி இருப்பான்னு நினைத்தேன்டி..."

"இப்படி நீங்களாகவே எதையாவது நினைத்து தொலையுங்க... எனக்கு நல்லாத்தான் வருது வாயில..."

"நானும் அப்போதிருந்து பார்க்கிறேன்... வாயில் நல்லா வருது, வருதுன்னு சொல்லிக்கிட்டே இருக்கே! அப்படி என்னதான் உன் வாயில் வரும்.?"

"ச்சு... நீங்க ஒரு மனுஷன்னு உங்ககிட்ட வீட்டு விசயம் பேச வந்தேன் பாருங்க... என்னைச் சொல்லணும்..."

"விடு...விடு. என்கிட்ட விசயத்தைச் சொல்லிட்ட இல்ல... இனி துரைசிங்கத்தை நான் பார்த்துக்கிறேன்."

மருத்துவமனை வளாகத்தில் துரைசிங்கத்துடன் பேசிக்கொண்டிருந்த செவ்வந்தியின் குரலில் என்றும் இல்லாத கண்டிப்பு இருந்தது.

"சொல்லுடா..."

"எதைச் சொல்லச் சொல்ற?"

"உன்னைக் கண்டாலே கஸ்தூரிக்கு ஏன் கொலைவெறி வருது?"

"என்னைக் கேட்டால்... எனக்கு எப்படித் தெரியும்?"

"அப்போச் சரி... அவளிடமே போய் கேட்கிறேன்."

"இங்க பாரும்மா... இதிலெல்லாம் நீ தலை கொடுக்காதே..."

"எதிலெல்லாம் நான் தலை கொடுக்கக்கூடாது? நல்லா இருந்த பொண்ணு... கல்யாணத்துக்கு காத்திருந்த பொண்ணு... விஷத்தைக் குடிச்சு... உயிரை விடத் துணிஞ்சிருக்கா... அது ஏன்டா?"



"ஏம்மா... உனக்கே இது நல்லா இருக்கா? அது மருந்தைக் குடிச்சதுக்கு நான் எப்படி பொறுப்பாளி ஆவேன்? என்னவோ... அவளை வாயைத் திறக்கச் சொல்லி... அவ வாயில் நான் பூச்சி மருந்தை ஊத்தியது போல இப்படி குடைகிறாயே...?"

"துரைசிங்கம்... உன்னை எனக்குத் தெரியும்டா..."

"ஏம்மா... பெத்த மகனை எந்த தாய்க்குத்தான் தெரியாது! இது ஒரு விஷயம்னு... அதுக்கு இம்மாம் பெரிய 'பில்ட் அப்' கொடுத்து பேசிக்கிட்டு இருக்கயே... வெளியே சொல்லிராதே... சிரிச்சிரப் போறாங்க..."

"யாரும் சிரிச்சிடக் கூடாதுன்னுதான் இத்தனை நாளும் உன் குறைகளை... இழுத்துப் போர்த்தி மூடி மறைத்து வாழ்த்துக்கிட்டு வந்தேன். ஆனா, எப்போ ஒரு வயசுப் பெண்ணின் கையைப் பிடிச்சு நீ இழுத்துட்டியோ... அதற்கு மேல் நான் பொறுமையா இருக்க மாட்டேன்..."

"வயசுப் பெண்ணின் கையைப் பிடிச்சு நான் இழுத்ததை நீ பார்த்தியா? ஏம்மா... நீவேற எழவைக் கூட்டறே...!"

"டேய்... இந்த பம்மாத்து வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம். நானும் பொம்பளதான்டா. ஒரு பொம்பளைக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம் வருதுன்னு எனக்கும் தெரியும்."

"சும்மா நீயாய் கற்பனை பண்ணிக்கிட்டு. இல்லாததையும் பொல்லாததையும் சொல்லாதே."

"டேய்... உனக்கு கஸ்தூரியின் மேல் இருந்த ஆசை எனக்குத் தெரியுங்கிறதை நீ மறந்திராதே..."

"தெரிஞ்சு என்ன செய்து கிழிச்சே! நானாவது... ஆயிரம் பொய்யை அவிழ்த்துவிட்டு... உன் அண்ணன்காரனிடம் மனசை மாற்றி... கஸ்தூரியை எனக்கே கட்டிக் கொடுக்க சம்மதிக்க வைச்சேன்..."

செவ்வந்திக்கு தன் காதுகளையே நம்பமுடியவில்லை...

## 20

"என்னடா சொன்னாய்?"

"ஆமாம்... சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு சொன்னேன்..."

"என் அண்ணன்... உனக்கு கஸ்தூரியைக் கட்டி வைக்க நினைத்தாரா? இதை என்னை நம்பச் சொல்றாயா?"

"ஹா... நீ இப்படித்தான் சொல்லுவாய். நாங்க இப்ப எங்கிருந்து வருகிறோம்னு தெரியுமா? கல்யாண பத்திரிக்கை அடிக்கக் கொடுக்கப் போயிருந்தோம். இவன் விஷத்தைக் குடிச்சிட்டான்னு தெரிஞ்சதால்

நினைத்து கூனிக் குறுகிப் போனாள்.

மகேஷ்வரனும் மனைவியின் தாக்குதலைக் கவனிக்கத் தவறவில்லை. துரைசிங்கத்தின் வாக்கில் சந்தேகம் வந்துவிட்ட பின்னால் முழு மனதாய் அவனுக்கு தன் ஆதரவைக் கொடுக்கவும் அவரால் முடியவில்லை. வேகமாய் நடையைப் போட்டார். மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர்.

கஸ்தூரி இருந்த அறைக்குள் சென்றபோது, கண்ட காட்சி... அவர்கள் ஒவ்வொருவர் மனதிலும் ஒரு வகையான உணர்வைக் கொடுத்தது.

புத்துணர்வுடன்... தலையணையை சாய்வாக வைத்து, அதில் சாய்ந்து அமர்ந்து கொண்டு... சிரித்த முகமாய்... சரவணன் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள் கஸ்தூரி.

அவளிடம் நகைச்சுவையாய் பேசியபடியே... ஆரஞ்சுப் பழத்தை உரித்து... அவள் கையில் சாப்பிடக் கொடுத்தான்.

மகள் தேறி எழுந்து அமர்ந்திருப்பதோடு... சிரித்துக்கொண்டும் இருப்பதில்... உயிர் மீண்ட உணர்வைப் பெற்றனர் மகேஷ்வரனும், காயத்திரியும்.

தன் மகள் மேல் அதீத கோபத்துடன் இருந்தவளை மாற்றி,கனிவுடன் சிரிக்க வைத்துவிட்ட சரவணனையும்... அவன் முகத்தை காதலுடன் பார்த்துக்கொண்டிருந்த கஸ்தூரியையும் கண்ட செவ்வந்தி- அவர்கள் போன்ற மனம் ஒப்பிய ஜோடி பிரியக் கூடாது என்று கடவுளை வேண்டினாள்.

'என்னம்மா... அவன்கிட்ட சிரிச்சிப் பேசிக்கிட்டு இருக்கா பாரு... கைகாரி. என்னைப் பார்த்தால் எதையாவது தூக்கி எறியத் தோன்றுகிறது இவளுக்கு. அவனைப் பார்த்தால் பல்லைக் காட்டத் தோன்றுகிறதாக்கும்...?'- துரைசிங்கத்தின் மேனி எரிதணல் போல் ஆனது.

"கஸ்தூரி..."- மகேஷ்வரன், மகளின் அருகே அமர்ந்தார்.

"அப்பா..."

"ஏன்ம்மா இப்படியொரு காரியத்தைச் செய்தே...?"

அக்கேள்விக்கு பதில் அளிக்க முடியாமல் உதட்டைக் கடித்து... தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டுவர முயன்றவளாய் தலையைக் குனிந்துகொண்டாள் கஸ்தூரி.

அவளைப் பேசவிட்டால் விவகாரம் பெரிதாகிவிடும் என்ற சுதாரிப்புடன் துரைசிங்கம் அவசரமானான்.

"இப்ப எதுக்கு மாமா வேண்டாத கதையையெல்லாம் கேட்டுக்கிட்டு! அதான் நம்ம கஸ்தூரி பொழைச்சு எழுந்து உட்கார்ந்துவிட்டாளே- இனி ஆகவேண்டியதைப் பார்ப்போம். பழசைக் கிளறி... அது மனசை



கஸ்தூரி வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அதை ஜாடையால் கணவனுக்கு உணர்த்தினாள் காயத்திரி. மகேஷ்வரன் புரிந்துகொண்டதற்கு அடையாளமாய் தலையை ஆட்டினார்.

கணவன்- மனைவியின் பார்வைப் பரிமாற்றங்களை துரைசிங்கம் கவனித்துவிட்டு... கவலையில் ஆழ்ந்தான்.

'என்னடா இது... ஒரு இட்லியை விழுங்கிவிட்டு வருவதற்குள்ளே... என் அத்தைக்காரி, மாமன்காரனை கைக்குள் போட்டுவிட்டாளே! இனி என்ன செய்வது?'- திகைத்தான்.

# 21

துரைசிங்கம் கவலையில்... சரவணனைக் கவனிக்க மறந்துவிட்டான்.

'நான் எவ்வளவு கஷ்டப்பட்டு... என் மதிகெட்ட மாமனுக்கு மந்திரித்து வைத்திருந்தேன். ஒரே நிமிடத்தில் எல்லாத்தையும்... என் மாமன் பெண்டாட்டியும், மகளும் கொட்டிக் கவிழ்த்துவிட்டார்கள். இனி எப்போ இந்த மனிதன் என்னிடம் தனியாக அகப்படுவது... எப்படி நான் மந்திரிப்பது...?'

அவன் கற்பனையில் ஆழ்ந்திருக்க... காயத்திரி தன் கணவனிடம் சரவணனைப் புகழ்ந்துகொண்டிருந்தாள்.

"காலையில் நீங்களும் வீட்டில் இல்லை... அவளானால் இப்படியொரு காரியத்தைச் செய்துவிட்டு- இப்பவோ... பெறகோன்னு கெடக்கிறா. சரவணனுக்கு தகவல் கொடுத்தவுடன் அடுத்த நிமிசம் காரோடு வந்து... காயத்திரியை அள்ளிப் போட்டுகிட்டு ஓடி வந்திருச்ச. நெருக்கடி நேரத்தில் அவன் மட்டும் இல்லைன்னா... இப்ப என்ன ஆகி இருக்குமோ...?"

மகேஷ்வரன் தன் மைத்துனன் மகனைப் பார்க்க... அவன் அமைதியுடன் பேசினான்.

"இது என் கடமை மாமா. கஸ்தூரிக்கு ஒன்று என்றால்... அது என்னைப் பாதிக்கிற விசயம்."

பொறுப்புடன் பேசியவனைப் பார்த்த செவ்வந்தி, தன் மகனும் அங்கு இருக்கும் நினைவில்லாமல்...

"அது சரிப்பா... ஒரு கண்ணில் அடிபட்டால், இன்னொரு கண்ணுக்கும் வலிக்கும்தானே! உடந்தைப்பட்டவன்... உன் பொறுமைதானே காப்பாற்றி வைக்கணும்..." என்றான்.

மாமா... நான் சொல்வது சரிதானே?"– இது துரைசிங்கம்.

'விட்டால் இவன் பேசிக்கொண்டே போகிறானே...!' என்று அங்கிருந்த காயத்திரியும், சரவணனும் வெகுண்டாலும்... இதில் கஸ்தூரியின் வார்த்தைதான் முக்கியம் என்பதால் அமைதி காத்தனர்.

## 22

அலை கடலாய் கொந்தளித்த மனத்தை அமைதிப்படுத்த முயன்றுகொண்டிருந்தாள் கஸ்தூரி.

இது அவளாக இழுத்துக் கொண்ட துன்பம். அவள் மட்டும் திருமணம் வேண்டாம் என்று சொல்லாமல் இருந்திருந்தால்... அவள் மேல் உயிரையே வைத்திருக்கும் அவளுடைய காதலனும், தாயும்... துரைசிங்கத்தின் முகமூடியைக் கிழித்து... அவனது பொய் முகத்தை அம்பலப்படுத்தி இருப்பார்கள்.

ஆனால், அவள்தான் சரவணனைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை என்று சொல்லி... அவனை இதில் உடனடியாக தலையிட முடியாமல் முன்வேலி போட்டு வைத்துவிட்டாளே!


இன்னொரு விஷயம். அவனுக்கு ஆதரவாக காயத்திரி வாயைத் திறந்தால்... அண்ணன் மகனுக்காக மகளை வற்புறுத்துகிறாள், நாத்தனார் மகன் என்பதற்காக துரைசிங்கத்தை வெறுக்கிறாள் என்று ஆகிவிடும்.

பூப்போல வளர்ந்த மகள்... திரும்பவும்.. தவறான முடிவை எடுத்துவிட்டால் என்ன செய்வது என்ற தவிப்பில் காயத்திரியின் கண்கள் கலங்கிவிட்டன.

கஸ்தூரி என்ன செய்யப் போகிறாள்? எதுவானாலும் அவளது கடைசி முயற்சி வரை காத்திருக்கலாம். அவளால் முடியாவிட்டால் களத்தில் இறங்கிக்கொள்ளலாம் என்ற நினைவு சரவணனுக்கு...

செவ்வந்தி வாயைத் திறக்கவே முடியாது. ஒரு வாசகம் பேசினாலும் அதை திருவாசகம் போல் அவள் பேசி வைத்துவிட– அப்போது ஆரம்பித்தவன்தான் துரைசிங்கம். தன் முறைப்பை நிறுத்தவே இல்லை.

இவனுக்கு இருக்கும் ஒரே துருப்புச் சீட்டு... கஸ்தூரி விருப்பமில்லை என்று சொல்லி திருமணத்தையே நிறுத்த முனைந்தது. அவனுக்கு... நீது இருக்கும்



# 24

மகேஷ்வரனின் வீட்டில் சொந்த பந்தங்களும், ஊராரும் திரண்டு இருந்தனர். அவருடைய வீட்டில் ஏதோ 'ஹோமம்' வளர்த்து பூஜை செய்யப் போவதற்கான அறிகுறி தெரிந்தது. ஊர் மக்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்...

"ஏன்பா ராமசாமி... என்னப்பா விசேஷம்?"

"என் வீட்டில் ஒரு விசேஷம் நடத்தப் போகிறேன். எல்லோரும் குடும்பத்தோட வந்திரனும்னு சொல்லி அழைச்சான். என்னன்னு சொல்லலையே... உனக்கு ஏதாவது தெரியுமா...?"

"நீ என்கிட்ட கேட்டதைத்தான்... நான் இதுவரைக்கும் மத்தவங்ககிட்ட கேட்டுக்கிட்டு இருந்தேன். ஒருவேளை... பெண்ணின் கல்யாணமாய் இருக்குமோ...?"

"அதுக்குத்தான் இன்னும் ஆறு நாள்கள் பாக்கி இருக்கே. ஊர் முழுக்க அழைப்பு வைச்சிருக்காங்களே. நீ அதைப் பார்க்கலியா?"

எல்லோரும் என்ன விசேஷம் என்று புரியாமல் பேசிக்கொண்டு இருக்கையில்... மகேஷ்வரன், காயத்திரியுடன் மனையில் அமர்ந்தார். துரைசிங்கத்தை அழைத்தார். அருகில் அமரச் சொன்னார். புரோகிதர் மந்திரம் ஓத... அவர் கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார்.

"எனக்கு மகன் இல்லை... ஒரே மகள் மட்டும்தான். அவளுக்கும் கல்யாணம் பண்ணி வைத்து, புருசன் வீட்டிற்கு அனுப்பிவிடப் போகிறேன். எனக்குக் கொள்ளி போடவும், எனக்குப் பின்னால் என் மகளுக்கு அண்ணனாக இருந்து... பிறந்த வீட்டுச் சீர் செய்யவும் எனக்கு மகன் வேண்டும். அதனால், என் தங்கச்சி மகன் துரைசிங்கத்தை என் மகனாக தத்து எடுத்துக்கொள்ளப் போகிறேன்.

இன்றிலிருந்து இவன் என் மகன். என் மகள் கஸ்தூரிக்கு அண்ணன். என் சொத்தை இரு பங்காகப் போட்டு, ஒரு பங்கை கஸ்தூரிக்கு கொடுத்துவிட்டு... மறுபங்கை துரைசிங்கத்திற்கு கொடுக்கிறேன்."

துரைசிங்கத்தால் நடப்பதை நம்ப முடியவில்லை. ஒருவன் செய்த தவறுக்கு அவனுக்கு தண்டனை கொடுக்க வேண்டும்... அதை விட்டுவிட்டு, களவு செய்ய வந்தவனை காவலுக்கு அமர்த்தி அடியோடு அவனைத் திருத்திவிட்டார் மகேஷ்வரன்.

அடையாளம் இல்லாமல் அலைந்தவன்... அவருக்கு வாரிசு ஆனான். முப்பது ஏக்கர் பூமிக்கு சொந்தக்காரனாக மாறினான். மனக்கசடு எல்லாம் மறைய மகேஷ்வரனை கையெடுத்துக் கும்பிட்டான்.

ஊரையே அடைத்துப் பந்தல் போட்டு... மூன்று நாள்கள் திருமண விருந்து போட்டு... வெகு விமரிசையாய் சரவணன்-கஸ்தூரி திருமணம் நடைபெற்றது.

நிற்காமல் ஓடி...ஓடி...வேலை செய்தான் துரைசிங்கம். மணப் பெண்ணின் அண்ணனாக அவன் சரவணனுக்கு பாதபூஜை செய்து கைவிரலில் மோதிரம் போட...... சரவணன், கஸ்தூரியைப் பார்த்தான்.

'பரவாயில்லை... மாமா நல்ல வேலை செய்திருக்கிறார்' என்று அது கூறியது.

"சரண்... உன்னையும், கஸ்தூரியையும் பக்கத்தில் வைத்துப் பார்த்தால் காட்சிக் கொடி போலவே இருக்கிறது..." என்று கிண்டல் செய்தான் ஷாஷா.

"ஏன்... அப்படிச் சொல்கிறாய்!"

"நீ கறுப்பு... கஸ்தூரி சிகப்பு. வேறு எப்படி இருக்கும்?"

"உன்னை..."

சரவணன் கையை ஓங்க... ஷாஷா சிரித்துக்கொண்டே ஓடிவிட்டான். புன்னகையுடன் கஸ்தூரி... சரவணனை ஏறிட்டாள்.

"என்னடி அப்படிப் பார்க்கிறாய்?"

"இவனையா நான் சந்தேகப்பட்டேன்?"

"இவனைத்தான் சந்தேகப்பட்டாய்..."

"என்னை மன்னிச்சிடுங்க..."

"மன்னிப்பதா! ஊஹூம்... உன்னை எப்படியெல்லாம் தண்டிக்கப் போகிறேன் தெரியுமா...? இன்றைக்கு இரவில்... அதை நன்றாக தெரிந்துகொள்வாய்..."

சொன்னதைச் செய்தான் சரவணன். அவன் கொடுத்த அன்புத் தண்டனைகளில் மயங்கிப் போய்... அவனைச் சரணடைந்தாள் கஸ்தூரி... காதலாகி, காமமாகி கலந்து உருகிய பின்... விடியலின் அருகாமையில் அவனது முடிகோதி அவள் கேட்டாள்.

"என்னடி.... தூக்கம் வரலையா...!"

"ம்... நான் காதலில் தோற்றுப் போய்டுவேனோன்னு நினைத்தேன். என் மனதை உங்களிடம் சொல்லச் சொல்லி... காற்றிடம் சொல்வேன்."

"காற்றிடம் சொல்வாயா...!"

"ஆமாம்... எங்கும் பரந்து நிறைந்திருக்கும் காற்றோடு நான் தூதுவிட்டேன். அது உங்களிடம் என்ன சொல்லியதோ... தெரியவில்லை! என் காதல் ஜெயித்துவிட்டது."

காற்றோடு தூது விட்டவள்... மனம் நிறைய அவன் மார்பில் சாய்ந்தாள்... மணம் வீசும் மலராக!!

**(முடிந்தது)**